பக்கங்கள் : பதினெட்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 ஆடி 23 செவ்வாய்க்கிழமை (09.08.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :256

## பிரதி அமைச்சர் மேர்வின் சில்வாவுக்கு எதிர்ப்பு:

# தலைநகரில் தமிழர், முஸ்லிம்கள் இணைந்து வரலாறு காணாத கண்டன ஆர்ப்பாட்டம்!

## பேரணியாகச் சென்று பிரதமரிடம் மகஜர்

கொழும்பு, ஓகஸ்ட் 09

**மலையகத் தமிழ் மக்களை இழிவுபடுத்திய பிரதி அமைச்சர் மேர்வின் சில்வாவுக்குக் கண்டனம் தெரிவித்து தமிழ், முஸ்லிம் மக்கள் ஒன்றிணைந்து நேற்றுத் தலைநகரில் வரலாறு காணாத ஆர்ப்பாட்டமும், கண்டனப்பேரணியும் நடத்தினார்கள்.**

**கோட்டை ரயில் நிலையத்துக்கு முன் திரண்ட அவர்கள் அலரிமாளிகைக்குப் பேரணியாகச் சென்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து அவரிடம் நேரில் மகஜர் சமர்ப்பித்தனர்.**

மலையக மக்கள் முன்னணி ஏற்பாட்டில் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மேல்மாகாண மக்கள் முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் கொழும்பு வர்த்தக சங்கம் போன்றவையும் இணைந்திருந்தன.

அனைத்துத் தமிழ்க் கட்சிகளின் தலைவர்களும், முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தவிசாளர் பஷீர் சேகுதாவூத்தும், சிங்கள இடதுசாரிக் கட்சித் தலைவர்களும் இந்த ஆர்ப்பாட்டத்திலும் பேரணியிலும் கலந்து கொண்டனர்.

இரண்டரை மணியளவில் ரயில் நிலையம் முன்பாக ஆரம்பிக்கப்பட்ட இந்த ஆர்ப்பாட்டம் சுமார் ஒருமணிநேரம் இடம்பெற்றது. பின்னர் அங்கிருந்து பேரணியாகப் புறப்

(18ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் நேற்று துக்கம்!

திருகோணமலை, ஓக. 9

கடந்த வாரம் இணுவிலில் இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட திருகோணமலையைச் சேர்ந்த ஜெயசீலன் சாந்தரூபனின் படுகொலையைக் கண்டித்தும் படையினரின் போர் நிறுத்த மீறல்களைக் கண்டித்தும் திருகோணமலை மாவட்டத்தில் நேற்று துக்கம் கடைப்பிடிக்கப்பட்டது.

நகரில் உள்ள கடைகள், வர்த்தக நிலையங்கள், வீடுகள் என்பவற்றில் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. வாகனங்களிலும் கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டிருந்தன. சிகையலங்கரிப்பு நிலையங்களும் சினிமா திரையரங்குகளும் மூடப்பட்டிருந்தன.

அசம்பாவிதங்கள் ஏதும் இன்றி அமைதியான முறையில் துக்கம் கடைப்பிடிக்கப்பட்டது. (க)

## பொலீஸ் அதிகாரி கொலை குறித்து விசாரணை

யாழ்ப்பாணம், ஓக.9

யாழ். பொலீஸ் நிலைய சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் சாள்ஸ் விஜேவர்த்தனாவின் கொலை தொடர்பாக புலனாய்வுத் துறையினர் விசாரணையை ஆரம்பித்துள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை இணுவில் பகுதியில் இளைஞர் ஒருவர் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானதால் ஏற்பட்ட கலவரத்தின் போது பொலீஸ் அதிகாரி சாள்ஸ் விஜேவர்த்தனா கடத்திச்செல்லப்பட்டார்.

(18ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில்

# புலிகள் பயணிக்கும் வாகனங்களில் படையினரும் இருக்க வேண்டும்!

## அரசு கண்டிப்பான உத்தரவு

கொழும்பு, ஓக.9

அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் போக்குவரத்தில் ஈடுபடும் விடுதலைப் புலி உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பு வழங்கும்போது, புலிகள் பயணிக்கும் வாகனங்களில் படையினரும் இருக்கவேண்டுமென அரசு பாதுகாப்புத் தரப்புக்கு உத்தரவிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அவ்வாறான வாகனங்களில் செல்லவேண்டிய படையினரின் எண்ணிக்கை அந்தந்தச் சந்தர்ப்பத்தில் பயணிக்கும் விடுதலைப் புலி உறுப்பினர்களின் எண்ணிக்கையைப் பொறுத்தே தீர்மானிக்கப்பட வேண்டுமெனவும் அரசு அறிவுறுத்தியுள்ளது.

வடக்கு - கிழக்கில் அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் பயணிக்கும் விடுதலைப் புலி உறுப்பினர்களது வாகனங்களை இலக்கு வைத்து அண்மையில் தாக்குதல்கள் இடம் பெற்றதைத் தொடர்ந்து தமது போராளிகளின் பாதுகாப்பான பயணத்தை உறுதிப்படுத்தும்படி அரசுக்குப் புலிகள் நெருக்குவாரம் கொடுத்து வந்தனர். இது தொடர்பான யோசனைகள் கண்காணிப்புக் குழு ஊடாக இரு தரப்பினரிட

(18ஆம் பக்கம் பார்க்க)

**உள்ளே கல்விச்சுடர்**

## இந்தமாத இறுதியில் வெளியிடப்படவிருந்த

# ஜனாதிபதித் தேர்தல் குறித்த அறிவிப்பு நிறுத்தி ்வைப்பு!

கொழும்பு, ஓக.9

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக இம்மாத இறுதியில் வெளியிடவிருந்த விசேட அறிவிப்பினை தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க நிறுத்திவைத்திருக்கிறார் எனத் தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் நேற்று உறுதியாகத் தெரிவித்தன.

ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டிய திகதியை அறிவிக்கக் கோரி, ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் ஓமல்பே சோபித தேரர் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கும் அடிப்படை உரிமை மீறல் மனுவில் தேர்தல் ஆணையாளரும் பிரதிவாதியாகக் குறிப்பிடப்பட்டுள்ளார் என்பதால் மேற்படி அறிவிப்பினை வெளியிடுவதை அவர் ஒத்திவைத்திருக்கிறார் என

(18ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு தலைமை அலுவலகம் திருமலையில்

கொழும்பு, ஓக. 9

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை அலுவலகம் விரைவில் திருகோணமலையில் அமைக்கப்படவுள்ளது.

தமிழர் தாயகத்தின் தலைநகரம் திருகோணமலை என்பதால் அங்கு கூட்டமைப்பின் தலைமை அலுவலகத்தை அமைப்பதே பொருத்தமானது என்று தெரிவித்தார் ஈழவேந்தன் எம்.பி.

தமிழர் விடுதலைக் கூட்டணி, ரெலோ, தமிழரசுக் கட்சி, ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆகியன இணைந்து கடந்த பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அமைத்தன. பொதுத் தேர்தலில் வடக்கு - கிழக்கில் 21 நாடாளுமன்ற ஆசனங்களை வென்றது கூட்டமைப்பு.

கூட்டமைப்பு என்ற பெயரில் இயங்கி வந்தபோதும் இதுவரை கட்சி ரீதியான கட்டமைப்பு எதுவும் நிறுவப்படவில்லை. இதனை அடுத்து விரைவில் திருகோணமலையில் தலைமை அலுவலகம் ஒன்றைத் திறந்து

(18ஆம் பக்கம் பார்க்க)

## கொக்குவிலில் நேற்று நடந்த விபத்தில் மாணவி உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஓக.9

'ஹண்டர்' வாகனம் - 'மொபெட்' மோட்டார் சைக்கிள் சம்பந்தப்பட்ட விபத்தில் மோட்டார் சைக்கிளைச் செலுத்திவந்த மாணவி தலையில் படுகாயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

கொக்குவில் பொற்பதி வீதியில் நேற்றுக் காலை 8.30 மணியளவில் இந்த விபத்து இடம் பெற்றது. பொற்பதி வீதியைச் சேர்ந்தவரும், யாழ். சுண்டுக்குளி (18ஆம் பக்கம் பார்க்க)

## கந்தளாயில் ஜே.வி.பியினர் ஆர்ப்பாட்டம்!

திருகோணமலை, ஓக.9

கந்தளாயில் உள்ள ஜே.வி.பி. அலுவலகம் மீது நேற்றுமுன்தினம் தாக்குதல் நடத்தப்பட்டதைக் கண்டித்து நேற்று அங்கு ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. ஹர்த்தாலும் கடைப்பிடிக்கப்பட்டது.

கந்தளாய், பேராற்றில் உள்ள கட்சி அலுவலகத்தில் நேற்றுக்காலை 10 மணியளவில் கூடிய ஜே.வி.பி. ஆதரவாளர்கள் சுமார் 500 பேர் அங்கிருந்து ஊர்வலமாகப் புறப்பட்டனர். கந்தளாய் சந்தியில் உள்ள மணிக்கூட்டுக் கோபுரம் வரை சென்ற அவர்கள் அங்கே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அரசு தமக்குப் பூரண பாதுகாப்பை வழங்க வேண்டும் என்றும் -

தமிழீழ விடுதலைப் புலிகளைத் திருகோணமலை மாவட்டத்தில் இருந்து வெளி

(18ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவச் சிப்பாய்கள் மீது இனந்தெரியாதோர் தாக்குதல்!

யாழ்ப்பாணம், ஓக.9

தென்மராட்சி, மிருசுவில் பகுதியில் இனம் தெரியாத நபர்களின் தாக்குதலில் இராணுவச்சிப்பாய்கள் படுகாயமடைந்தனர் என்று கொடிகாமம் பொலீஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினமிரவு சுமார் 8.30 மணியளவில் இடம்பெற்றதாகக் கூறப்படும் இச் சம்பவம் பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

மிருசுவில் மருத்துவமனைப் பகுதிக் காவலரணில் உள்ளவர்களுக்குச் சைக்கிள்களில்

(18ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பிரதியமைச்சருக்கு எதிரான போராட்டத்தில்

# தமிழ்பேசும் மக்கள் ஒன்றிணைந்திருப்பது இலங்கை வரலாற்றில் பெரும் திருப்பம்

## கொழும்பு ஆர்ப்பாட்டத்தில் ஈழவேந்தன் எம்.பி. கருத்து

கொழும்பு, ஓக.9

''இந்திய வம்சாவளித் தமிழர்களை இழிவாகப் பேசிய பிரதியமைச்சர் மேர்வின் சில்வாவுக்கு எதிரான போராட்டத்தில் தமிழ்பேசும் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்திருப்பது இலங்கை வரலாற்றில் ஒரு பெரும் திருப்பம். தமிழர்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்ற புலிகளினதும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரதும் ஆசை இன்று நிறைவேறியிருக்கின்றது.''

- இவ்வாறு பெருமிதத்துடன் கூறினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன்.

பிரதியமைச்சர் மேர்வின் சில்வாவுக்கு எதிராகக் கொழும்பில் நேற்று நடைபெற்ற பேராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து, அதில் கலந்துகொண்ட ஈழவேந்தன் அதுபற்றிக் கருத்துத் தெரிவித்த போதே இப்படிக் கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஈழத்திலுள்ள தமிழ் பேசும் மக்கள் நீண்டகாலமாக எதிர்நோக்கி வந்த நோய், அவர்களிடையேயான ஒற்றுமையின்மை. இப்போது அது நீங்கியுள்ளது. காலம் கடந்த ஞானம் தான். எனினும் மகிழ்ச்சியை அளிக்கிறது.

இன்று மலையகத்தின் மூன்று முக்கிய அணிகளைச் சேர்ந்தோரும் (மலையக மக்கள் முன்னணி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மேல் மாகாண மக்கள் முன்னணி) ஒன்றிணைந்திருக்கின்றனர். தமக்கிடையிலான வேறுபாடுகளைக்களைந்து அவர்கள் இணைந்திருப்பதும் அவர்களுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராகிய நாங்களும் முஸ்லிம் காங்கிரஸினரும் ஒன்றிணைந்திருப்பதும் வரலாற்றில் ஒரு முக்கிய திருப்பம்.

தமிழ் பேசும் மக்களை இனிமேல் சிங்களவர்கள் தூஷித்து காலம் கடத்த முடியாது என்பதை இந்த ஒற்றுமை தெட்டத்தெளிவாக எடுத்துக்காட்டி இருக்கிறது. இந்த நிலை தொடரவேண்டும். அப்போதே தமிழ் பேசும் மக்கள் அனைவரும் தமது உரிமைகளைப் பெற்று தலைநிமிர்ந்து வாழ முடியும். - என்றார். (க)

## ஐ.நா. மாநாட்டில் ஜனாதிபதி உரை

கொழும்பு,ஓக.9

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறும் ஐ.நா.பொதுச் சபைக் கூட்டத்தில் இலங்கை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க உரைநிகழ்த்துவதற்கு அழைக்கப்பட்டிருக்கின்றார்.

செப்ரெம்பர் 14ஆம், 16ஆம் திகதிகளில் நடைபெறவிருக்கும் உலகத்தலைவர்களின் உச்சிமாநாட்டிலும் பின்னர் 17ஆம் திகதி நடைபெறவிருக்கும் பொதுச்சபையின் 60ஆவது மாநாட்டிலும் இலங்கை ஜனாதிபதி உரை நிகழ்த்துவார் என்று தெரிகின்றது.

இந்த இரு நிகழ்ச்சிகளிலும் கலந்துகொண்டதன் பின்னர் ஐ.நா. செய்தியாளர்களுக்கான மாநாடொன்றிலும் அவர் கலந்துகொள்வார்.

ஐ.நா.செய்தியாளர்கள் சங்கத்தின் செய்தியறிக்கையில் ஊடகவியலாளருக்கான விருந்தொன்றை ஜனாதிபதி வழங்குவார்.

பல்வேறு உலகத் தலைவர்களோடு இருதரப்புப் பேச்சுக்களை நடத்தவிருக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நியூயோர்க் ஆசிய சமூகத்தவர்களின் கூட்டமொன்றிலும் உரையாற்றுவார்.

இம்முறை நடைபெறும் உச்சிமாநாட்டில் பெருந்திரளான உலகத்தலைவர்கள் கலந்துகொள்ளவிருக்கிறார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ப)

## நேற்று மலையகம் முடங்கியது

கொழும்பு,ஓக.9

இந்திய வம்சாவளியினரை இழிவுபடுத்திப் பேசி அவமானப்படுத்திய பிரதி அமைச்சர் மேர்வின் சில்வாவுக்கு எதிரான கண்டனப் போராட்டத்தால், தமிழர்கள் செறிந்து வாழும் மலையகம் முழுவதும் நேற்று முடங்கியது. தோட்டத் தொழிலாளர்கள் ஒருநாள் அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுத் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

நகர்ப்புறங்களில் தமிழ்க் கடைகளுடன் சிங்களக் கடைகளும் மூடப்பட்டு ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. பெரும்பாலான நகரங்கள் வெறிச்சோடிக் காணப்பட்டன. சன நடமாட்டம் பெரிதும் குறைந்திருந்தது. வாகனப் போக்குவரத்துகளும் பெருமளவு குறைந்து காணப்பட்டன.

தொழில் உறவுகள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் பிரதி அமைச்சர் மேர்வின் சில்வா, ''இந்தியாவில் இருந்து வந்த பறையர்களுக்கு நான் பயப்படப்போவதில்லை. பாஸ்போட்டுகளை தயார் செய்து வைக்கச் சொல்லுங்கள். அவர்களை இந்த நாட்டிலிருந்தே விரட்டி விடுவேன். நான் கொழும்பு ஆள். இது என்னுடைய நாடு.'' என மிரட்டும் வகையில் பேசிய பேச்சே இலங்கை வாழ் அனைத்து இந்திய வம்சாவளி மக்களையும் ஒன்றிணைந்து போராட்டத்தில் ஈடுபடவைத்துவிட்டது.

மலையகத்தில் முப்பெரும் சக்திகளாகக் கருதப்படும் மலையக மக்கள் முன்னணி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மேல் மாகாண மக்கள் முன்னணி என்பன இணைந்து நடத்திய இந்தப் போராட்டத்தில் மலையகத்தில் உள்ள ஏனைய தொழிற்சங்கங்களைச் சேர்ந்தவர்களும் வர்க்க ரீதியாகவும், சமுதாய ரீதியாகவும் ஒன்றுபட்டு நேற்று நடைபெற்ற மேர்வின் எதிர்ப்புக் கண்டனப் போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

மலையக நகரங்களில் உள்ள பெரும்பான்மை இனத்தவர்களுக்குச் சொந்தமான கடைகளும் பூட்டப்பட்டிருந்தன. மலையகத்தில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. மதுபானசாலைகளும், தேநீர் கடைகளும், பார்மஸிகளும்கூட அடைக்கப்பட்டிருந்தன.(க)

## இரு ரயில்கள் ஒன்றோடு ஒன்று மோதி விபத்து; 26 பேர் காயம்!

கொழும்பு, ஓக.9

இரத்மலானையில் இரண்டு ரயில்கள் ஒன்றன்பின் ஒன்றாக மோதி நேற்று விபத்துக்குள்ளாகின. அதில் பயணம் செய்த 26 பயணிகள் காயமுற்றனர். அவர்கள் களுபோவில வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து நேற்றுப் பகல் 12.10 மணியளவில் இடம்பெற்றுள்ளது. கொழும்பிலிருந்து அளுத்கம நோக்கிச் சென்ற பயணிகள் ரயில் இரத்மலானை ரயில் நிலையத்தைக் கடந்தபோது, அங்கு நிறுத்திவைக்கப்பட்டிருந்த சிறிய ரக ரயிலுடன் மோதியுள்ளது. ரயில் பாதை திருத்தும் பணியில் ஈடுபடுவதற்காக அங்கே நிறுத்தப்பட்டிருந்த ரயிலுடனேயே பயணிகள் ரயில் மோதியது என அதிகாரிகள் கூறினர். இதனால் கொழும்பிலிருந்து சென்ற ரயிலின் பெட்டி ஒன்று சேதமானது என இரத்மலானை ரயில் நிலையத்தின் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இது எதிர்பாராமல் ஏற்பட்ட விபத்து என்றும், தண்டவாளங்களைத் திசை திருப்பும் கருவி திடீரென இயங்காமல் போனதே இதற்கு உண்மையான காரணம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். ரயிலில் பயணம்செய்த எவருக்கும் உயிராபத்து ஏற்படவில்லை எனவும் அவர் மேலும் கூறினார். (க)

## நல்லூர் கோயிலுக்கு இன்று கொடிச்சேலை

யாழ்ப்பாணம்,ஓக.9

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் நாளை ஆரம்பமாகவுள்ள பெருந்திருவிழாவை ஒட்டி கொடிச்சேலை இன்று சம்பிரதாய மரபுப்படி ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்படவுள்ளது.

நல்லூர் சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ முருகன் ஆலயத்தில் இருந்து இன்று காலை 8 மணியளவில் அழகிய ரதத்தில் கொடிச்சேலை எடுத்துச் செல்லப்படும். (ஐ)

## நல்லூர் திருவிழாவுக்கு வவுனியாவிலிருந்து பொலீஸ் படை

யாழ்ப்பாணம்,ஓக.9

நல்லூர்க் கந்தன் ஆலயத்தின் பெருந்திருவிழாக் காலத்தில் கடமை புரிவதற்காக வவுனியாவிலிருந்து யாழ். பொலீஸ் நிலையத்திற்கு சுமார் 70 பொலீஸார் நேற்றுமுன்தினம் வந்துள்ளனர். நல்லூர்க் கந்தன் ஆலயப் பெருந்திருவிழா நாளை ஆரம்பமாகவுள்ளது.

ஆலய உற்சவகாலத்தில் ஆலயச் சூழலில் தற்காலிக பொலீஸ் நிலையம் ஒன்று அமைக்கப்படவுள்ளது - இங்கு பணியாற்றவென்றே மேலதிகப் பொலீஸார் வரவழைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் வீதித்தடைகள் மற்றும் திருட்டுச்சம்பவங்களைக் கட்டுப்படுத்துவது போன்ற கடமைகளில் ஈடுபடுவர்கள் என்று பொலீஸ் நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-7)

## திருவிழாக்கள் ஆரம்பம்

ஊர்காவற்றுறை, நாரந்தனை வடக்கு தான்தோன்றி மனோன்மணி அம்மன் கோயில் வருடாந்தப் பெருந்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. எதிர்வரும் 18 ஆம் திகதி தேர்த்திரு விழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

உற்சவ நாள்களில் தினமும் மாலை 7.30 மணிக்கு 'மகாபாரதம்' என்னும் பொருளில் பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்தசர்மா சொற்பொழிவு நிகழ்த்துவார். (204)

* * *

தென்மராட்சி,ஓக.9

கைதடி இணுங்கித் தோட்டம் கந்தசுவாமி ஆலயப் பெருந்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 18 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும்.

திருவிழாக் காலங்களில் தினமும் இரவு 7 மணிக்கு ஆசிரியர் ச. லலீசனின் சமயச் சொற்பொழிவு இடம்பெறும். (எ-117-203)

* * *

யாழ்ப்பாணம்,ஓக.9

வேலணை பெருங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்தப்பெருந்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 18 ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். (எ-203)

* * *

வடமராட்சி,ஓக.9

பொலிகண்டி இருப்பைமூலை ஸ்ரீ சித்தி விநாயகர் கோயில் வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 10 ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும் இந்தப் பெருவிழாவின் ரதோற்சவம் எதிர்வரும் 18ஆம் திகதி வியாழக்கிழமையும், தீர்த்தோற்சவம் மறுநாள் 19ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் இடம் பெறுவதுடன் மஹோற்சவம் நிறைவுறும். (எ-173)

# பொற்பதி வீட்டுத் திட்டம் தொடர்பாக மீள் மதிப்பீடு செய்யும்படி பணிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.9

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென பொற்பதியில் அமைக்கப்படவுள்ள வீடுகள் தொடர்பாக மீள் மதிப்பீடு செய்து வேலைகளை ஆரம்பிக்குமாறு வேர்ல்ட்விஷன் நிறுவனத்தை யாழ். அரச அதிபர் கே.கணேஷ் கோரியுள்ளார்.

அரச அதிபர் கே.கணேஷ், மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ. சிவசுவாமி,மேலதிக அரச அதிபர் (சுனாமி) பா.செந்தில்நந்தனன், வேர்ல்ட் விஷன் நிறுவனப் பிரதிநிதிகள் உள்ளிட்ட குழுவினர் நேற்றுமுன்தினம் பொற்பதிப் பிரதேசத்தை நேரில் சென்று பார்வையிட்டனர்.

இது தொடர்பாக அரச அதிபர் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்படி விடயத்தைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது சந்திப்பின் போது மக்கள் சில கோரிக்கைகளை முன்வைத்தனர் அதாவது தாழ்வான பிரதேசத்தில் காணிகள் உள்ள குடும்பத்தினர் தமது வீடுகளுக்கான அத்திபாரத்தை மேலும் அரைஅடி உயரமாக அமைத்துத் தருமாறு கோரிக்கை விடுத்தனர்.

எனவே, இது தொடர்பாக மீள் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு நிலத்தின் தன்மைக்கேற்ப வீடுகளை அமைக்கும் பணியை ஆரம்பிக்குமாறும் - மழைக்காலத்திற்கு முன் சகல வீடுகளையும் அமைத்து முடிக்குமாறும் - சம்பந்தப்பட்ட நிறுவனத்தைக் கோரியுள்ளேன்.

மேலும் அமைக்கப்படும் 500 சதுர அடி வீட்டில் குடியிருப்பாளர்கள் தமது விருப்பிற்கேற்ப அறைகளை அமைக்க இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது - என்றார்.(ஒ-202-203)

# இரண்டாம் கட்டமாக மாணவர்களுக்கு ஜப்பானிய மூளைக்காய்ச்சல் தடுப்பூசி

கொழும்புத்துறை,ஓக.9

ஜப்பானிய மூளைக்காய்ச்சல் நோய்க்கெதிரான இரண்டாவது கட்டத் தடுப்பூசி மருந்தேற்றலை யாழ். மாநகரசபை சுகாதாரப் பிரிவினர் பாடசாலைகளில் மேற்கொள்ளவுள்ளனர்.

முதலாவது தடுப்பு மருந்தினைப் பெற்ற மாணவர்களைப் பதிவு அட்டையுடன் பின்வரும் தினங்களில் அந்தந்தப் பாடசாலைகளில் தயார்ப்படுத்துமாறு அதிபர்கள், ஆசிரியர்கள் பெற்றோரை யாழ். மாநகர சபை பிரதம பொதுசுகாதாரப் பரிசோதகர் க.ஆ.ஜீவநாதன் கேட்டுள்ளார்.

இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்.புனித மரியாள் பாடசாலை, நாயன்மார்கட்டு மகேஸ்வரி பாடசாலை, நல்லூர் ஸ்ரீ விக்கினேஸ்வரா பாடசாலை, நாவாந்துறை ஒஸ்மானியாக் கல்லூரி ஆகியவற்றிலும்-

நாளைமறுதினம் வியாழக்கிழமை யாழ். ஜோன்பொஸ்கோ பாடசாலை, யாழ். திருக்குடும்ப கன்னியர்மடம் பாடசாலை ஆகியவற்றிலும்-

எதிர்வரும் 15 ஆம்திகதி திங்கட்கிழமை யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியிலும் ஆண்டு ஒன்று முதல் 5 வரையான மாணவர்களுக்குத் தடுப்பூசி ஏற்றப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-30)

# தனியார் பஸ் உரிமையாளர்கள் போர்க்கொடி நாடு முழுவதும் போக்குவரத்து ஸ்தம்பிதம்!

கொழும்பு, ஓக.9

தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தினரின் வேலைநிறுத்தத்தைத் தவிர்ப்பதற்கு போக்குவரத்து பிரதி அமைச்சர் லசந்த அழகியவண்ண நேற்று மாலைவரை எடுத்த முயற்சிகள் தோல்வியடைந்துவிட்டன. தங்கள் கோரிக்கைகளுக்கு ஜனாதிபதி எழுத்து மூலம் உறுதிமொழி தரவேண்டும். அப்பொழுதுதான் வேலைநிறுத்தம் போன்ற நமது தொழிற்சங்கப் போராட்டங்களை நிறுத்துவோம் என்று தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன நேற்று மாலை தெரிவித்தார்.

✱ வீதிப் போக்குவரத்து ஒழுங்கு விதிகளை மீறும் தனியார் பஸ் சாரதிகளுக்கு எதிராக அந்த இடத்திலேயே பொலீஸாரால் விதிக்கப்படும் தண்டப் பணத்தின் அதிகரிப்பை வாபஸ் பெறவேண்டும்.

✱ வீதி ஒழுங்குமுறைகள் தொடர்பாகப் பொலீஸார் மேற்கொள்ளும் கெடுபிடிகளுக்கு முற்றுப்புள்ளிவைக்கவேண்டும். - என்ற கோரிக்கைகளை முன்வைத்து தனியார் பஸ் உரிமையாளர் சங்கம், அகில இலங்கைத் தனியார் வாகனச் சாரதிகள் சங்கம், அகில இலங்கை தனியார் பஸ் ஊழியர் சங்கம், அகில இலங்கை ஓட்டோ ஓட்டுநர்கள் சங்கம், கொள்கலன் வாகன சாரதிகள் சங்கம் என்பன இணைந்து கடந்த நள்ளிரவு முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுவருகின்றன.

இதனால் கொழும்பு உட்பட நாட்டின் தென் பகுதிகளில் தனியார் பஸ் போக்குவரத்து மட்டுமன்றி பல்வேறு வாகனப் போக்குவரத்துகளும் ஸ்தம்பித்துப் போயிருந்தன. இலங்கைப் போக்குவரத்துச் சேவைக்குச் சொந்த மான பஸ்கள் மட்டும் சேவையில் ஈடுபடுவதை அவதானிக்கக் கூடியதாயிருந்தது.

# தீவிரவாதிகளுக்கு இணையத்தளம் ஊடாக பயிற்சியளிக்கின்றது 'அல்கெய்டா' அமைப்பு

## 'வாஷிங்ரன் போஸ்ட்'பத்திரிகை தகவல்

வாஷிங்ரன்,ஓகஸ்ட்9

**ஈராக்கில் செயற்படும் அல்கெய்டா தீவிரவாதிகள் பயிற்சி மற்றும் தொடர்புகளுக்கு இணையத் தளத்தைப் பயன்படுத்துகின்றனர் என்று அமெரிக்காவின் 'வாஷிங்ரன் போஸ்ட்' பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது.**

இணையத் தளம் என்பது அடையாளம் தெரியாமல் செயற்படுவதற்கும், பயன்படுத்துவதற்கும் எளிதாக இருக்கிறது. எனவே, இதைத் தீவிரவாதிகள் அதிகளவு பயன்படுத்திக்கொள்கின்றனர்.

இரகசிய இடங்களில் பதுங்கியுள்ள பயங்கரவாதிகள்,கணனிகள், டிவிடி டிஸ்குகள்களின் உதவியுடன் அருகிலுள்ள இணையத்தள மையங்களுக்குச் சென்று தகவல் தொடர்பை ஏற்படுத்திக்கொள்கின்றனர். திட்டமிடல்,பயிற்சி ஆகியவற்றையும் மேற்கொள்கின்றனர்.

அல்கெய்டாவும் அதன் கிளை அமைப்புகளும் பயிற்சிக்குத் தேவையான சாதனங்களை வழங்க இணையத்தள வழி செயற்படும் 'ஒன்லைன்' நூலகங்களை ஏற்படுத்தியுள்ளன.

தகவல் தட்டுக்கள், இணையத்தள வசதிகள் மூலம் வல்லுநர்கள் பதிலளிக்கவும் ஏற்பாடுகள் செய்துள்ளன.

வணிக அடிப்படையில் விற்கப்படும் வேதிப்பொருள்களைக் கொண்டு எப்படி ஈராக்குக்குள் ஊடுருவுவது என்பனவற்றுக்கெல்லாம் பதிலளிக்கப்படுவதாக வாஷிங்ரன் போஸ்ட் தெரிவித்துள்ளது.

உலக அளவிலான ஜிகாத் இயக்கங்கள் இணையத் தளங்களின் மூலம் தங்கள் செயற்பாடுகளை அமைத்துக்கொள்கின்றன.

அரசாங்கங்களால் இவற்றைத் தடுக்கமுடியவில்லை என மேற்கிந்திய உளவுத் துறையினரும், தீவிரவாதத் தடுப்பு நிபுணர்களும் தெரிவிக்கின்றனர்.

'உயிரி ஆயுதங்கள்' என்ற தலைப்பில் அரபு மொழியில் எழுதப்பட்ட 15 பக்க ஆவணம், இரண்டு மாதங்களுக்கு முன்பு அல்கெய்டா முன்னாள் தலைவர் முஸ்தபா செட்மரியம் நாசர் என்பவரது இணையத்தளத்தில் வெளியிடப்பட்டதாக உளவுத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். சிறிய அளவு வைரஸ் கிருமிகளை வைத்து காற்றின் வழி பரவும் பிளேக் நோயை உருவாக்கி எப்படி உயிரி ஆயுதமாகப் பயன்படுத்தமுடியும் என்பது கூட அந்த ஆவணத்தில் விளக்கப்பட்டிருந்தது என 'வாஷிங்ரன் போஸ்ட்' செய்தி வெளியிட்டுள்ளது. (8)

## ஜப்பானில் நில அதிர்வு

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நேற்றுமுன்தினம் இரவு சக்திவாய்ந்த நில அதிர்வொன்று ஏற்பட்டதென அந்நாட்டு நில நடுக்க ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ரிச்டர் அளவுகோலில் 4.7 புள்ளியாகப் பதிவாகியிருந்த இந்த நில அதிர்வினால், ஏற்பட்ட சேதம் குறித்து எந்த விவரங்களும் இதுவரை கிடைக்கப்பெறவில்லை.

புவிக்குக் கீழுள்ள நிலக்கீழ்த் தட்டுக்கள் நான்கும் சந்திக்கும் இடத்திலேயே ஜப்பான் அமைந்துள்ளது. எனவே, ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான நில அதிர்வுகள் ஏற்படும் வாய்ப்பு அதிகமாக உள்ளது என ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். (8)

## 'சார்ஸ்' நோய்க்குத் தடுப்பூசி

பீஜிங்,ஓக.9

சீன மருத்துவர்கள் சார்ஸ் நோய் பரவுவதைத் தடுக்க புதிய ஊசி மருந்து ஒன்றைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இந்தப் புதிய மருந்து குரங்குகளுக்குக் கொடுத்து சோதனை செய்து பார்த்ததில் நல்ல பலனைக் கொடுத்துள்ளது.

அடுத்து மனிதர்களுக்கும் இதைச் சோதனை அடிப்படையில் கொடுக்க சீன அரசு ஒப்புதல் வழங்கியிருக்கிறது. இந்தச் சோதனை முடிந்ததும் அதிகளவில் இந்தத் தடுப்பு மருந்தைத் தயாரிக்க அனுமதி வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. (8)

## கொக்கோ கோலாவுக்கு எதிராக ஊர்வலம்; 187 பேர் கைது!

திருநெல்வேலி,ஓக.9

தமிழகத்தின் திருநெல்வேலி மாவட்டம் கங்கைகொண்டான்சிப்காட் வளாகத்தில் கொக்கோ கோலா குளிர்பான கம்பெனி அமையக் கட்டுமானப் பணிகள்நடக்கின்றன. இந்நிறுவனத்திற்குத் தாமிரபரணியில் இருந்து 9 லட்சம் லீற்றர் தண்ணீர் வழங்க அரசு அனுமதியளித்துள்ளது. இதனால் விவசாயம் பாதிக்கப்படும். குடிதண்ணீர் தட்டுப்பாடு நிலவும் எனக் கூறி எதிர்ப்புத் தெரிவித்து நெல்லையில் இருந்து கங்கைகொண்டான் வரையிலும் மா.கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் தாமிரபரணி பாதுகாப்புக் குழு சார்பில் நடைபயணம் செல்ல இருந்தனர். இதற்குப் பொலீஸார் அனுமதியளிக்கவில்லை. நேற்றுமுன்தினம் காலையில் ஜங்ஷன் ரயில்வே ஸ்டேஷன் முன்பு இருந்து நடைபயணத்தை மா.கம்யூ. எம். எல்.ஏ.,ஹேமச்சந்திரன் துவக்கி வைத்தார். ஆனால், நடைபயணம் செல்லக் கூடாது எனக் கூறி அவர்களைப் பொலீஸார் கைது செய்தனர். தாமிரபரணி பாதுகாப்புச் சபைத் தலைவர் ஆர்.கிருஷ்ணன், மா.கம்யூ. மாவட்ட செயலர் பழனி, கருமலையான், 10 பெண்கள் உள்ளிட்ட 187 பேர் கைது செய்யப்பட்டனர். (8)

## சார்க் மாநாட்டை மீண்டும் ஒத்திவைக்கும் நோக்கமில்லை

### இந்திய வெளியுறவு அமைச்சர் உறுதி

டாக்கா,ஓக.9

''சார்க் மாநாட்டு நிகழ்ச்சியை மீண்டும் தள்ளி வைக்கும் திட்டமில்லை'' என்று வெளியுறவு அமைச்சர் நட்வர்சிங் கூறினார்.

பங்களாதேஷுக்குப் பயணம் மேற்கொண்ட அவர் , அந்நாட்டு பிரதமர் பேகம் கலிதா ஜியாவைச் சந்தித்தார். இந்திய பங்களாதேஷ் நட்புறவுக்கு உறுதியளிக்கும் பிரதமர் மன்மோகன் சிங் கடிதத்தை அவரிடம் ஒப்படைத்தார். வெளியுறவு செயலர் ஷியாம் சரண் மற்றும் வங்க தேசத்திற்கான இந்திய தூதர் வீணா சிக்ரி உடன் சென்றனர்.

நிருபர்களிடம் நட்வர்சிங் கூறியதாவது:- சார்க் நாடுகள் மாநாடு டாக்காவில் கடந்த ஜனவரி மாதம் நடப்பதாக இருந்தது. சுனாமிப் பாதிப்புக் காரணமாகத் தள்ளிவைக்கப்பட்டது. பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு மீண்டும் அது தள்ளிவைக்கப்பட்டது. இனி மேலும் அது தள்ளிவைக்கப்படமாட்டாது. திட்டமிட்டபடி வரும் நவம்பரில் டாக்காவில் சார்க் நாடுகளின் மாநாடு நடைபெறும்.

எல்லைப்புறத்தில் வேலி அமைப்பது, கள்ளநோட்டு புழக்கத்தைத் தவிர்ப்பது ஆகிய பணிகள் தொடரும். ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸிலில் இந்தியா நிரந்தர உறுப்பினர் பதவிபெற பங்களாதேஷ் உதவும் என நம்புகிறேன். இவ்வாறு அமைச்சர் நட்வர்சிங் கூறினார். பின்னர் டாக்காவில் உள்ள போர் அருங்காட்சியகத்தைப் பார்வையிட்டார்.

### லண்டன் குண்டுவெடிப்புகளின் எதிரொலி

## தீவிரவாதத்தைத் தூண்டும் மதவாதிகளை தாய்நாடுகளுக்கு அனுப்ப பிரிட்டன் திட்டம்

லண்டன்,ஓக.9

தீவிரவாதத்தைத் தூண்டும் மதவாதிகள் 500 இற்கும் மேற்பட்டவர்களை அவரவர் நாட்டுக்கே திருப்பி அனுப்பப் பிரிட்டன் திட்டமிட்டுள்ளது. பிரிட்டனில் இன்னும் இரு வாரங்களில் இந்த நடவடிக்கை ஆரம்பமாகிவிடும் - எனத் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டைவிட்டு வெளியேற்றப்பட வேண்டிய 500 முஸ்லிம் தலைவர்கள் பட்டியலைப் பிரிட்டன் நிர்வாகம் தயாரித்துள்ளது. படிப்படியாக அவர்கள் நாட்டைவிட்டு வெளியேற்றப்படுவார்கள்.

அடுத்தமாதம் 100 பேர் அனுப்பிவைக்கப்படுவார்கள் .

லண்டன் தொடர் குண்டுவெடிப்புகளுக்குப் பின்னர் மத அடிப்படைவாதிகளுக்கு எதிராகப் பிரிட்டன் இந்தத் தீவிர நடவடிக்கை எடுத்துவருகிறது.

அடிப்படைவாதிகளையும் தீவிரவாதிகளையும் களை எடுப்பது தொடர்பாகக் கடந்த வாரம் ஓர் அறிவிப்பை வெளியிட்டார் பிரதமர் ரொனி பிளயர்.

கடந்த ஐந்து ஆண்டுகளாகவே உளவுத் துறையினரால் கண்காணிக்கப்பட்டு மதத் தீவிரவாதிகளின் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த விவரங்கள் இரகசியமாக வைக்கப்பட்டுள்ளன. எனவே, இவர்கள் ஓடி ஒளித்துக்கொள்ளவோ, சட்டரீதியாகத் தப்பிக்கவோ முடியாது.

முதலில் அடிப்படைவாத மதகுருக்கள் வெளியேற்றப்படுவார்கள். அதன் பின்னர் வெளிநாட்டைச் சேர்ந்த மத புத்தக விற்பனையாளர்கள், எழுத்தாளர்கள், ஆசிரியர்கள், இணையத்தளம் நடத்துவோர் உள்ளிட்ட நூற்றுக்கணக்கானோர் அனுப்பப்படுவார்கள்.

இத்தகவல்களை உள்துறை அமைச்சகத்தைச் சேர்ந்த மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (8)

## பலஸ்தீன அரச கட்டடங்களை முற்றுகையிட்டனர் தீவிரவாதிகள்

லண்டன்,ஓக.9

பலஸ்தீன காஸா முனையில் உள்ள இரு அரச கட்டடங்களை அல்-அக்ஸா தீவிரவாத இயக்கத்தினர் முற்றுகையிட்டுள்ளனர் என அங்கிருந்துவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சக்தா எனப்படும் தீவிரவாத இயக்கத்தின் சிரேஷ்ட தலைவர் ஒருவரைப் பலஸ்தீன பாதுகாப்புப் படையினர் அண்மையில் கைது செய்தனர். அவரை விடுவிக்கக் கோரியே இவ்வாறு கட்டடங்களைத் தீவிரவாதிகள் முற்றுகையிட்டுள்ளனர்.

அவர்கள் கட்டடங்களை முற்றுகையிட்டதுடன், பாதுகாப்புப் படையினரை நோக்கித் துப்பாக்கிச் சூடு நடத்தினர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. அல்-அக்ஸா மற்றும் சக்தா தீவிரவாத இயக்கத்தினர் கருத்துத் தெரிவிக்கையில் -

தமது இயக்கத்தின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரை விடுவிக்கக் கோரியே இவ்வாறு கட்டடங்களை முற்றுகையிட்டுள்ளோம் என்று கூறினார்.

தீவிரவாத இயக்கத்தின் சிரேஷ்ட தலைவர் கைதுசெய்யப்பட்டதை பலஸ்தீன உள்துறை அமைச்சு உறுதிசெய்துள்ளது. எனினும், அவர் ஏன் கைதுசெய்யப்பட்டார் என்பதற்கான காரணத்தைக் கூற மறுத்துவிட்டது.

பலஸ்தீனத்திலுள்ள ஷான்குவிஸ் நகரின் பலஸ்தீன செஞ்சிலுவைச் சங்கத்திற்குச் சொந்தமான கட்டடத்தை முதலில் முற்றுகையிட்ட தீவிரவாதிகள் பின்னர் அதற்கு அருகில் இருந்த மாநகரசபைக் கட்டடத்தையும் கைப்பற்றியுள்ளனர். (8)

## ஈரான் அணு உலை பரிசோதிக்க சர்வதேச அதிகாரிகள் விஜயம்

தெஹ்ரான்,ஓக.9

'ஈரானில் மீண்டும் யுரோனியம் பரிமாற்றுதல் செய்யும் அணு உலையைப் பரிசீலிப்பதற்காகச் சர்வதேச அணுபரிசோதனை அதிகாரிகள் குழு நேற்று ஈரானுக்கு விஜயம் செய்துள்ளது.

அங்கு கண்காணிப்பு உபகரணங்களை நிறுவுவது அவர்களின் எண்ணமாகும்.

ஏற்கனவே 'சீல்' வைத்து மூடப்பட்டுள்ள இஸ்பான் அணு ஆலையை மீண்டும் திறக்கப் போவதாக ஈரான் அறிவித்ததையடுத்தே சர்வதேச அதிகாரிக்ள் அங்கே சென்றுள்ளனர்.

ஈரான் தன் அணு வேலைத்திட்டத்தின் மூலம் அணுவாயுதங்களைத் தயாரிப்பதாக அமெரிக்கா குற்றஞ்சாட்டியுள்ளது. (க-8)

## டிஸ்கவரி பூமிக்கு வருவதில் ஒருநாள் தாமதம்

லண்டன்,ஓக.9

கடந்த மாதம் 26ஆம் திகதி விண்ணுக்கு ஏவப்பட்ட அமெரிக்காவுக்கு சொந்தமான 'டிஸ்கவரி' விண்கலம் 24 மணிநேரம் தாமதமாகவே பூமியை வந்தடையும் என 'நாஸா' அறிவித்துள்ளது.

'டிஸ்கவரி' விண்கலம் தரையிறக்கப்படவுள்ள புளோரிடா மாநிலத்திலுள்ள கெனடி விண்வெளி ஆய்வுத்தளப் பகுதியில் காணப்படும் மோசமான காலநிலை காரணமாகவோ இந்தத் தாமதம் ஏற்பட்டுள்ளதெனத் தெரிவிக்கப்படுகிறது.

கெனடி விண்வெளி ஆய்வுத் தளத்தின் டிஸ்கவரி தரையிறக்கப்படும் ஓடுதளத்தில் மிகக் குறைந்த உயரத்தில் மேகமூட்டம் காணப்படுவதனாலேயே விண்கலத்தைத் தரை

உலக அரங்கில்

யிறக்குவது ஒரு நாளைக்கு பிற்போடப்பட்டுள்ளது என நாஸா தெரிவித்தது.

2003ஆம் ஆண்டு விண்ணுக்கு ஏவப்பட்ட கொலம்பிய விண்கலம் விபத்துக்குள்ளானதை அடுத்தே டிஸ்கவரி பூமிக்கு மீள்வதில் 'நாஸா' வெகு எச்சரிக்கையுடன் செயற்படுகிறது.

டிஸ்கவரியை நேற்றுத் தரையிறக்குவதற்கு நேரங்கள் தெரிவுசெய்யப்பட்டிருந்தன. ஆனால், காலநிலையில் மாற்றங்கள் எதுவும் ஏற்படாது மோசமாகவே காணப்பட்டதனால் 24 மணி நேரம் தாமதமாகவே டிஸ்கவரியைத் தரையிறக்க 'நாஸா' தீர்மானித்தது. இதன்படி, இன்று டிஸ்கவரி தரையிறக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இன்றும் காலைநிலையில் மாற்றங்கள் ஏற்படாது மோசமாகவே காணப்படுமாயின், கெனடி விண்வெளித்தளத்தில் தரையிறக்கப்படமாட்டாது என்றும் -

அதற்காக கலிபோர்ணியா மாநிலத்திலுள்ள எட்வர்ட்ஸ் விமானப் படைத்தளத்தில் தரையிறக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் - நாஸா அறிவித்துள்ளது.

ஆரம்பத்தில் டிஸ்கவரியைத் தரையிறக்குவதில் ஒன்றரை மணிநேரத் தாமதமே ஏற்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (8)



# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

Canon 1215 Photo Stat இயந்திரம் ஒன்று (நல்லநிலையில்) விற்பனைக்குண்டு. தொடர்பு: 52, கம்பஸ் லேன், திருநெல்வேலி. (38609)

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கண்டுக்குளி, கண்டிவீதியில் Y.M.C.A. இற்கு அருகில் 2 பரப்புக் காணியில் அமைந்த வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 97, கண்டி வீதி (ஜெயம் மிக்சர் கடைக்கு அருகில்), சுண்டுக்குளி. (38572)

## திருமண சேவை

எம்மிடம் உள்நாட்டு, வெளிநாட்டு அரச, தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் இந்து, கிறிஸ்தவ மணமக்களின் ஜாதகங்கள் உள்ளன. தொடர்பு: கல்யாண வேலன் சர்வதேச திருமண சேவை, இல.72, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (38619)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், ஆஸ்திரேலியா குடியுரிமையுடைய 1975, கார்த்திகை, இடபராசி, 4இல் செவ்வாய், கிரகபாவம் 36¼, உயரம் 5'8", வெள்ளைநிறம், B.Sc. Engineering (Electrical and Electronical) M.Sc. Shoft ware Hard ware, CIMA பொறியியலாளராகப் பணிபுரியும் மணமகனுக்கு அழகான, M.B.B.S., எக்கவுண்டன் மணப்பெண் தேவை. தொடர்பு: சிவாலயா, சர்வதேச திருமண நிலையம் 68/15, சட்டநாதர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். T.P.: 021 - 222 7844. (38620)

## காணவில்லை

கறுப்பு நிறமான S.T. குறி எழுத்துள்ள பசுமாடொன்றைக் காணவில்லை. பேச்சி அம்மன் கோயிலடியில் புல்மேயப்போன மாடு வீடு திரும்பவில்லை. இதனைக் கண்டவர்கள் கீழுள்ள முகவரிக்குத் தகவல் தரவும். பொ.சந்திரன், இருபாலை கிழக்கு, மடத்தடி, இருபாலை. (38610)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான நம்பர் -1 பகிரா புறொயிலர் குஞ்சுகள் 10-08-2005 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை முற்கூட்டியே மேற்கொள்ளவும். தொடர்பு: ராஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி. தாரகை, முதலாம் கட்டை, பருத்தித்துறை. ரஞ்சித், 517, ஸ்ரான்லி றோட், மாருதி பாம், வடக்கம்பரை, தொல்புரம், றாதா, மாவடி, வட்டுக்கோட்டை, P.ரவி சாவகச்சேரி. T.P.: 021- 222 2867, 222 3529. (38624)

## நல்லூர் கோட்ட ஆசிரியர் செயலமர்வு 12ஆம் திகதியே நடக்கும் என அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக.9

நல்லூர் கோட்டப் பாடசாலைகளில் தரம் ஒன்றில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பயிலமர்வு எதிர்வரும் 12ஆம் திகதி காலை 8.30 மணிக்கு யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இந்தப் பயிலமர்வை நாளை புதன்கிழமை நடத்த முன்னர் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அன்றைய தினம் நல்லூர் கந்தசுவாமி ஆலயப்பெருந்திருவிழா ஆரம்பமாவதால் செயலமர்வு 12 ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-204)

## BEACON

வதிரி கரவெட்டி

A/L 2006 PAPER CLASS

ஆரம்பம் - புதன்

PHYSICS காலை 6.15 மணி திரு G.பிரபா

Com.Maths - திரு.செந்தில்ராஜ்

Che, Bio - வழமையான ஆசிரியர்கள்.

(38630)(21-13-16-32)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 70ஆம் ஆண்டு அத்தம், 5'3" உயரம், மகர லக்கினத்தில் சுக்கிரன், சூரியன், 2இல் ராகு, 3இல் செவ்வாய், 4இல் சனி, 8இல் கேது, 9இல் சந்திரன், 10 இல் குரு, லக்கினத்திற்கு 40 பாவம், B.Sc, IT படித்து வேலைசெய்யும் மணமகளுக்கு எக்கவுண்டன், எஞ்சினியர் மற்றும் தராதரமுடைய மணமகன் தேவை. (வீடும், தகுதிக்கேற்ப ரொக்கமும் வழங்கப்படும்)

தொடர்பு: கல்யாணமாலை திருமணசேவை,
67A, ஆட்டுப்பட்டித்தெரு,
கொழும்பு -13. T.P.:2338162.
235/7, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
(21.13.16) T.P.: 021 222 6779 (38627)

## ஐக்கிய இராச்சிய [ U.K] தென்மராட்சி அபிவிருத்திக் கழகம்

தென்மராட்சி மக்கள் நலச் சேவைகள் சங்கத்தின் ஆதரவில் நடத்தும்

### இளைஞர், யுவதிகளுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு

காலம்: 13.08.2005 சனிக்கிழமை மு.ப.9 மணி
இடம்: டிறிபேர்க் கல்லூரி, சாவகச்சேரி.

கருத்துரை வழங்குவோர்:-

1. பேராசிரியர் க.கந்தசாமி
(தலைவர், தென்மராட்சி மக்கள் நலச்சேவைகள் சங்கம்)
2. கலாநிதி வே.சிவபாதசுந்தரம்
(தலைவர், தென்மராட்சி அபிவிருத்திக் கழகம்- ஐக்கிய இராச்சியம்)

இன்னும் பல அறிஞர்களும் கலந்துகொள்வார்கள்

இக்கருத்தரங்கில் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு எதிர்காலத் திட்டமிடல் பற்றிய ஆலோசனைகள் வழங்கப்படும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(38641) (21-16-13-39)

## 12ஆம் ஆண்டு நினைவலைகள்

தூசைப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை



பிறப்பு 18-10-1939 இறப்பு 09-08-1993

ஆண்டுகள் எத்தனைதான் கடந்தென்ன
ஆயிரம் உறவுகள் தான் இருந்தென்ன
ஆனந்தமாக எமைத் தாங்கி அரவணைத்து
ஆறுதல் அளிக்க நீங்கள் இல்லையே அப்பா!
கணமும் கலங்கி நிற்கின்றோம்

பிரிவின் துயரோடு:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

'தந்தை இல்லம்'
லோட்டன் றோட்,
மானிப்பாய். (38638)(21.13.16.46)

தகவல்: டயானா (மகள்).

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 01 - 06 - 1953



இறப்பு 10 - 07 - 2005

அமரர் சுப்பிரமணியம் சிவலோகநாதன்
(கூட்டுறவுக் கிளை முகாமையாளர்)
திதி: 09.08.2005

அன்புடனும் பண்புடனும் வாழ்ந்திருந்தீர்
எம்முடைய உயர்வுக்காய் பாடுபட்டீர்
உம்முடைய பிரிவு எங்களை வாட்டுகிறதே
ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

58/1, நெடுங்குளம் வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

-குடும்பத்தினர். (38632)(32-21-13-16)

## 11 ஆம் ஆண்டினிலே...



ரவிச்சந்திரன் தம்பிஐயா
(ராசன்)

அன்னை மடி 05.01.1968
ஐங்கரன் தாள் 10.08.1994
திதி: 09.08.2005

தோற்றம் மறைந்தாலும், துயரமோ மறையவில்லை
காலங்கள் கரைந்தாலும் கவலைகள் ஆறவில்லை
ஆயிரம் உறவுண்டு- ஆனாலும்
மலர்ந்த உன் வதனச் சிரிப்பை வாழ்நாளில்
காணக்கிடைக்குமா?

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

நந்தாவில் இணுவில் மேற்கு. -குடும்பத்தினர். (38668) (09-16-16)

## யாழ்ப்பாணம் மாநகரசபை சுப்பிரமணியம் பூங்காவை அலங்கரிக்கும் சிலைகளுக்கான கேள்வி கோரல்

யாழ்ப்பாணம் சுப்பிரமணியம் பூங்காவை அலங்கரிப்பதற்கான பின்வரும் சிலைகளுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன:

01. தமிழ் அன்னை - முழு மானிட அளவில், பீடத்தில் இருக்கும் பொழுது குறைந்தது 6' பெண் ஒருத்தி அமர்ந்திருப்பதுபோல் இருத்தல்வேண்டும்.
02. யாழ்.நங்கை - முழு மானிட அளவில், பீடத்தில் இருக்கும் பொழுது குறைந்தது 6' பெண் ஒருத்தி அமர்ந்திருப்பது போல் இருத்தல்வேண்டும்.
03. யானை - முழு அளவில், அருகில் ஒரு கன்றுடன் கூடியதாக.
04. இடையில் நீர்க் குடத்தைத் தாங்கிய பெண் - முழு மானிட அளவில். குறைந்தது 6' அளவில்.
05. குடத்தினைத் தோளில் வைத்து நீர் ஊற்றும் பெண் - முழு மானிட அளவில் குறைந்தது 6' அளவில்.
06 புற்றரையில் படுத்திருக்கும் இரண்டு புலிகள் - முழு அளவில்.
07. 20 கொக்குகள் - பல்வேறு நிலைகளில் அவற்றின் சரியான அளவுடன்.
08. டைனோசர் - முழு அளவில்.

நிபந்தனைகள்:

01. ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே அவற்றுக்கான மாதிரி வரைபடத்துடன் கூறுவிலை தரப்படல்வேண்டும்.
02. கூறுவிலை கிடைக்கும் பட்சத்தில் அவற்றை கூறுவிலை பெற்ற திகதியிலிருந்து இரண்டு மாதத்திற்குள் சுப்பிரமணியம் பூங்காவில் ஒப்படைக்க வேண்டும்.
03. சிலைகள் யாவும் தரமான சிமெந்தினாலும், கம்பிகளாலும் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
04. சிலைகளை உரிய இடத்தில் பொருத்திய பின் அதற்கான வர்ணங்கள் தீட்டி வழங்கவேண்டும்.
05. இவற்றுக்கான கூறுவிலை விண்ணப்பப் படிவங்களை 25.08.2005 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு முன் மாநகரசபை கேள்விப் பெட்டியில் சேர்ப்பிக்கப்பட வேண்டும். அன்று பிற்பகல் 3 மணிக்கு அக்கேள்விகள் திறக்கப்பட்டு பரிசீலிக்கப்படும். அவ்வேளை கேள்வி சமர்ப்பித்தவர்களும் சமுகமளிக்கலாம்.
06. விண்ணப்பப் படிவத்திற்கான கட்டணமாக ரூபா 300/- (வற் வரி நீங்கலாக) மாநகரசபையில் செலுத்திப் பெற்றுக்கொள்ளவும்.
07. சமர்ப்பிக்கப்படும் மாதிரிப் படத்திற்கும், செய்யப்பட்ட சிலைக்கும் இடையில் வேறுபாடு காணப்படும் பட்சத்தில், அதனை நிராகரிக்கும் உரிமை மாநகர சபைக்குண்டு.

கலாநிதி க.குணராசா
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

(சி-44481)(21.13.16)

## GREEN INN RESTAURANT

எம்மிடம்
★ சைவ உணவு ★ அசைவ உணவு ★ சிக்கன் பிரியாணி
★ பிரைட் ரைஸ் + டெவல் ★ மட்டன் பிரியாணி போன்றவை பார்சல்களாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

எமது ரெஸ்ரோரண்டில் குடும்பமாக வந்து அமர்ந்து சாப்பிடவும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

No.60, Kandy Road, Chundikuli, Jaffna.
Tel.:021 22 3898. Fax: 021 222 2298. Mobile:0776- 917030
Available A/C & Non A/C Rooms With Attached Bathrooms.

(38421) (21-19-18-24)

## மதுரை மீனாட்சி அம்பாள்





அருள்வாக்கும் ஜோதிடமும்

K.V. கோவிந்தசுவாமி & ஸ்ரீ லட்சுமி

இந்தியாவிலிருந்து கணவன், மனைவி இருவரும் வருகைதந்துள்ளார்கள். இவர்கள் கைரேகை மூலம் நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகின்றவை மற்றும் தொழில், வியாபாரம், விவாகப் பொருத்தம், கல்வி, வெளிநாடு செல்லும் வாய்ப்பு, நோய் போன்றவற்றிக்குப் பரிகாரம் கூறுவார்கள். ஒருமுறை சந்தித்து பாருங்கள்.(காலை 9 மணியிலிருந்து இரவு 8 மணி வரை)

தொடர்பு:- 50, Navalar Road, Jaffna. (Near Manohara Theartre) Back side.
T.P:- 0776446525.
(38376) (64-34-18)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி,



அமரர்
சுப்புசாமி பத்மநாதன்

தோற்றம் 04-09-1961
மறைவு 11-07-2005

11.07.2005 அன்று இறைபதமடைந்த எமது குலவிளக்கின் வீட்டுக் கிருத்திய நிகழ்வு நாளை (10.08.2005) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தொடர்ந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையும், மதியபோசனமும் நடைபெறும். இந்த நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

நந்தாவில் லேன்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
குடும்பத்தினர். (38636) (21.16.18)

## மரண அறிவித்தல்

### திருமதி கற்கண்டு சரஸ்வதி

இலந்தைக்காடு, வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கற்கண்டு சரஸ்வதி அவர்கள் நேற்று (08.08.2005) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் கற்கண்டுவின் அன்பு மனைவியும் தங்கேஸ்வரன், தங்கேஸ்வரி (பிரான்ஸ்), தயாபரன் (பிரான்ஸ்), செல்வேந்திரம், திசமலர் ஆகியோரின் அன்புத் தாயாரும் செல்வமலர், திலஷ்சி, மனோகரன் (பிரான்ஸ்), செல்வகுலம் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.08.2005) செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் எள்ளங்குளம் இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இலந்தைக்காடு,
வல்வெட்டித்துறை. (38642)(21.16.18)
தகவல்: குடும்பத்தினர்.

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

## உறவினர்போல வாழும் விருப்பம்

நாங்கள் தமிழ்ச் சமூகத்துக்கு எதிரானவர்கள் அல்லர். தமிழ்ச் சமூகத்தின் போராட்டத்தைக் காட்டிக் கொடுப்பவர்களும் அல்லர். தமிழ்ச் சமூகத்துடன் மோதிக்கொண்டு வாழவேண்டும் என விரும்புபவர்களும் அல்லர். மாறாகத் தமிழ்ச் சமூகத்துடன் சேர்ந்து உறவினர்கள் போல வாழவேண்டும் என்ற எண்ணத்தைக் கொண்டவர்கள்.

- இவ்வாறு பகர்ந்திருப்பவர் புனர்வாழ்வளிப்பு வன்னி மாவட்ட அபிவிருத்தி அமைச்சர் ரிஷாத் பதியுதீன். வவுனியா நகர மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் வைத்து அவர் இதனைத் தெரிவித்திருக்கிறார்.

அமைச்சர் ரிஷாத்தின் இந்தக் கருத்து முஸ்லிம் மற்றும் தமிழர் தரப்புகளால் அக்கறையுடன் மனதிற் கொள்ளப்பட்டிருக்கும்.

இந்த இரண்டு தரப்பினருமே இந்த நாட்டில் சிறுபான்மை இனங்களாக வாழ்பவர்கள். வடக்கு - கிழக்கைச் சேர்ந்தவர்கள். வெவ்வேறு மதங்களை அனுஷ்டித்தாலும் மொழியால் ஒன்றுபட்டவர்கள்.

அதன் காரணமாக சிங்கள - பௌத்த பேரினவாத மேலாதிக்கத்தினால் பாதிக்கப்படுவர்கள் - நசுக்கப்படுபவர்கள். இரு தரப்புகளின் வாழ்க்கை அவலங்களும் கஷ்டங்களும் அநேகமாக ஒரே மாதிரியானவை.

வடக்கு - கிழக்கு வாழ் தமிழ், முஸ்லிம் மக்கள் தங்கள் உரிமைகளுக்காக ஒன்றுசேர்ந்து குரல்கொடுத்த காலமும் உண்டு. ஆனால், அந்த நிலைமை - ஒற்றுமை - இன்று இல்லை.

வடக்கு - கிழக்கு முஸ்லிம்களின் தலைமைகள் வெவ்வேறு பிரிவுகளாகப் பிளவுபட்டதால், அந்தத் தலைமைகள் தமது மக்களுக்காக அன்றித் தமக்காக - தமது அரசியல்சார் நன்மை கருதி - செயற்படுவதால் முஸ்லிம் - தமிழர் ஒற்றுமை குலைந்துபோனது.

சிறுபான்மையினராகிய தாம் இன்னொரு சிறுபான்மையினருடன் சேர்ந்துநின்று, ஆதிக்க மற்றும் அடக்குமுறைக் குணம்கொண்ட சிங்களப் பெரும்பான்மையினிடம் இருந்து தமக்குரிய உரிமைகளைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்ற நிலையிலிருந்து முஸ்லிம் தலைவர்கள் விலகிச் சென்றதன் விளைவு இது.

பெரும்பான்மையினரோடு அரசியல் உறவு கொள்வதால் சலுகைகளை மட்டுமே பெறலாம்; உரிமைகளை அல்ல. இந்த நடைமுறை உண்மையை முஸ்லிம் தலைவர்கள் தமது சுயநன்மைகள் கருதி மறந்து போனதும் இன்றைய பாதக விளைவுக்கு ஒரு காரணம்.

வடக்கு - கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் தலைமைத்துவங்களை அந்த மாநிலத்தைச் சாராதவர்கள் பெற்றுக்கொண்டதும் செல்வாக்குச் செலுத்தியதும் தமிழர் - முஸ்லிம்களின் அரசியல் உறவில் விரிசல்கள் உண்டாகக் காரணமாகின.

தமிழர் - முஸ்லிம் பெருவிரிசலைக் குறைக்கும் நோக்குடன் கைச்சாத்தானது தான் பிரபா - ஹக்கீம் உடன்பாடு. ஆனால், அரசியல் - அரசு - பதவிகளை மனதிற்கொண்டு, முஸ்லிம் தலைமைத்துவங்கள் உடன்பாட்டை அசட்டை செய்யும் வகையில் நடந்து கொண்டன.

பெரும் சர்ச்சைகள், அரசியல் குழப்பங்களுக்கு மத்தியில் உருவாக்கப்பட்டு, நீதிமன்றத்தினால் தடக்குப் போடப்பட்டிருக்கும் ஆகப்பிந்திய ஏற்பாடான பொதுக்கட்டமைப்பு விடயத்தில் கூட, முஸ்லிம் தலைவர்கள் கள யதார்த்தத்தைப் புரிந்துகொள்ளாமல் செயற்பட்டார்கள்.

தம்மை ஓர் அரசாகவே கருதிப் புலிகள் தமது தொழிற்பாடுகளை முன்னெடுக்கின்றனர். அவர்களுடன் நாம் பேச வேண்டும் என்று பிரபல சட்டத்தரணி எம்.எம். அழஸ்கஸாம் ஒருமுறை கூறியிருந்தார்.

அவரது கருத்துக்களைச் சுட்டிக்காட்டி முன்னர் ஒரு தடவை (30.06.2005 இல்) இப்பத்தியில் விவரித்திருந்தோம். ஆனால், முஸ்லிம் அரசியல் தலைவர்களுக்கு அது உறைக்கவில்லை.

எப்படியோ, வன்னி மாவட்ட அமைச்சர் ரிஷாத் பதியுதீன் இப்போது முன்வைத்திருக்கும் கருத்துக்களை வடக்கு- கிழக்கு வாழ் முஸ்லிம் மக்கள் கவனத்தில் கொள்வதுடன் மட்டுமின்றி கரிசனையும் கொள்ள வேண்டும்.

வடக்கில் தமிழ் மக்களுக்கு அளிக்கப்படுகின்ற உரிமைகளுக்குச் சமனாக முஸ்லிம்களுக்கும் உரிமைகள் கிடைக்கச் செய்வதை விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் உறுதிப்படுத்த வேண்டும் என்றும் ரிஷாத் கேட்டிருக்கிறார்.

இந்த நியாயமான கோரிக்கை சாதகமாகப் பரிசீலிக்கப்படும் என நம்பலாம்.

# சுயதொழில் வாய்ப்பை மேம்படுத்த தொழில்சார் பயிற்சி வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஓக.9

யாழ்.மாவட்டத்தில் சுயதொழில் வாய்ப்பை மேம்படுத்தும் நோக்கில் குறுகிய கால தொழில்சார் பயிற்சி நெறிகளை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வடக்கு- கிழக்கு மாகாணத் தலைமைச் செயலாளரின் நிதியுதவியுடன், யாழ். அரச அதிபரின் மேற்பார்வையின் கீழ் யாழ்ப்பாணக் கல்லூரி, தொழிற்பயிற்சி அதிகாரசபை, தேசிய இளைஞர் சேவை மன்றம், தொழில்துறைத் திணைக்களம் ஆகியவை இணைந்து இத் தொழில்சார் பயிற்சிநெறிகளை நடத்தவுள்ளன.

யாழ்ப்பாணக் கல்லூரியில் 'எயார் கண்டிஷனர்', இயந்திரவியல் ஒட்டு வேலை, இணைப்பு வேலை ஆகியவற்றையும்-

தொழிற்பயிற்சி அதிகாரசபையினால் மோட்டார்சைக்கிள் திருத்துதல், வீட்டு மின்னிணைப்பு, அலுமினிய இணைப்பு, தச்சுவேலை ஆகியவையும்

தேசிய இளைஞர்சேவை மன்றத்தினால் குழாய் இணைப்புப் பயிற்சியும்-

தொழில்துறைத் திணைக்களத்தினால் கயிறு திரித்தல், தச்சு, மட்பாண்ட அலங்காரம், உணவு பதனிடல், வீட்டு மின்னிணைப்பு ஆகியவற்றையும் தொழில்சார் பயிற்சி நெறிகளாகப் பயிற்றுவிக்கப்படவுள்ளன.

இதற்கென வடக்கு- கிழக்கு மாகாணத் தலைமைச் செயலாளரினால் 22.5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பயிற்சி நெறியில் இணைந்து கொள்பவர்களுக்கு நாளாந்தம் 200 ரூபா வீதம் வழங்கப்படும்.

இப் பயிற்சி நெறியில் இணைந்து கொள்ள விரும்புபவர்களை தொழிற் பயிற்சி அதிகாரசபை இணைப்பாளர் (0212223546), தொழில்துறைத் திணைக்கள முகாமைத்துவ உதவியாளர் (021 222 3546), யாழ்ப் பாணக் கல்லூரிப் பணிப்பாளர் (060 221 3139), தேசிய இளைஞர் சேவை மன்ற உதவிப் பணிப்பாளர் (021 222 2526) ஆகியோருடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ். செயலக பிரதித் திட்டப் பணிப்பாளர் கே.குணாளசிங்கம் கேட்டுள்ளார். (எ-202-203)

# கற்கோவளத்தில் தங்கியுள்ள மக்களுக்கு நிரந்தர வீடுகள் அமைக்கும் பணி ஆரம்பம்

கரவெட்டி,ஓக.9

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பெரும் பாதிப்பிற்குள்ளான கற்கோவளம் புனித நகர் இடைத்தங்கல் முகாமில் தங்கியுள்ள நாகர்கோவில் மக்களுக்கான நிரந்தர வீட்டுத்திட்டம் கடந்த சனிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ் தலைமையில் நடைபெற்றது.


இதில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஸும் சிறப்பு விருந்தினர்களாக கே.பி.நிதி உதவிவழங்கும் நிறுவனப் பிரதிநிதி ரா.ஆசீர்வாதம், ஹற்றன் நஷனல் வங்கியின் பிரதிநிதி ஆர். தியாகராசா ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினர்.

ஆரம்ப கட்டமாக 50 வீடுகள் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது.

பிரதம விருந்தினர் கே.கணேஸ், சிறப்பு விருந்தினர்களான ரா.ஆசீர்வாதம், ஆர்.தியாகராசா ஆகியோர் அடிக்கற்களை நாட்டினர்.

மேலதிக அரச அதிபர் எஸ்.சிவசுவாமி வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன், பருத்தித்துறை பிரதேச செயலர் எஸ். தனேஸ்வரன், புலோலி பிரதேசசபை செயலர் எஸ்.பசுபதி ஆகியோரும் உரையாற்றினர். இறுதியாக நாகர்கோவில் கடற்றொழிலாளர் சங்கத்தலைவர் கி.சிவசாமி நன்றியுரை வழங்கினார்.

(த-70)






முதலாவது அடிக்கல்லை யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கனேஷ் நட்டுவைப்பதையும் நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் என். இரவிராஜ் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள் : எஸ்.சுந்தரலிங்கம்)

# பழமரத் தாவரங்களைப் பேண நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஓக.9

பழமரத் தாய்த் தாவரங்களைப் பேணும் நடவடிக்கை யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்த நடவடிக்கை விவசாயத் திணைக்கள மாவட்ட பயிற்சி நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதன் முதற்கட்ட செயற்பாடாக விவசாயப் போதனாசிரியர்கள் தங்கள் பிரிவு ரீதியில் நல்லின பழமரத் தாவரங்களை அடையாளம் கண்டனர். தற்போது அவை விவசாய ஆராய்ச்சிப் பகுதியினரின் உதவியுடன் ஆவணப் படுத்தப்பட்டு, அவற்றில் இருந்து இனவிருத்தி மூலம் புதிய கன்றுகளை உருவாக்கும் நடவடிக்கையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மா, பலா, வாழை, மாதுளை, கொய்யா, தேசி, தோடை, நெல்லி போன்ற நல்லினக் கன்றுகளை 3 ஏக்கர் நிலப்பரப்பில் உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்று யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் அ.செல்வராஜா தெரிவித்தார்.

இத் திட்டத்திற்குத் தேவையான நிதியை நிவாரணம் மற்றும் புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சு வழங்கியுள்ளது. (எ-ரி)

# பதிவுசெய்யப்படாத மருந்து விற்பனை குறித்து பரிசோதகர் அறிவுறுத்து

வலி.தென்மேற்கு,ஓக.9

கொழும்பிலுள்ள ஔடதங்கள், உபாயங்கள் அதிகார சபையில் பதிவு செய்யப்படாத 'ராதா மின்சார மருந்து' என்ற லேபலிடப்பட்ட மின்சார மருந்து யாழ்.மாவட்டத்தில் கடைகளில் விற்பனை செய்யப்பட்டு வருவதாகவும் -

இதனை விற்பது சட்டவிரோதமானது என்றும் - யாழ்.மாவட்ட உணவு மருந்துப் பரிசோதகர் ரி.மகாதேவன் தெரிவித்தார்.

அண்மையில் பருத்தித்துறைப் பகுதியிலுள்ள கடை ஒன்றில் பதிவு செய்யப்படாத ராதா மின்சார மருந்து விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தது கண்டு பிடிக்கப்பட்டதாகவும் -

இது தொடர்பாக பருத்தித்துறை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் கடை உரிமையாளருக்கு மூவாயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதாகவும் - உணவு மருந்துப் பரிசோதகர் மேலும் தெரிவித்தார்.

வேலணையிலுள்ள கடை ஒன்றிலும் இவ்வாறு ராதா மின்சார மருந்து என்ற லேபலிட்ட மின்சார மருந்து விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (9-ரி)

## உதயவாக்கு

கடவுள் உண்மையான பக்தன் ஒருவனுடைய ஒவ்வொரு சிறுகாரியத்திலும் புகுந்து காட்சி தருவார்.

- காந்தியடிகள்.

## நாளை

ஆடி 25
புதன்கிழமை
10.08.2005
திதி: பஞ்சமி
பிற்பகல்: 4.05 வரை
நட்சத்திரம்: அத்தம்
பிற்பகல்: 3.35 வரை
சுபநேரம்: 4.34 - 6.04
ராகுகாலம்: 12.04 - 1.34
(யாவும் பழைய நேரப்படி)



# பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் அதிபர்
# உயர்திரு. வேலுப்பிள்ளை பத்மநாதன் அவர்களின்
# சேவைநலன் பாராட்டுச் சிறப்புமலர் - 09.08.2005

### இறை ஆசி என்றும் உங்களோடு...

மெதடிஸ்த மிஷனரிகளின் அயராத உழைப்பினாலும் தியாகத்தினாலும் உருவானதும் யாழ்ப்பாணத்தின் புகழ் பரப்பி உயர்ந்து நிற்பதுமான ஹாட்லிக்கல்லூரியில் கற்பதென்பது பெரும்பாக்கியம். அதிலும் கற்பிப்பதென்பதும் கட்டியாள்வதும் அரும் பெரும்பாக்கியம். இவ்விதத்தில் மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் கல்வியைத்தொடங்கி அதே மிஷன் பாடசாலையில் பணிவாழ்வை முடிப்பது என்பது அதிபர் திரு.பத்மநாதன் அவர்களுக்கு கிடைத்த பெரும் பாக்கியம். வடக்கில் மட்டுமல்ல தென்தமிழீழத்திலும் தன் சேவையை விரித்து ஹாட்லிக் கல்லூரியின் வளர்ச்சியிலும் பெரும்பங்காற்றிய ஆசானை வாழ்த்துவதிலும் பெரும் மகிழ்ச்சிதான். கல்லூரிக்குள் புகும்போதே அமைதியும் அடக்கமும் ஆரவாரமற்ற ஆளுமையை வெளிப்படுத்துவதில் அவருக்கு நிகர் அவரே. சட்டத்தை மதிப்பதும் பேணுவதும் அவரது சிறப்பியல்பு. இப்பேர்ப்பட்ட ஒரு சிறப்பான அதிபரை ஹாட்லிக் கல்லூரி பெற்றமை தேவகிருபையே. ஆண்டவரது நிறைவான ஆசிஅவரது ஓய்விலும் நிறைவாய் இருப்பதாக.

அருள்திரு. G.A. சதீஸ்
பொறுப்புக் குரு, மெதடிஸ்த ஆலயம், பருத்தித்துறை

### சேவையைத் திருப்தியுடன் செய்தவர்

திரு.வேலுப்பிள்ளை பத்மநாதன் தனது 60 ஆவது வயதை 2005-08-08 இல் பூர்த்தி செய்வதையிட்டு அவர் ஹாட்லிக் கல்லூரி அதிபர் பதவியிலிருந்து ஓய்வுபெறுகின்றார். 2003-01-01 இல் ஹாட்லிக் கல்லூரியின் அதிபராக இவர் பதவியேற்றுக் கல்லூரியின் பாரம்பரியத்தை பேணி வந்ததையிட்டு பழைய மாணவன் என்ற ரீதியில் நான் நன்றி கூறுகின்றேன். கடந்த மூன்று ஆண்டுகளாக கல்லூரி கல்வியில் மட்டுமன்றி ஒழுங்கு கட்டுப்பாடு விளையாட்டுகள் என்பவற்றிலும் முன்னேற்றம் அடைந்துள்ளது. தனது குடும்பச் சூழலையும் பொருட்படுத்தாது இக்கல்லூரியின் அதிபர் பதவியைப் பொறுப்பேற்று மிகத்திறம்பட நடத்தியுள்ளார். இவர் பழைய மாணவர் சங்க கிளைகளுடன் நெருங்கிய தொடர்பை வைத்திருந்தார். கல்லூரி நிகழ்வுகளை எங்களுக்கு அறியத்தருவார். கல்லூரித் தேவைகளை எங்களுக்கு அறிவிப்பதன் மூலம் நாங்கள் கல்லூரிக்கு எங்களால் இயன்ற உதவிகளை செய்யக்கூடியதாக இருந்தது.

கஷ்டமான சூழலில் இவர் அதிபராகக் கடமையாற்றியது பெருமைப்படவேண்டிய விடயமாகும். அவர்தன் சேவையை திருப்தியுடன் நிறைவேற்றி ஓய்வு பெறுவதையிட்டு வாழ்த்துகின்றேன். இவரது ஓய்வுகாலம் சிறப்பாக அமையவேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

ஆ.பாலச்சந்திரன்
தலைவர், பழைய மாணவர் சங்கம், கொழும்புக்கிளை.

### சேவையின் சிகரம்




ஹாட்லிக்கல்லூரி அதிபராக இருந்து ஓய்வுபெறும் திரு.வே.பத்மநாதன் என்பாடசாலை நண்பன். இதே பாடசாலையில் கா.பொ.த உயர்தரத்தில் ஒரே வகுப்பில் கல்வி கற்றோம்: அதே போன்று யாழ்.பல்கலைக் கழகத்தில் உள்வாரியாக கணிதப் பட்டதாரிப் படிப்பையும் ஒரே காலத்தில் ஒன்றாகவே மேற்கொண்டோம். இருவரும் கல்முனையில் கடமை ஆற்றும்போது இருகுடும்பமும் ஒரே வீட்டில் தங்கியிருந்தோம். இதனால் பாடசாலை நட்பு குடும்ப நட்பாக மாறி இன்றுவரை தொடர்கிறது.

நண்பன் சிறந்த ஓர்ஆசிரியன். கல்முனை வெஸ்லிக் கல்லூரியில் ஒரு திறமைமிக்க கணித ஆசிரியர். பின்பு கணிதபாட ஆசிரிய ஆலோசகராக சிறப்பாக கடமை ஆற்றினார். பருத்தித்துறைப் பாடசாலைகளில் அதிபராகத் திறம்படப் பணியாற்றினார். கடமையை கடமை உணர்வுடன் செய்த ஹாட்லி அன்னையின் மைந்தன் படித்த கல்லூரியிலே அதிபராக இருந்து ஓய்வுபெறுவது அவர் சேவைக்குக் கிடைத்தபரிசு. அவர்பணி சமூக சேவையாக மாறி மகிழ்வுடன் நீடூழி வாழ வாழ்த்துகின்றேன்.

வி.அருளானந்தம்,
பிரதிக்கல்விப்பணிப்பாளர், வலயக்கல்வி அலுவலகம், வடமராட்சி

### நிறைவான பணியில் நிறைவுகண்டார்



வடமராட்சியின் மகுடம் யா/ஹாட்லிக் கல்லூரியின் அதிபராக இருந்து ஓய்வுபெறும் திருவாளர் வே.பத்மநாதன் அவர்கள் ஹாட்லிக் கல்லூரியின் கல்விப் பாரம்பரியத்தைக் கட்டிக்காப்பதில் அயராதுபாடுபட்டவர். கடமையுணர்வு கொண்டவர். மாணவர்களின் கல்வி, ஒழுக்கம், செயற்பாடு ஒவ்வொன்றினையும் செவ்வனே செயற்படுத்தும் ஆற்றல்கொண்டவர். இடர்கள், துன்பங்கள் வந்தபோதும் மனம் தளராது செயற்பட்டு பாடசாலையின் அபிவிருத்திக்கு அரும்பணியாற்றியவர். அவருடைய சேவையைப் பாராட்டிக் கௌரவிப்பதில் நாம் மகிழ்ச்சியடைகின்றோம். எமது பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு அவர் ஆற்றிய சேவை அவரை நீண்ட ஆயுளுடனும் சுகநலத்துடன் வாழவைக்கும் என்பதில் ஐயம் இல்லை.

அவர்தம் வாழ்வு மலர பாடசாலை அபிவிருத்திச் சபையின் சார்பில் வாழ்த்துகின்றோம்.

பொன்.ஸ்ரீபவன்
செயலாளர், பாடசாலை அபிவிருத்திச் சபை,
யா/ஹாட்லிக் கல்லூரி.



### அதிபர் திரு.வே.பத்மநாதனின் சேவை விவரம்

| | |
|---|---|
| பெயர்:- | வேலுப்பிள்ளை பத்மநாதன் |
| கல்வி கற்ற பாடசாலை:- | யா/தட்டாதெரு மெமி. பாடசாலை 1951-1953 |
| | யா/ஹாட்லிக் கல்லூரி 1954-1965 |
| ஆசிரியர் நியமனம்:- | 01.10.1969 |
| ஆசிரியர் சேவை:- | 01.10.1969 -31.05.1991 |
| அதிபர் நியமனம்:- | 01.06.1991 |
| அதிபர் நியமனம்:- | 01.01.2003 -08.08.2005 |
| யா/ஹாட்லிக் கல்லூரி அதிபர்:- | 01.01.2003 -08.08.2005 |

### ஆளுமையும் அமைதியும் மிக்க எமது அதிபர் !

கல்வி அறிவியல் துரிதமாக வளர்ச்சிஅடைந்துவரும் ஒரு பெருந்துறையாகும். இத்துறையில் பெரும்பான்மை வகிப்பவர்கள் ஆசிரியர்களும் மாணவர்களும் ஆவர். இதில் நல்ல ஆசிரியர்களை உருவாக்க சிறந்த அதிபரின் மேற்பார்வை முகாமைத்துவமே முதன்மை பெறுகின்றது. ஆசிரியத்து வாண்மை, நேரமுகாமைத்துவம், வகுப்பறை முகாமைத்துவம், பாடமுகாமைத்துவம் இவை அனைத்தையும் கட்டிக்காக்கும் விழுமியமுகாமைத்துவம் சிறந்த அதிபரின் தொழில் வாண்மையிலும் ஆளுமையிலும் தங்கியுள்ளது. இந்த வகையில் எமது கல்லூரி அதிபர் 2002.12.31 ஆம் திகதி தொடக்கம் இன்றுவரை சேவை ஆற்றிய வேலுப்பிள்ளை பத்மநாதன் அவர்கள் சகல நலன்களுடன் பெற்று நீண்ட வாழ்நாளும் கிட்டவேண்டும் என்று இந்த அறுபதாவது அகவையில் அவரை வாழ்த்தி ஆசிகூறுவதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

இலங்கை ஆசிரியர்கள் கல்வி கற்பிக்கும் கற்றல் கடமைகளில் அதிபருடைய தொடர்நிலையான கண்காணிப்பும் மேற்பார்வையும் சமாதான நோக்கும் விழுமியத்தின் செழுமையும் நல்ல ஆசிரியர்களில் பல பேரையும் உருவாக்க உதவுகின்றது. அதிபரின் செயற்பாடுகள் சிறந்த ஆலோசனைப் பெட்டகமாகும். அவரின் கடமை அருமையான வழிகாட்டலாக இருக்கவேண்டும். அத்தகைய சிறந்த செழுமையையும் எங்கள் கல்லூரியின் விழுமிய நோக்கத்தையும் சிரசு மேற்கொண்டு ஆளுமையோடும் அமைதியோடும் செயற்பட்டு வருபவர் எமது அதிபர். இன்றைய தினம் ஓய்வுபெறும் அதிபர் அவர்களுக்கும் அவரின் குடும்பத்தினருக்கும் எல்லாநலன்களும் கிடைக்கவேண்டும் என்று நாம் வணங்கும் நெல்லண்டை ஸ்ரீ பத்திரகாளி தும்பளை லஷ்சுமணன் தோட்டம் அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி வடபத்திராளி அம்மனை தினமும் பணிகின்றேன்.

சைவசித்தாந்த பண்டிதர்
சிவஸ்ரீ தியாக சோமாஸ்கந்தராஜா குருக்கள் (M.A)

### 'பத்ஸ்' பண்பின் சிகரம்



திரு.வே.பத்மநாதன் அவர்களை கடந்த 44 வருடங்களாக எனக்குத்தெரியும். ஏனெனில், நான் ஹாட்லிக் கல்லூரியில் 1961 இல் சேர்ந்தபோது அதே வகுப்பின் வேறுபிரிவில் அவர் கல்வி கற்றுக்கொண்டிருந்தார். நான் நீர்கொழும்பு மாரிஸ் ஸ்டெல்லாக் கல்லூரியிலிருந்து வந்தபடியால் எல்லோரும் தாங்களாகவே வந்து அறிமுகம் செய்துகொண்டனர். திரு.வே.பத்மநாதன் அவர்கள் படிக்கும்போதே மிக அமைதியானவர். எங்களுக்கு சில பாடங்கள் பொதுவாக நடப்பதுண்டு. அப்போது நாங்கள் ஒரே வகுப்பில் இணைந்திருப்போம். இக்காலத்தில் போலல்லாது அக்காலகட்டத்தில் மாணவர்கள் சரியாகப் பாடத்தைக் கவனிக்காவிட்டால் ஆசிரியர்களின் நடவடிக்கையும் சற்றுக் கடுமையாகவே இருக்கும். எனது நினைவிற்கு தெரிந்தவரையில் ஆசிரியர்களின் கண்டன நடவடிக்கைகளுக்குத் திரு.வே.பத்மநாதன் ஆளானதில்லை என்றே சொல்லலாம். பாடத்தைச் சரியாகக் கவனித்து மனதில் வாங்குவது, வீட்டுப் பாடங்களைக் குறித்தநேரத்தில் செய்துவிடுவது போன்ற செயல்கள் அவரை ஆசிரியர்களின் செல்லப்பிள்ளை ஆக்கியது என்று சொன்னால் மிகையாகாது. 'பத்ஸ்' என்று நாங்கள் அவரைச் செல்லமாக அழைப்போம்.

பள்ளிக்கூட வாழ்க்கைக்குப் பின்னர் எங்கள் வாழ்க்கை வெவ்வேறு துறைகளில் இணைந்துகொண்டது. நான் வங்கித்துறைக்கு வந்ததைப் போல திரு.வே.பத்மநாதனும் கல்வித்துறையில் ஆசிரியராக வாழ்க்கையைத் தொடங்கினார். எமது துறைகள், பணியாற்றிய இடங்கள் போன்றவை வெவ்வேறாக இருந்ததினால் நாம் அடிக்கடி சந்தித்துக்கொள்ளும் வாய்ப்பும் குறைந்தது.ஆனால், நான் ஊருக்கு வரும் போதெல்லாம் ஏதாவது ஒருவகையில் நாங்கள் சந்திக்கச் சந்தர்ப்பம் வந்ததுண்டு. அவர் ஒருபோதும் ஒருவரையும் மறப்பதில்லை. அன்றும் நான் அவருக்கு பாலாதான். இன்றும் அப்படித்தான் அவர்களின் நல்லாசிகளும் அவரது தன்னலம் கருதா சேவையும் காலத்தைக் கடந்து நிற்கும் ஹாட்லியின் சரித்திரத்திலே இன்னோர் ஏடும் எழுதப்பட்டு நிலைக்கப்போகின்றது. அவரது ஓய்வுகாலத்திலும் கல்விக்கும் மாணவசமூகத்திற்கும் அவரது சேவை கிடைக்கவேண்டி அவருக்கு என் மனமார்ந்த ஆசிகளையும் கூறுகின்றேன்.

இறைவன் அவருக்கு நீண்ட ஆயுளையும் நற்சுகத்தையும் கொடுக்கவேண்டும் என்று உளமாரப் பிரார்த்திக்கிறேன்.

க.பாலசுப்பிரமணியம்
தலைவர், பழைய மாணவர் சங்கம், ஹாட்லிக் கல்லூரி.

### ஹாட்லிக் கல்லூரியுடன் இணைந்துள்ளவர்களுக்கு...

திரு.வே. பத்மநாதன் அவர்கள் ஹாட்லிக் கல்லூரியில் அதிபர் சேவையைப் பூர்த்தி செய்வதோடு, தீவிர அரசசேவையிலிருந்து இளைப்பாறுவதை முன்னிட்டு இந்த வாழ்த்துச் செய்தியை அனுப்பிவைப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

ஹாட்லிக்கல்லூரி பழைய மாணவர் சங்க நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை 2002ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட போது நாங்கள் சேர்ந்து பணியாற்றவேண்டிய முக்கியமானவர்களில் ஒருவர் கல்லூரியின் அதிபராக இருந்தார். மேலும் கடந்த மூன்று வருடங்களில் கல்லூரிக்கான முக்கிய அபிவிருத்தித் திட்டமொன்றைத் தயாரிப்பதிலும் சில குறிக்கோள்களை நிறைவேற்றுவதிலும் திரு. பத்மநாதன் பேருதவி புரிந்துள்ளார். நாங்கள் விளக்கங்கள் கேட்டு அடிக்கடி அவரிடம் சென்ற போதெல்லாம் உண்மையான ஒரு ஹாட்லிவாதியாக முணுமுணுப்பு எதுவுமின்றி பலத்த வேலைப்பளுவுக்கு மத்தியிலும் அவர் எமக்கு உதவியுள்ளார். அண்மைக்காலத்தில் தனிப்பட்ட முறையில் அவர் பல்வேறு இடர்களை எதிர்கொண்ட போதிலும் மனந்தளராது அர்ப்பணிப்புடன் சேவை புரிந்ததை நாம் நன்றியுடன் நினைவு கூருகின்றோம். கல்லூரியின் வளர்ச்சிக்கு திரு.பத்மநாதன் ஆற்றிய அரும்பணிக்காக இந்தச்சந்தர்ப்பத்தில் அவருக்கு நன்றி கூறுவதுடன் அவர்களது வாழ்க்கையின் மிகுதிக்காலத்தை மனநிம்மதியுடனும் மகிழ்ச்சியுடனும் வாழ வாழ்த்துகிறேன்.

சண். சண்முகநாதன், தலைவர்,
ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர் சங்கநம்பிக்கைப் பொறுப்பாளர் சபை.

### எழுச்சிக்காக உழைத்த ஏற்றமிகு அதிபர் !



வடமராட்சிப் பிரதேசத்தின் கல்வி வரலாற்றில் கனதிமிக்க கற்றோரைத் தந்த பெருமை ஹாட்லிக் கல்லூரிக்கே உரியது. இப்பள்ளியின் எழுச்சிக்கு எருவாக இருந்த ஆசிரியர்கள், அதிபர்கள் பலர். இப்பள்ளியின் இறந்தகால முதல்வர்கள் சிலர் இன்றும் முகாமையாளர்களுக்கு உதாரணமாகக் காட்டப்படுகின்றனர். இவ்வரிசையில் இப்பள்ளியின் இரண்டரை ஆண்டுகாலம் முதல்வராகப் பணியாற்றி ஓய்வுபெறும் திரு.வே.பத்மநாதனுக்கு வாழ்த்துரை வழங்குவதில் மட்டிலா மகிழ்ச்சியடைகிறேன்.

திரு.வே.பத்மநாதன் இப்பள்ளியில் குறுகிய காலமே முதல்வராகப் பணியாற்றியுள்ளார். ஆயினும் இக்குறுகிய காலம் நெருக்கடிகள் நிறைந்தது. இந்நெருக்கடிகள் அனைத்திற்கும் முகங்கொடுத்து இவர் இப் பள்ளியின் எழுச்சிக்கு உழைத்துள்ளார். இவ்வகையில் இப்பள்ளியின் நீண்ட வரலாற்றில் இவர் பெயர் நிச்சயம் பதியப்படும். திரு.வே.பத்மநாதனின் கல்விப்பணி மிகவும் நீண்டது. பதுளையிலே ஆசானாக ஆரம்பித்த இவரது கல்விப்பணி பள்ளிமுதல்வராக உயர்ச்சிபெற்று முடிவடைந்துள்ளது. தனது இறுதி இரண்டரை ஆண்டுகளையும் தான் கல்விகற்ற ஹாட்லிக் கல்லூரிக்கு இவர் வழங்கியுள்ளார்.

பத்மநாதனின் பணி என்றும் நினைவு கூரப்படும். அவர் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றேன்.

வ.செல்வராசா
வலயக் கல்விப் பணிப்பாளர், வடமராட்சி.

### செய்திறன் மிக்க அதிபர்

கற்றல், கற்பித்தலை மேம்படுத்துவதன் மூலம் மாணவர்களின் கல்வித்தரத்தை அதிகரிக்கமுடியும். அத்துடன், தேர்ச்சிமட்டத்தை அடையும் மாணவர்கள் எண்ணிக்கையையும் அதிகரிக்கலாம் என்பது கோட்பாடு. பாடசாலை மட்டக் கணிப்பீடு ஆனது கற்றல் செயல் ஒழுங்கு, கற்பித்தல் செயல் ஒழுங்கு கணிப்பீட்டின் தரம் ஆகியவற்றை மேம்படுத்தி கல்விப்பேற்றை உயர்த்துகிறது. இவை அனைத்தையும் ஒருங்குசேர செயற்படுத்துபவர் எமது அதிபர்.

சிலருக்கு பதவியால்தான் பெயர் ஆனால் இக்கல்லூரியின் பாரம்பரியம் பதவி வகிப்பவரால் பதவிக்கு மெருகேற்பட்டுவிடுகிறது. திரு.வே.பத்மநாதன் அவர்களும் தமது கடமைப்பற்று என்பவற்றால் பலவித இன்னல்களுக்கும் அழுத்தங்களுக்கும் மத்தியில் இப்பிரமாண்டமான கல்லூரியின் பொறுப்பை ஏற்று செயற்திறனுடன் நிறைவான கடமையாற்றி ஓய்வு பெறுகிறார். குறிப்பாக அவரின் குடும்பத் தலைவிக்கு இடையறா ஏற்பட்ட துன்பங்களைத் தாங்கி இக்கல்லூரியின் பொறுப்பைச் சுமப்பது மிகவும் கஷ்டமான காரியம்தான். காலத்தால் ஏற்பட்ட தடையையும் தாண்டி அதனைவெற்றி கண்டவர். மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகிகள் போன்றோர்கள் முரண்பாடுகள் இன்றிச் சமாதானமாகவருகின்ற தடைகளைமிகஇலகுவாகத் தீர்ப்பதில் வல்லவர். எடுத்த முடிவிலிருந்து சிறிதும் மாறாத உறுதியுடையவர்.

1998, 1999 களில் அறிமுகஞ்செய்யப்பட்ட கல்விச் சீர்திருத்தத்தின் பின்வரும் நிகழ்ச்சித் திட்டங்களை சரியான முறையில் முகாமைத்துவம்செய்து மன்றங்கள் போன்ற அனைத்தையும் மேற்பார்வை செய்து கல்லூரிச் செயற்பாட்டிற்கும் கல்விச் சீர்திருத்தத்திற்கும் பாரிய சேவை ஆற்றிய எமது அதிபர் அவர்களைப் பாராட்டி வாழ்த்தி அவருக்கு சகல நலன்களையும் வழங்கவேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

மாணவர்கள், ஆசிரியர்கள், ஊழியர்கள்.

### தளராத மனத்தையுடையவர்



வாழ்க்கையில் எத்தனை சோதனைகள் வந்தாலும் தளராத மனத்தையுடையவர் பத்மநாதன். தன்னை உருவாக்கிய கல்லூரித் தாய்க்கு விருப்புடன் சேவையாற்ற முன்வந்து அத்தொண்டினையும் நிறைவேற்றியவர். அதிபராகக் கடமையாற்றிய பாடசாலைகளின் நிர்வாகத்தை அவரது இழப்புகள் ஏதுவும் பாதிக்காது செவ்வனே கடமையாற்றியவர். ஒரு சிறந்த கணித ஆசானாகிய திரு.வே.பத்மநாதன் ஓய்வுகாலத்திலும் கணிதபாட மேம்பாட்டிற்கு உழைக்க எனது வாழ்த்துக்கள்.

வே.தி.செல்வரத்தினம்
வலயக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்.

### நேர்மை மிக்க அதிபர்



அகவை அறுபதில் ஓய்வுபெறும் அதிபர் திரு.வே.பத்மநாதன் அவர்களின் சேவையைப் பாராட்டி வாழ்த்துவதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். இவர் அறுபதிலும் இளமைத் தோற்றம் கொண்டவர். தனது எண்ணங்களையும் கருத்துக்களையும் எச்சபையிலும் அச்சம் இன்றி முன்வைப்பவர். சிறந்த கணித ஆசிரியர். மாணவர் முன்னேற்றத்தில் அக்கறை உடையவர். அதிபர் சேவையில் நேர்மையும் கட்டுப்பாடும்மிக்கவராகக் காணப்பட்டார். இக்கட்டான சூழ்நிலையில் ஹாட்லிக் கல்லூரியின் அதிபர் பொறுப்பை ஏற்று, கல்லூரியில் அமைதிச் சூழ்நிலையை உருவாக்கிய பெருமை இவரையேசாரும். இவரது ஓய்வு கணிதத்துறைக்குப் பேரிழப்பாகும். தொடர்ந்தும் கணிதத் துறையை மேம்படுத்த உதவுவார் என எதிர்பார்க்கின்றேன். சேவையில் ஓய்பெறும் அதிபர் தனது பிள்ளைகளுடன் நீண்டகாலம் மகிழ்வுடன் வாழ இறைவனை வேண்டுகின்றோம்.

சி.புஸ்பலிங்கம் பிரதிக்கல்விப்பணிப்பாளர்
வலயக்கல்வி அலுவலகம், (கல்வி முகாமைத்துவம்)
வடமராட்சி. கோட்டக்கல்விப் பணிப்பாளர், பருத்தித்துறை

# நமது கலாசாரத்தைப் பேணுவதற்கு இன்று ஒரு குழுவின் சேவை தேவைப்படுகிறது

## கலாசாரவிழாவில் விரிவுரையாளர் கவலை

நல்லூர், ஓக.9

கலாசாரத்தைப் பேணிப் பாதுகாக்கும் பொறுப்பு பெற்றோர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் உண்டு. உபாத்தியாயர் என்ற உயர்ந்த சொல் இன்று யாழ்ப்பாணத்தில் 'வாத்தி' என்று மாறியுள்ளது. நமது கலாசாரத்தைப் பேணுவதற்கென ஒரு குழுவின் சேவை தேவைப்படுகிறது.

- இவ்வாறு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி விரிவுரையாளர் எஸ்.குமாரவேல் கூறினார்.

நல்லூர் பிரதேச செயலக கலாசாரவிழா பிரதேச செயலர் திருமதி சு.தெய்வேந்திரன் தலைமையில் இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெற்றது.

விழாவில் குமாரவேல் தொடர்ந்துபேசும் போது கூறியதாவது:-

தமிழர்களின் கலாசாரம் ஆலயச் சூழலை மையமாகக் கொண்டு உருவானது. ஆன்மீகத்தைச் சுற்றித்தான் அது இருந்திருக்கிறது. வளர்ந்துவரும் சூழ்நிலைக்கேற்ப சில மாற்றங்கள் ஏற்பாட்டாலும்கூட நீண்ட பாரம்பரியத்தைக் கொண்டதாகவே அதன் அடி வேர் இருக்கும். முல்லைக்குத் தேர் கொடுத்த பாரி, நெல்லிக் கனி கொடுத்த அதியமான் என்று அவர்களின் காலம் முதலே கலாசாரம் வாழ்ந்து கொண்டிருக்கிறது. மனிதன் உலகில் வாழ்ந்து கொண்டிருக்கும்போது அந்த வாழ்வு விரிவடைகிறது. ஒருவனுக்கு ஒருத்தி என்ற கட்டுப்பாடான கலாசாரம் தமிழர்களுடையதாக இருந்தது. அந்தக் கலாசாரத்தின் முக்கியத்துவம் இன்று உணரப்படுகிறது.

எனினும், இன்று கலாசாரத்தைப் பேணுவதற்காக ஒரு குழு இருக்கிறது. எங்கள் நிலை எந்த அளவுக்குப் போயுள்ளது என்பதை இதனூடாக நாம் உணரமுடியும். ஆன்மீக நெறிகள் பொதிந்த எமது கலாசாரம் இது போன்ற விழாக்களால் பேணிக்காக்கக் கூடியதாக இருத்தல்வேண்டும் - என்றார்.

நல்லூர் பிரதேச செயலரும் கலாசார அமைப்பின் தலைவருமான திருமதி சு.தெய்வேந்திரன் பேசும்போது கூறியதாவது:-

ஒவ்வொரு இனத்திற்கும் ஒரு கலாசாரம் உண்டு. தமிழர்களுடைய கலாசாரம் ஒழுக்க நெறி முறைகளையும் பக்தி நெறிகளையும் கொண்டதாக உள்ளது. எமது கலைகள் இறைவனுடன் தொடர்புடையதாகவே அமைந்துள்ளன. சமூகத்தின் - இனத்தின் இருப்பை வெளிப்படுத்துவது கலாசாரமே. தமிழர்களின் வரலாற்றுப் பெருமையுடன் தொடர்புடைய நல்லூரில் அதன் பிரதேச செயலகம் கலை வளரும் இடமான இந்த மன்றத்தில் தனது கலாசார விழாவை நடத்துவது பொருத்தமானதே. தமிழர்களது கலை, கலாசாரம் வளர எமது பிரதேச செயலகம் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றும் - என்றார்.

யாழ்.மாவட்ட உதவி மாவட்டச் செயலாளர் கே.கனகரத்தினம் பேசும்போது ஏனைய இனங்களைவிட தமிழர்களின் கலாசாரம் பெருமை வாய்ந்தது என்ற நிலை இருந்தது. நாட்டில் ஏற்பட்ட போரும் அதனால் ஏற்பட்ட தாக்கங்களும் இன்று கலாசார சீரழிவுக்கு இட்டுச் சென்றுள்ளது. இந்த நிலையை மாற்றத் தமிழர்களாகிய நாம் விழிப்புடன் செயற்பட வேண்டிய காலகட்டம் இது - என்றார்.

சுவாமி விவேகானந்த சரஸ்வதி, வண. ஜெயசேகரம் அடிகளார், சமுர்த்தி உத்தியோகத்தர் எஸ்.சிவநாதன் ஆகியோரும் பேசினார்கள்.

நாட்டுப்பாடல், நாட்டக்கூத்து, புதுமையும் பழமையும் கலந்த நடன நிகழ்வுகள் யாழ்.இந்துக் கல்லூரி மாணவர்களின் வள்ளி திருமணம் இசை நாடகம் போன்ற கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ப-111)

## மாணவர் ஒழுக்கத்தில் பெற்றோர் அதிக கவனம் செலுத்தவேண்டும்

குடத்தனை, ஓக.9

மாணவர்களின் கல்வி நிலை, பாடசாலை வரவு, ஒழுக்கம், சுத்தம் என்பவற்றில் பெற்றோர் கூடிய கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொண்டார் பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலய அதிபர் இ.நாகேந்திரராஜா.

பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயத்தின் அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் அண்மையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றன. இந்த நிகழ் வில் 200 இற்கு மேற்பட்ட பெற்றோர் கலந்துகொண்டனர். இந்தக் கூட்டத்திற்கு தலைமை தாங்கி உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:-

அதிபர் நாகேந் திரராஜா மாணவர்களை தங்கள் பகுதிகளில் உள்ள வாசிகசாலைகள் மூலமாகவும் வீட் டில் ஓய்வு நேரங்களிலும் வாசிப்பில் ஈடுபடுத்தி வாசிப்புப் பழக்கத்தை அதிகரிக்கச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். (ப-78)

# பயிற்சி பெறுவது மட்டுமன்றி நுட்பங்களையும் கற்கவேண்டும்

## விளையாட்டு வீரர்களுக்கு பாப்பா அறிவுரை

வலி.வடக்கு,ஓக.9

விளையாட்டு வீரர்கள் பயிற்சிகளைப் பெறுவது மட்டுமல்லாது தொழில் நுட்பங்களையும் அறிந்துகொள்ள வேண்டும் என்று தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் மாவட்ட அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட கரபந்தாட்டப் போட்டிகள் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் யாழ்.மாவட்ட விளையாட்டு அலுவலர் றொகான் இராஜசிங்கம் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய பாப்பா தெரிவித்ததாவது:-

கிராமப்புறங்களில் இத்தகைய போட்டிகளை நடத்துவதன் மூலம் வளர்ந்து வரும் விளையாட்டு வீரர்களுக்கு ஊக்குவிப்பை வழங்கவேண்டும். அதன் மூலம் சிறந்த வீரர்களை வளர்த்தெடுக்க முடியும். புதிய வீரர்களை உருவாக்கமுடியும் இதுவே எமது விருப்பம்.

விளையாட்டுத்துறையானது இன்று நாளுக்குநாள் பல மாற்றங்களைக் கண்டு வருகின்றது. அந்த வகையில் எமது வீரர்கள் இன்னும் வளரவேண்டிய தேவையும் அவசியமும் இருக்கின்றது. யாழ்ப்பாணம், மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த அணிகள் நல்ல தேர்ச்சியான அணிகளுடன் மோதுகின்ற அளவுக்கு தகுதிகளைப் பெற்றுள் ளன.



பயிற்சியுடன் மட்டும் நில்லாது தொழில்நுட்பங்களையும் நாம் பெற்றுக் கொள்ள வேண்டும். அவற்றையும் கற்றுக்கொள்ள வேண்டும். இதற்கு விளையாட்டு உத்தியோகத்தர்கள், ஆர்வலர்கள் அனைவரும் பக்கத் துணையாக இருக்கவேண்டும். தூர இடங்களில் இருந்து வந்தவர்களை நாங்கள் பாராட்டுகின்றோம். இன்று அனைத்து அணிகளும் ஏ-9 பாதை வழியாக வந்துள்ளார்கள். அம்பாறை மாவட்ட அணியினர் சிங்கள வீர, வீராங்கனைகளாக இருந்தாலும் கடந்தாண்டு கிளிநொச்சியில் இடம்பெற்ற பெரு விளையாட்டில் கலந்துகொண்டவர்கள். எமது எண்ணங்கள், சிந்தனைகளைமுழுமையாகப் புரிந்துகொண்டவர்கள். அதன் அடிப்படையிலேயே அவர்கள் ஏ-9 பாதை வழியாக வந்துள்ளார்கள். சிங்கள அரசு எமது உரிமைகளை வழங்குவார்களா என்பதையிட்டும் நாம் சிந்திக்க வேண்டும். குண்டொன்று வெடிக்காத நாட்டை உருவாக்கும் நாள் மிகவும் நெருங்கிக் கொண்டே இருக்கின்றது. அந்தவகையில் இதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது அவசியம் .எனவும் குறிப்பிட்டார். (ப-86-204)

# தமிழையும் சைவத்தையும் காப்பாற்றிய பெருமக்களை என்றும் பாராட்ட வேண்டும்

யாழ்ப்பாணம், ஓக.9

ஐரோப்பியர் எம் மண்ணை ஆக்கிரமித்த போது அப்போதிருந்த சைவப் பெரியார்களினால்தான் சைவமும் தமிழும் காப்பாற்றப்பட்டன. திண்ணைப் பள்ளிகள் அமைத்து அவர்கள் செய்த பணிகள் என்றும் பாராட்டப்படவேண்டியவை.

- இவ்வாறு கொக்குவில் மற்றும் யாழ். இந்துக் கல்லூரிகளின் முன்னாள் அதிபர் இராஜதுங்கம் மகேந்திரன் தெரிவித்தார்.

கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலையின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் வித்தியாசாலை மண்டபத்தில் அதிபர் தி.கிருஷ்ணகுமார் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் வித்தியாசாலையின் நிறுவுநர் நினைவுப் பேருரையை இராஜதுங்கம் மகேந்திரன் நிகழ்த்தினார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:-

குமாரசாமிப்பிள்ளையின் காலத்தில் மிஷன் பாடசாலைகளே அதிகம் காணப்பட்டது. அந்தப் பாடசாலைகளிலே சேருகின்ற மாணவர்கள் மதம் மாறவேண்டிய தேவை இருந்தது. கொக்குவிலில் இருந்த புலவர்ஐயா




கஷ்டப்பட்ட மாணவர்களும் கல்வி கற்க வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டு 1922ஆம் ஆண்டில் தனது சொந்தச் செலவிலே கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலையை ஆரம்பித்தார். 1924இல் இப்பாடசாலையை அரசில் பதிவுசெய்ய எடுத்த முயற்சிகள் யாவும் சூழ இருந்த கிறிஸ்தவ மதப் பாடசாலைகளின் எதிர்ப்பால் நிறைவேறாமல் போனது. 1926ஆம் ஆண்டு வரை நான்கு ஆண்டுகள் தனது சொந்தச் செலவிலே வித்தியாசாலையை நடத்தியமையால் கடன் ஏற்பட்டது. அக்கடனைத் தீர்ப்பதற்காக 1926 ஆம் ஆண்டு மலேசியா சென்று பிரசங்கங்கள் செய்து கடனைத் தீர்த்தார்.

1928ஆம் ஆண்டு மீண்டும் இலங்கைக்குத் திரும்பி பஜனை, கதாப்பிரசங்கம், உபன்னியாசம், புராணபடனம் முதலான தொண்டுகள் செய்து சைவம், தமிழ் ஆகிய இரண்டினையும் தமது இரு கண்களாகப் பேணி வளர்த்தார்.

1926ஆம் ஆண்டு சேர்.பொன் இராமநாதனின் உதவியுடன் கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலையை அரசில் பதிவுசெய்தார். சேர்.பொன். இராம நாதன் குமாரசாமிப்பிள்ளையை யாழ்.பரமேஸ் வராக் கல்லூரியில் சைவசமய பாட தேவார ஆசிரியராக நியமித்தார்.

வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்தில் குமாரசாமிப்பிள்ளையவர்கள் பஜனை செய்த அருமைப் பாட்டினைக் கண்டு, திருநெல்வேலி சிவபூஜா துரந்தரத் ஸ்ரீலஸ்ரீ செல்லப்பா அவர்கள் தமது மகளை குமாரசாமிப் பிள்ளைக்கு மணமுடித்து வைத்தார்.

1946ஆம் ஆண்டு யாழ்.இராமநாதன் கல்லூரிக்கு மாற்றம் பெற்று ஆசிரியர் பணியைத் தொடர்ந்து 1955ஆம் ஆண்டு சஷ்டியப்த பூர்த்தி விழாவுடன் இளைப்பாறினார். 1956 ஆம் ஆண்டு ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலையின் புதிய கட்டடத்திற்கான அத்திபாரம் இட்டு கட்டடத்தை கட்டி முடித்தார் - என்றார். (ப-69-204)

# துறைசார் பயிற்சியிருந்தால் மட்டுமே வெளிநாடுகளில் வேலை வாய்ப்பு

## லண்டன் விளையாட்டுக்கழகத் தலைவர் சொல்கிறார்

நல்லூர், ஓக.9

வெளிநாடுகளில் வேலை வாய்ப்புகள் முன்போல் கிடைப்பதில்லை. ஏதாவது ஒரு துறையில் சிறந்து விளங்கினால் மட்டுமே வேலை பெறக்கூடிய வாய்ப்பு இருக்கிறது.

இவ்வாறு லண்டன் தமிழ்ப் பாடசாலை விளையாட்டுச் சங்கத்தின் செயலாளர் ஸ்ரீகங்காதரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணப் பாடசாலை விளையாட்டுச் சங்கத்தின் அனுசரணையுடன் யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் பெருவிளையாட்டு மெய்வன்மைப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது.

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அதிபரும் யாழ்ப்பாணப் பாடசாலை விளையாட்டுச் சங்கத்தின் தலைவருமான ந.சிவகடாட்சம் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் ஸ்ரீகங்காதரன் மேலும் பேசுகையில் -

இந்த மண்ணின் உயர்வுகளைக் காணப் பெருமையாக இருக்கிறது. முன்பு எமது மக்கள் லண்டனில் கல்வி, தொழில் வாய்ப்புக்களைப் பெறுவதற்காகச் சென்றனர். போரின் பின் அகதியாகிச் செல்கின்றனர். அகதிகளை ஏற்கும் நிலையில் வெளிநாடுகள் இப்போது இல்லை. ஏதாவது ஒரு துறையில் உயர் நிலையில் உள்ளவர்களுக்கு மட்டுமே வாய்ப்புகள் கிடைக்கும்நிலை தோன்றியுள்ளது. தமிழகத்தில் கல்விகற்று வெளியேறும் பொறியியலாளர்கள் தொகை தேவைக்கு அதிகமாக உள்ளது. தேவைக்கு அதிகமாக இருந்தால் அதில் பயனேதும் கிடையாது.

தமிழ்மக்கள் குறிப்பாக, யாழ்ப்பாண மக்கள் கல்வியை உயிரெனக் கொண்டவர்கள். நான், வடக்கு- கிழக்கு மாகாண செயலாளர் சண்முகலிங்கத்தைச் சந்தித்தபோது இங்கே படிப்பவர்களில் 12 வீதமானவர்களுக்குத் தான் பல்கலைக்கழகத்தில் இடம்கிடைக்கும். அப்படியெனின், ஏனையோர் ஏதாவது ஒரு துறையில் உயர்நிலையடையவேண்டும் என்று சொன்னார்.

இந்த மண்ணில் கல்விகற்று விளையாட்டுத் துறையில் திறமைமிக்கவர்களாக லண்டனுக்கு வந்த 12 பேர்கள் இணைந்து ஒரு விளையாட்டு அமைப்பை உருவாக்கினர். அதன் மூலம் இங்குள்ள எமது இளம் சமுதாயத்திற்குப் பயிற்சி அளிக்கவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. 54 தமிழ் பாடசாலைகளைச் சேர்ந்த பழைய மாணவர்கள் சங்கத்தையும் உருவாக்கி காத்திரமான பணியில் ஈடுபட்டுள்ளோம். தமிழ் மண்ணில் போர் ஓய்ந்து விடிவு பிறக்கும் வரையில் காத்திரமான பங்களிப்பை வழங்குதலும் யாழ்.மாவட்டத்தில் மட்டும் மட்டுப்படுத்தாது ஏனைய தமிழ் மாவட்டங்களிலும் விளையாட்டுத்துறையை ஊக்குவிக்க வேண்டும் என்ற உறுதியுடனும் செயற்படுகின்றோம். இரண்டு ஆண்டுகளுக்கு முன் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பயிற்சி முகாமொன்றைச் செய்தவுடன், வலைப்பந்தாட்டப் போட்டி நடத்திக் கௌரவித்துள்ளோம். விளையாட்டுத்துறையிலும் எதிர்காலத்தில் சிறந்தவீரர்கள் உருவாக வேண்டும். கல்வித்துறைசார்ந்த உங்களால் முடியாதது எதுவுமில்லை என்றார்.

வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் பேசும்போது -

கல்வி, கலாசாரம், பண்பாடு நிறைந்த பிள்ளைகளாக உங்களைக்காண கல்விமான்கள் விரும்புகிறார்கள். எல்லாப் பகுதியின்கண்களும் உங்களை நோக்கியே திரும்பியுள்ளது. லண்டனில் இருந்து வந்து உங்களைக் கௌரவிக்கும் எமது நாட்டின் இந்தப் பெருமக்கள் உங்களிடம் எதிர்பார்ப்பதெல்லாம் கல்வி, விளையாட்டுப் போன்ற இன்னோரன்ன துறைகளில் நீங்கள் அடையப்போகும் உயர்வையே கல்வி போன்று விளையாட்டிலும் உயர்ந்து வீரத்தின் உறைவிடமாகத் தமிழீழம் மிளிர வேண்டும் என்று கூறினார்.

யாழ்.மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் ஆர்வலன் பேசும் போது கொடிகட்டிப் பறந்ததாகக் கூறப்படும் யாழ்.மாவட்டத்தின் விளையாட்டுத்துறை நாட்டின் போர் சூழல் காரணமாகச் சிறிது பின்னடைவு கண்டுள்ளது. அமைதிச் சூழலைப் பயன்படுத்தி தமிழீழத்தின் விளையாட்டுத் துறையின் வளர்ச்சியில் நாம் கவனம் செலுத்தியுள்ளோம். தென்பகுதி மாணவர்களுடன் சரிநிகராக நாமும் நிற்க வேண்டும். விளையாட்டுத்துறைக்கான ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். விளையாட்டுத்துறையின் வளர்ச்சிக்கான கட்டமே இன்றைய விழா. இதற்காக ஒத்துழைப்பு வழங் கிய லண்டன் சங்கத்தினருக்கு எமது பாராட்டுக்கள் என்றார்.

கல்வி மேம்பாட்டுப் பேரவையின் தலைவர் செல்வி தி.பெரியதம்பியும் பேசினார்.

போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்களை லண்டன் டீ.எஸ்.ஏ. நிறுவன முதல்வர் எஸ்.மயில்வாகனம் வழங்கினார். (ப-111)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 18 - 10 - 1919



மறைவு 01 - 08 - 2003

அமரர் துரைக்குட்டி செல்வமணி

*ஆண்டுகள் இரண்டு ஓடி மறைந்தாலும்*
*ஆறிடுமோ எங்கள் துயர்*
*உங்கள் நினைவுகள் என்றும் எங்கள் இதயத்தை விட்டகலாது*
*உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்*
*வல்ல இறைவனை வேண்டுகிறோம்......*

"செல்வ பவனம்"
புதுவீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (38597)(46-45-15)

என்றும் உங்கள் நினைவுகளுடன்.....
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


### வடமராட்சி லயன்ஸ் புதிய நிர்வாகிகள்

வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் புதிய தலைவராக லயன் வி.சிவகுமார் தெரிவு செய் யப்பட்டுள்ளார்.

முதலாவது உப தலைவராக லயன் டாக்டர் எம். தங்கராஜா வும் இரண்டாவது உப தலைவராக லயன் கே.கமலேஸ்வரனும் மூன்றாவது உப தலை வராக லயன் ஏ.சிவநா தனும் செயலாளராக லயன் ஏ. துரைசிங் கமும் பொருளாளராக லயன் கே.தங்கராஜா வும் தெரிவு செய்யப் பட்டனர். இவர்களின் பதவி ஏற்பு வைபவம் அண்மையில் நடை பெற்றது. (எ-173)

# கஷ்டப்பிரதேச ஆசிரியர்களுக்கு மீண்டும் விசேட கொடுப்பனவுகள்

கொழும்பு,ஒக.9

கடந்த காலத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த கஷ்டப் பிரதேச மற்றும் அதிகஷ்டப் பிரதேசப் பாடசாலைகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டு வந்த கொடுப்பனவுகள் மீண்டும் வழங்கப்படவுள்ளன.கடந்த 24 ஆம் திகதியன்று , ஆசிரிய சேவைகள் சங்கத்துக்கும் கல்வியமைச்சின் செயலாளர் தாரா டி மெல்லுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுக்களையடுத்து, இக்கொடுப்பனவுகளை மீண்டும் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரசின் முன்னைய தீர்மானத்துக்குக் கமைய கஷ்டப்பிரதேசப் பாடசாலைகளில் சேவையாற்றும் ஆசிரியர்களுக்கு மாதாந்தம் ஆயிரத்து 500 ரூபா வீதமும் அதிகஷ்டப் பிரதேசங்களில் சேவையாற்றும் ஆசிரியர்களுக்கு மாதாந்தம் இரண்டாயிரத்து 500 ரூபாய் வீதமும் வழங்கப்பட்டு வந்தது. எனினும் நிர்வாக சேவைகள் தொடர்பான தேசியச் சபையின் தீர்மானமொன்றுக் கமைவாக இக்கொடுப்பனவுகள் நிறுத்தப் பட்டிருந்தன.1994 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வந்துள்ள ஆசிரிய சேவை தொடர்பான விதிமுறைகளில் நிலவும் சகல குறைபாடுகளும் நிவர்த்தி செய்யப்பட்டுச் சீர்செய்யப்படும் வகையில் மீளாய்வு மேற்கொள்ளப்படவேண்டுமென்று இச் சந்திப் பின்போது ஆசிரிய சேவைகள் சங்கம் முன் வைத்த யோசனையையும் ஏற்க கல்வி அமைச்சின் செயலாளர் இணக்கம் தெரிவித்துள்ளார். இந்தத் தகவல்களை ஆசிரியர் சங்கச் செயலாளர் மகிந்த ஜயசிங்க சிங்களப் பத்திரிகை ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

பாடசாலைகளுக்கு மேலதிக அதிபர்களை நியமிக்கும் விடயத்தில் அரசியல் அழுத்தங்கள் மேற்கொள்ளப்படுவது பற்றியும் இச் சந்திப்பின்போது கல்வியமைச்சின் செயலாளருக்குச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாகவும் ஜயசிங்க தெரிவித்துள்ளார்.இந்த நிலைப்பாடுகளையப்படும் பொருட்டு, பாடசாலை அதிபர்கள் தொடர்பான பதவி வெற்றிடங்கள் உடனடியாக நிரப்பப்படும் வகையில் அவை தொடர்பான எழுத்து மூலப் பரீட்சைகளுக்கான விண்ணப்பம் கோரல்களை இம்மாதத்துக்குள் வர்த்தமானி அறிவித்தல் மூலமாக வெளியிடுவதற்கும் கல்வியமைச்சின் செயலாளர் இணக்கம் தெரிவித்துள்ளார் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (9-206)


## இரண்டாம் ஆண்டு நினைவுகள்

தோற்றம்:- 08-10-1939

மறைவு :- 01-08-2003

திதி: 09-08-2005



அமரர்

சின்னத்தம்பி வடிவேலுப்பிள்ளை

(பங்குதாரர், நியூ சோபிகா நகைமாடம்)

அன்புத் தெய்வமே!
இரு விழிக்குள் எம்மைச் சுமந்து,
இன்புற்று நாமிருக்க ஏற்றம் தந்தவரே!
ஈராண்டுகள் சென்ற பின்னும்
ஈர விழிகள் காயவில்லை!

"திருவேரகம்"
சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

மனைவி, பிள்ளைகள்,
மருமகன்மார், பேரப்பிள்ளைகள்.

நியூ சோபிகா நகை மாடம்
*74/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*
(சி-44463)(46-45-5)



விமானம் மற்றும் கப்பல் மூலம்
உள்நாட்டு வெளிநாட்டிற்கான சிறியதோ,பெரியதோ,
எந்த அளவுகளிலான பொதிகள், கடிதங்களை
எந்த நாட்டிற்கும் எந்தநேரமும்
குறைந்த கட்டணத்தில் அனுப்பிட

மற்றும்
ஐரோப்பிய நாடுகளுக்கு
20 % விசேட சலுகை

லண்டனுக்கான 5 Kg பொதிக்கு
1 Kg க்கான கட்டணம் 500/=

259,கே.கே.எஸ் றோட்,
யாழ்ப்பாணம்.
(Opposite All Ceylon Distributors)
Tel - 021 222 7835
Fax - 021 222 7836

திருமுருகன் கொம் நெற்

46, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்
(பலநோக்கு கூ.ச.முன்பாக)
Tel - 021 222 7560
Fax - 021 222 7310

36, செல்லப்பிள்ளையார் கட்டடம்,
பிரதான வீதி, நெல்லியடி,
கரவெட்டி.
Tel - 021 226 4252
Fax - 021 226 4253

குகன் தொலைத்தொடர்பகம்
166,ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
Tel - 021 22 2027
Fax - 021 226 2993



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் சைவப்புரவலர்

குலபதி ஆறுமுகம் கந்தையா

B.A. J.P அவர்கள்

(அஷ்டலஷ்சுமி பதிப்பகத்தின்
உரிமையாளரும் கைதடி சைவச் சிறுவர்
இல்லத்தின் ஸ்தாபகரும்)

திதி: 09.08.2005

அன்னை மடியில் 17-10-1943
ஆண்டவன் அடியில் 21-07-2004

குடும்பத்தின் சிகரமாய் கல்விமானாக வாழ்ந்த எங்கள் அன்புத் தந்தையே!
ஆண்டு ஒன்று ஆனதப்பா ஆறவில்லை எமது துயரம் ஆயிரம்
தாம் கனவில் தோன்றினாலும் உங்கள் அன்பு வதனமுகம்
இனி எப்போ காண்போம் அப்பா? கண்ணுள் மணிபோல எம்மை
வாழ வைத்த குடும்ப ஒளிவிளக்கே! காலமெல்லாம் எம்முடன்
இருப்பீர்கள் என்று எண்ணியிருந்தோம். ஆனால் எங்களைப் பாரினில்
பரிதவிக்கவிட்டு விண்ணுலகம் ஆள்வதற்கே நீடிய நெடும்
பயணம் சென்றதேன் அப்பா?

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவர்" ஆம்
குடும்ப ஒளிவிளக்கே! எங்கள் அப்பா! உங்கள்
ஆத்மசாந்திக்காக ஒவ்வொருநாளும் பிரார்த்திப்போமாக.
*ஓம் சிவாய நமஓம் ஓம் சிவாய நமஓம் ஓம் சிவாய நமஓம்*

கண்டி வீதி,
கைதடி.

மகள்:
திருமதி சிவசக்தி
குணசீலன்.
குடும்பத்தினர்
கலிபோர்னியா.

ஒவ்வொரு நாளும் தங்கள் நினைவுடன் வாழும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
அஷ்டலஷ்சுமி பதிப்பகம்.

(38577) (39-46-45-15)


# REQUEST FOR PROPOSAL

COMITE INTERNATIONAL GENEVE

## Open Well rehabilitation & Construction of Medical shelters

**Closing Date: 15th August 2005**

The Sub-Delegation of the International Committee of the Red Cross (ICRC) in Kilinochchi is searching for construction companies, willing to contract for Open Well rehabilitation and the building of medical shelters in Mullaitivu and Vadamarachchi East. The projects should start by 21st of August 2005.

*1) Project Quantities and Phases*

*1.Project #1:*

4 X Semi Permanent Medical Shelters Dimensions: 30 X 20 Feet
Quality of walls: 7 feet high concrete block work.-
Pillars: 9 X Pillars, 7 feet high by 8 inch wide.
Windows: 02 X Window, 3X 3 feet.
Doors: 1 X wood Door; single-side opening/ 3 X 6 feet
Quality of Floor: concrete floor / 30 X 20 Feet/plastered
Quality of roofing: Cadjan roofing

*2.Project #2*

21 X Open well- Apron + Drainage
23 X Open well Pillars (Pair)
Dimensions: 5 feet open we11,4 feet diameter Apron,
1 feet -6 inch Long X 6 Inch Width Drainage Channel,
8 feet height X 1 feet Width Pillar

*2. Structure & Detail of Proposal.*

- The proposal should feature subtotal-amounts for every subproject
- All materials should be listed and quantified both in volume and unit price
- Labour costs should be listed and quantified both in volume and unit price
- Project start & end dates should be indicated for every project
- All prices are to denominated in local currency (LKR)
- Terms of payment has to be indicated in the proposal.

*Specific details of the project, including diagrammatic representation are available on request at the offices of the ICRC in Kilinochchi and Puthuk kudiyiruppu*

*The projects will be carried out under the strict supervision of the ICRC.* Interested Companies and individuals are invited to submit their bids in a sealed envelope until *15th of August 2005* to the following address:

International Committee of the Red Cross,
Subdelegation Kilinochchi,
Logistics Department, Iranamadu Junction, Kilinochchi.

(C/44451)(26)

# கல்வியில் சமவாய்ப்பை இழக்கச்செய்யும் ஆங்கில மொழி வழிக் கல்வி நடைமுறை

ஆங்கில மொழி விருத்தியின் அவசியம் இன்று தகவல் யுகத்தில் - உலகளாவிய ரீதியில் முக்கியத்துவம் பெற்று வந்தாலும் எமது பிரதேசத்தைப் பொறுத்தவரை தாய் மொழி வழிக்கல்வி என்பது மிகவும் வலுவடைந்துவரும் கருத்தியலாகவே உள்ளது. இருந்தாலும் அரசு புதிய கல்விச் சீர்திருத்த அமைப்பியல் பிரயோகங்களில் படிப்படியாக ஆங்கில மொழி வழிக் கல்விக்கான அத்திபாரங்களை விதைத்து வருவதை அவதானிக்க முடிகின்றது. ஆங்கில மொழி வழிக் கல்வி எந்தளவுக்கு சாத்தியமுள்ளதாகவும், உயர் அடைவு மட்டத்தை வெளியீடாக வழங்கும் என்பதுவும் விமர்சனத்துக்குள்ளாகி வருகிறது.

தாய்மொழி வழிக் கல்வி ஊடாக உயர் அபிவிருத்தியை அடையலாம் என்பதற்கு தென்கிழக்காசிய நாடுகளான ஜப்பான், வடகொரியா, தென்கொரியா, சீனா ஆகியன உதாரணங்களாக எடுத்துக்கூறப்படுகின்றன. இந்தநாடுகள் ஆங்கில மொழியை இரண்டாம் தர நிலையிலேயே வைத்துள்ளன. ஆங்கிலமொழி வழிக் கல்வி இன்றி நவீன உலகமயமாக்கல் மற்றும் தகவல் யுகத்திக்கு ஊடாக வெளிவரமுடியுமா

அட்டவணை I

| மாவட்டம் | ஆரம்பக் கல்வி ஆங்கிலம் | இடைநிலைக் கல்வி ஆங்கிலம் |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | 357 | 179 |
| மன்னார் | 76 | 48 |
| கிளிநொச்சி | 91 | 82 |
| முல்லைத்தீவு | 115 | 83 |
| வவுனியா | 147 | 72 |
| திருகோணமலை | 152 | 95 |
| மட்டக்களப்பு | 230 | 67 |
| அம்பாறை | 94 | 80 |

(மூலம் - வடகிழக்கு மாகாணக்கல்வி அமைச்சு- 2003)

என்பது பல்வேறு சிந்தனை இழப்பங்களின் மத்தியில் ஆராயப்பட்டு வருகின்றது.

ஆங்கில மொழிக் கல்வியினது அடைவு மட்டமே உயர்மட்டத்தை நாடளாவிய ரீதியில் எட்டமுடியாத நிலையில், எதிர்காலத்தில் நடைமுறைக்கு வரவுள்ள ஆங்கில மொழி வழிக் கல்வி மூலமான கல்விச் செயற்பாடு எந்தளவுக்கு கல்வியில் உயர் அபிவிருத்தியை எட்டப்போகின்றது என்பது கேள்விக்குறியாகியுள்ளது. மேலும், ஆங்கில பாடத்தையே கற்பிக்கக்கூடிய ஆசிரிய வள ஆளணி பற்றாக்குறையாகவும், தகுதியற்றதாகவும் இருக்கும் பொழுது எந்தளவுக்கு ஆங்கிலமொழி மூலமாக கல்வியைப் பெறுவது சாத்தியப்படும் என்




பதுவும் கேள்விக்குறியாகவே உள்ளது. இவ்வாறு நடைமுறைப்படுத்தப்படவுள்ள ஆங்கில மொழிவழிக் கல்வி எந்த வகுப்பு மட்டத்தை அடிப்படையாகக் கொண்டது என்பதிலும் சிக்கல் தன்மை சுட்டிக்காட்டப்படுகின்றது. சிலர் ஆரம்பக்கல்வி நிலையில் நின்று என்றும், சிலர் இடைநிலைக் கல்வி மற்றும் உயர்கல்வி என்ற அடிப்படையிலும் இடம்பெறலாம் என்று கூறுவது எமது நாட்டை பொறுத்தமட்டில் சாத்தியம் அற்ற ஒன்றாகவே காணப்படுகிறது.

பொதுவாக ஒருவனுடைய சிந்தனை உருவாக்கம் அல்லது கட்டுமானம் என்பது அவன் வாழும் சூழலின் இயல்பினையும் அவன் தொடர்பாடலுக்காகப் பயன்படுத்தும் ஊடகமான தாய்மொழி மூலமே பெருமளவு கட்டி அமைக்கப்படுகின்றது. சிந்தனையின் மூல உருவாக்கம் தாய் மொழி மூலமே உருவாக சந்தர்ப்பம் அதிகம். அதன் பின்னரே ஏனைய மொழியை தனது மொழியுடன் இணைத்தோ அல்லது மாற்றியோ தனது தேவைக்கு ஏற்ப பயன்படுத்த முடிகின்றது. இதனடிப்படையிலும் ஆங்கில மொழி கல்வியினது வரி பங்கை ஊகித்துக் கொள்ளமுடிகின்றது.

மொழிவிருத்தி என்பது எல்லா வயது மட்டங்களில் இடம்பெறுவதில்லை. குறிப்பாக மொழி தொடர்பான திறன்கள் 14வயதுக்கு முன் வளர்த்து கொள்ளப்பட்டு, பின்னர் ஒரு படிப்படியான விருத்தியை ஏற்படுத்திக்கொள்கின்றன. இதனடிப்படையில் நோக்குகின்றபொழுது ஆரம்பநிலையிலேயே மொழி அமுலாக்கத்தை தீர்மானிப்பது பொருத்தப்பாடாக உள்ளமை பல

அட்டவணை II

| வலயம் | ஆரம்பக் கல்வி ஆங்கிலம் | இடைநிலைக் கல்வி ஆங்கிலம் |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | 84 | 33 |
| வலிகாமம் | 115 | 56 |
| தென்மராட்சி | 53 | 29 |
| வடமராட்சி | 61 | 32 |
| தீவகம் | 44 | 29 |

(மூலம் - வடகிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு)

கல்வியியலாளர்களால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.உயர்தரத்திலோ அல்லது இடைநிலை மட்டத்திலோ அமுலாக்குவது சாத்தியமற்ற ஒன்றாகவே அமைகின்றது.

அத்துடன், இடைநிலை பரீட்சைகள் (க.பொ.த.சா) மற்றும் உயர்தரப் பரீட்சைகள் என்பன போட்டித் தன்மை வாய்ந்தமையால் உயர்தரத்தில் ஆங்கில மொழி மூலமான கற்றல் பல்கலைக்கழக அனுமதியில் சமச்சீரற்ற தன்மை ஒன்றை ஏற்படுத்த வாய்ப்புண்டு. இதனால், மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்வது குறைவடைய சந்தர்ப்பம் உண்டாகும். அண்மையில் யாழ். நகரப் பாடசாலைகளில் இடைநிலையில் ஆங்கில மொழி வழி கல்விக்காக இணைத்துக்கொண்ட பல மாணவர்கள் பின்னர் தாய் மொழி வழிக் கல்விக்கு மாற்றம் பெற்றுச் செல்வதை சிறந்த உதாரணமாக கூறமுடியும்.

அட்டவணை III

| மொழி | தேவையானோர் | கிடைக்கக் கூடியோர் | பற்றாக் குறை |
|---|---|---|---|
| தமிழ் | 1675 | 267 | 1408 |
| சிங்களம் | 303 | 150 | 153 |
| இரண்டும் | 1978 | 417 | 1561 |

Bascline study - 2003

மாணவர்கள் தமது அறிவை விரிவுபடுத்திக்கொள்ளவும், சுயகற்றலை மேற்கொண்டு புதிய விடயங்களை அறியவும் ஆங்கிலமொழி அவசியமானதாக உள்ளமை யாராலும் மறுக்கமுடியாது.

சுயமொழி ஊடாகவே வாழ்க்கையின் பரிபூரண நிறைவையும், எமது கலை, பண்பாட்டு விழுமியங்களையும் பெறமுடியும். அத்தோடு, உலகின் ஏனைய மக்களால் பின்பற்றப்படுகின்ற நல்ல விழுமியங்களை அறிய ஆங்கிலமொழி தொடர்பு மொழியாக அமைவதையும் காணலாம். எம்மைப் பொறுத்தமட்டில் ஏற்ற மொழியை தொடர்பு மொழியாக கட்டியெழுப்ப உள்ளோம் என்பதே பிரச்சினையாக உள்ளது.

தாய்மொழிக் கல்விக்கான நியாயம் கற்பித்தல் மொழியின் சமூகத்தன்மையில் நின்றே எழுகின்றது. குழந்தையின் கல்விக்கு பாடசாலை மட்டும் பொறுப்புடையதல்ல. அறிவு திரளமைவு, வீடு, பெற்றோர், விளை யாட்டுத் திடல் வரையிலான சமூக கூறுகளே காரணமாகின்றன. சமூகச் சூழலில் பயன்படும் மொழியில் பாடசாலை கல்வி வழங்கப்படுகின்றபோது மாணவர்களினால் எளிதாக விளங்கிக்கொள்ள முடியும்.

எமது பிரதேசத்தை பொறுத்தமட்டில் ஆங்கில மொழிக்கல்வி என்றாலோ, அல்லது ஆங்கில மொழிமூலமான கல்வி என்றாலோ அவை நடைமுறை ரீதியில் பெரும் இடர்பாடுகளை சந்திப்பனவாகவே உள்ளன. இதற்குப் பாடசாலையிலுள்ள பௌதிக வளப் பற்றாக்குறை மற்றும் ஆங்கில ஆசிரிய வள ஆளணியில் குறைபாடு உடைய - போதுமானதாக அமையாத -, தன்மை என்பனவற்றைக் காணமுடிகின்றது. அத்துடன், இதுவரை காலமும் மாணவர் அடைவு மட்ட ரீதியில் வெளிக்காட்டிய மதிப்பீட்டுப் புள்ளிகளும் ஆங்கில அறிவு மட்டத்தின் நிலையை எதிர்காலத்தில் கேள்விக்குறியாக்கியுள்ளதை அவதானிக்க முடிகிறது.

காட்டப்பட்டுள்ள அட்டவணை I மாவட்ட அடிப்படையிலான ஆங்கில ஆசிரியர் ஆளணியினரையும், அட்டவணை II யாழ் மாவட்டத்தில் உள்ள வலயரீதியான ஆசிரிய விவரத்தையும், அட்டவணை III ஊடாக தமிழ், சிங்களம் என்ற தேசியரீதியில் பற்றாக்குறையாக உள்ள ஆளணியினரையும் எடுத்துக்காட்டுகின்றன.

## சுயமொழிக் கல்வியே தாழ்நிலையில்; ஆங்கிலமொழிக் கல்வி எந்தளவுக்கு?

அட்டவணை IV ஊடாக யாழ்.மாவட்டத்தில் ஆங்கில பாட அடைவு ஏனைய பாடங்களுடன் ஒப்பிடுகின்ற பொழுது கீழ்நிலையில் உள்ளதையும் மாவட்ட ரீதி

அட்டவணை V


| மாவட்டம் | சித்திவீதம் | மாவட்டநிலை |
|---|---|---|
| மட்டக்களப்பு | 16.82 | 1 |
| யாழ்ப்பாணம் | 15.76 | 3 |
| கல்முனை | 16.63 | 2 |
| கிளிநொச்சி | 4.55 | 8 |
| மன்னார் | 9.62 | 6 |
| முல்லைத்தீவு | 4.71 | 7 |
| திருகோணமலை | 12.47 | 5 |
| வவுனியா | 13.34 | 4 |

(மூலம் - இலங்கை பரீட்சைத் திணைக்கள புள்ளிவிவரம்)

யிலும் மாகாண மட்டத்திலும் தேசிய அளவிலும் பின் தங்கியிருப்பதையும் அவதானிக்க முடிகின்றது. தேசிய மட்டத்தில் 4,08,611 பேர் பரீட்சைக்குத் தோற்றி 1,12,107 பேர் மட்டும் சித்தியடைந்திருந்தனர். மாகாணமட்டத்தில் 62,657 பேர் தோற்றி 12,593 பேர் சித்தியடைந்தும் உள்ளதைக் கொண்டு அடைவு மட்டத்தை நோக்க முடிகிறது.

ஆங்கில மொழி மூலமான கற்கை என்பது இலங்கையில் உள்ள எல்லா பிரதேச மட்ட சமூக கலாசார நிலைக்கு எவ்வாறான பொருத்தப்பாடுடையதாக அமையும் என்பது சிக்கல தன்மையாகின்றது. கல்வியில் பின்தங்கிய பிரதேசங்களிலும், கிராம

அட்டவணை IV




மூலம் - க.பொ.த. சா. பெறுபேற்று பகுப்பாய்வு

மட்டங்களிலும் தாய்மொழி மூலமான கல்வி அடைவு மட்டங்களிலேயே பாரிய வீழ்ச்சி ஒப்பீட்டு ரீதியில் ஏற்படுகின்ற பொழுது ஆங்கில மொழிமூலமான கற்கை மிக மோசமான நிலைக்கே கல்வியை ஒட்டு மொத்த ரீதியில் இட்டுச் செல்லும் என்பதை யாரும் மறுக்கமுடியாது.

### அபிவிருத்தி செயல்முறைகள்

அண்மையில் ஆங்கில ஆசிரியர்களின் பற்றாக்குறையை நீக்க பகுதிநேர தொண்டர் ஆசிரியர்களை நிரந்தர நியமனமாக்குதல் என்பது ஆரோக்கியமான நிகழ்வாக இருந்தாலும் ஆசிரியர் கலாசாலை, தேசிய கல்வியியற் கல்லூரிகள், திறந்த பல்கலை, பல்கலைக்கழகங்கள், தொழில்நுட்பக் கல்லூரிகள் மூலம் ஆசிரிய வள ஆயத்த நிலை உருவாக்கப்படுதலும் உடனடித் தேவையாக உள்ளது.

குடும்பப் பாடசாலைத் திட்ட நடைமுறையூடாக ஆளணிப் பகிர்வை உள்ளக ரீதியில் ஒழுங்குபடுத்தியும், புலமைப் பரிசில் கற்கை வாய்ப்பை மேலதிகமாக ஆசிரியவள ஆளணியினருக்கு வழங்குவதனூடாகவும், கற்றல், கற்பித்தல் உபகரண கையாளுகை மற்றும் 'வெளிச்சவீடு பாடசாலை' என்ற செயல்வெளியீடு ஊடாகவும் ஆரோக்கியமான நிலைகளைக் காண முடிகின்றது.

### அண்மைக்கால துரித திட்டங்கள்

கல்வி அமைச்சு ஜி.சீ.ஈ.சா.த. பரீட்சையில் ஆங்கில பாடத்தை கட்டாயபாடங்களில் ஒன்றாக விரைவில் நடைமுறைப் படுத்தவுள்ளதுடன், தரம் 1,2களில் இதுவரை நடைமுறையில் இருந்துவந்த வாய்மொழி ஆங்கில முறையில் இருந்து விடுபட்டு எழுத்துமூல ஆங்கில மொழியை 2007 இலிருந்து நடைமுறைக்குக் கொண்டு வரவுள்ள திட் டம் மற்றும் ஆங்கிலமொழி மூலமாக பாடங்களைக் கற்கும் முதல் மொழி திட்டம் என் பவற்றில் எந்தளவுக்கு நாட்டின் அபிவிருத்திக்கும், மாணவரின் கற்கை விரிவுக்கும் சாத்தியப்பாடுடையதாகவும், முன்னேற்றகரமாக அமையும் என்பதில் சந்தேகமே உள்ளது.

**பரராஜசிங்கம் இராஜேஸ்வரன்**

அண்மையில் கொண்டுவரப்பட்டுள்ள கல்வி மறுசீரமைப்பில் முதன்மை செயற்திட்டங்களாக சில பாடங்கள் தரம் 6,7களில் ஆங்கில மொழியில் கற்பிக்கப்படவுள்ளதுடன், மேலும் 64 பாடசாலைகளில் விஞ்ஞானத்தை ஆங்கில மொழியில் உயர்தரத்தில் கற்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு 300 விஞ்ஞான பட்டதாரிகளும் நியமிக்கப்படவுள்ளனர் என்றும் குறிப்பிடப்பட்டமை ஆங்கிலமொழி விரிவாக்கத்தை அமுல்படுத்துவதாக உள்ளது.

மேற் கூறப்பட்ட அடிப்படையில் அரசு ஆங்கிலமொழி மூலமான கற்கையை அமுல்படுத்தப் படிப்படியான பல்வேறு நுட்பங்களைக் கையாண்டாலும் எவ்வாறான அடைவு நிலையைக் கல்விரீதியிலும், எமது தேசியம், தேசிய இன அடை யாள குறியீடு என்பதில் தாக்கத்தைச் செலுத்த உள்ளது என்பதை நாங்களே எங்களை தீர்மானிக்கக் கூடிய பலம் வரும்பொழுதே சாத்தியமாகும்.



150 நாடுகளில் மிகப் பிரபலமான சர்வதேச வாழும் கலை அற நிறுவனம் நடத்தும்.

**இளைஞர் பயிற்சி**

பயிற்சியின் மூலம் கிடைக்கும் பலன்கள்

மன இறுக்கத்திலிருந்தும், உளைச்சலிலிருந்தும் பூரணமான விடுபாடு, சுய நம்பிக்கையும், சுய மேம்பாடும் அடைய, உடல் வருத்தம், சோர்வு நீங்கி உரம் பெற, முரண்பாடுகளுக்கு தீர்வு கண்டு தக்கபடி நிலைமையை சீர் செய்ய, படைப்பாற்றல் பெருகி ஆர்வத்துடனும் உற்சாகத்துடனும் செயற்பட, ஆத்ம சக்தியை அறிந்து கொள்ள.

தகுதி:- 18 வயது முதல் 35 வயதிற்குட்பட்ட ஆண், பெண் இருபாலரும் இப்பயிற்சியை மேற்கொள்ளலாம்.

பயிற்சி நாள்கள்:-11.08.2005 முதல் 17.08.2005 வரை
பயிற்சி நேரம்:-காலை 7.30 முதல் 4.30 மணி வரை
பதிவு செய்யும் இடம்:-ஹலோக் வீதி, தேசிய சேமிப்பு வங்கி எதிரில். யாழ் வீதி, மானிப்பாய்
பதிவு செய்யும் நேரம்:-தினமும் காலை 9 முதல் மதியம் 2 மணி வரை.

இலவச மதிய உணவுடன்

மேலும் விவரங்களுக்கு:- 071 305 5923, 0777 250879, 077 9059549.

இந்த அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்



**6ஆம் மாத நினைவஞ்சலி**

மண்மகிழ 02 - 08 - 1944

கண்ணெகிழ 12 - 02 - 2005



அமரர் கந்தையா தனபாலசிங்கம்

திங்களாறு சென்றதையா தீருமோ எம்துயர்
அங்கமெல்லாம் நொந்தழுது அரற்றுகிறோம் - நாம்
பங்கமேது மில்லாது பார்மிசை எமை வளர்த்தாய்
எங்கள் துயர் துடைக்க எழுந்தோடி வாராயோ?

190, ஆம் கட்டை,
நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

- குடும்பத்தினர்.

(8-44465)(42-11-45)



**கணபதி ஜோதிட நிலையம்**

பண்டிட் ஐயப்ப சாஸ்திரி

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ளார். இவர் கைரேகை மூலம் நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப் போகின்றவை மற்றும் தொழில், வியாபாரம், விவாகப் பொருத்தம், கல்வி, வெளிநாடு செல்லும் வாய்ப்பு, நோய் போன்றவற்றிற்குப் பரிகாரம் கூறுவார். ஒரு முறை சந்தியுங்கள்.

தொடர்பு: **SHANJAEYA REST HOUSE,**
NO.5, RAKKA ROAD (ICRC Office அருகில்),
JAFFNA.T.P.: 077 9173940. (38141)(42.11.45)



**குறைந்த கட்டணத்தில்**

CHINA வில் (சீனா) MBBS (மருத்துவப் பட்டப்படிப்பு)

DALIAN MEDICAL UNIVERCITY
GUANGXI MEDICAL UNIVERCITY
MEDIUM - ENGLISH
QUALIFICATION- G.C E A/L (BIO) 3, PASSES

நீங்கள் ஒரு மருத்துவராக (DOCTOR) வர விரும்பியதை எம் மூலமாக நிறைவேற்றிக்கொள்ளுங்கள்.

* * * * நீங்கள் வெளிநாடு செல்ல விரும்புகிறீர்களா? * * * *

பின்வரும் நாடுகளுக்கு VISA பெற்றுக்கொள்வதற்கான ஒழுங்குகளை நாம் செய்து கொடுக்கின்றோம்.

அவுஸ்ரேலியா, நியூசிலாந்து, இத்தாலி, சுவிஸ், ஜேர்மனி

* கொழும்பைவிடவும் குறைந்த கட்டணத்தில் சர்வதேச நாடுகளுக்கான விமான ரிக்கெற்றுக்களை FLIGHT TICKET எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
* வெளிநாடுகளில் இருந்து வந்தவர்களது சகல விமானங்களுக்குரிய ரிக்கற்றுக்களை மீள் உறுதிப்படுத்தலை ( TICKET RECONFORMATION) எம்மிடம் செய்து கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு:-
**RAIN BOW TRAVELS & TOURS**
32.2/1 கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம். (அரினா நகைமாடத்துக்கு மேல்)
தொலைபேசி 0777 328219. (C/44466)



# பணிநிலை வேண்டுகை

கீழ்வரும் பணிநிலைகளுக்குத் தகைமையுடையவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன. தகைமையுடையவர்கள் தங்களது தன்வரலாறடங்கிய (சுயவிவரம்) வேண்டுகைகளை 2005.08.13ஆம் நாளுக்கு முன்னதாக எமக்குக் கிடைக்கக் கூடியவாறு அனுப்பிவைக்கவும்.

## பணிநிலை

01. ஆய அலுவலர் (ஆண்கள்)
02. ஆய உதவியாளர் (ஆண்கள்)

## கல்வித்தகைமை

**பணிநிலை 01.**
க.பொ.த.(உ/த) பரீட்சையில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்

**பணிநிலை 02**
க.பொ.த.(சா/த) பரீட்சையில் குறைந்தது 04 பாடங்களில் தேர்ச்சி அடைந்திருத்தல் வேண்டும்.

## வேண்டுகை அனுப்பவேண்டிய முகவரி:

மேலாளர்,
ஆளணிப் பிரிவு,
நடுவப்பணியகம்,
ஆயம்.

## நேர்முகத் தேர்வு நடைபெறும் நாள்:

2005.08.16
காலை 10 மணிக்கு.

## நேர்முகத் தேர்வு நடைபெறும் இடம்:

நடுவப்பணியகம்,
ஆயம்,
கிளிநொச்சி.

குறிப்பு: நேர்முகத் தேர்வுக்குக் கடிதம் அனுப்பப்படமாட்டாது. நேர்முகத் தேர்வுக்குச் சமுகமளிப்பவர்கள் தகைமைச் சான்றிதழ்களுடன் வரவும்.

(8-44452)(42-11-45)

**மேலாளர், ஆளணிப்பிரிவு, ஆயம்.**


## ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

வலி.தெற்கு,ஓக.9

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவின் திணைக்களத் தலைவர்கள் கலந்துகொள்ளும் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் எஸ்.திருவாகரன் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கூட்டம் நடைபெறும்.

ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தைத் தொடர்ந்து விவசாயிகள் குழுக்கூட்டம் நடைபெறும். (த-152)

## தொழில்நுட்பக் கல்லூரி மாணவருக்கு விடுமுறை

யாழ்ப்பாணம்,ஓக.9

யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரி இரண்டாம் தவணை விடுமுறைக்காக நேற்று முன்தினம் மூடப்பட்டது. மீண்டும் அடுத்த தவணைக்கான வகுப்புகள் எதிர்வரும் 29 ஆம் திகதி ஆரம்பமாகும் என கல்லூரி அதிபர் தெரிவித்தார். (த-61)

## தலையில் தேங்காய் விழுந்து குடும்பப் பெண் காயம்!

தென்மராட்சி,ஓக.9

தேங்காய் தலையில் வீழ்ந்து குடும்பப் பெண் காயமடைந்தார்.

இச்சம்பவம் கடந்த 4ஆம் திகதி சாவகச்சேரி டச்சு வீதியில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த செல்வரத்தினம் கருணாநிதி (வயது 33) என்பவரே காயமடைந்தவராவார்.

காயமடைந்த இப்பெண் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.(த-117)

## இணுவில் லயன்ஸ் கழகத்தின் புதிய தலைவர் பதவியேற்பு

வலி.தெற்கு,ஓக.9

இணுவில் லயன்ஸ் கழக புதிய தலைவர் லயன். செ.இலகுநாதனின் பதவியேற்பு வைபவம் இணுவில் 'தமிழ் இல்லத்தில்' கடந்தவாரம் இடம்பெற்றது.

இவ்வைபவத்தில் லயன்ஸ் கழக யாழ்ப்பாண பிராந்திய உதவி ஆணையாளர் லயன் லலித் பேர்னாண்டோ, திருமதி லயன் நிமாலி பெர்னாண்டோ ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்துகொண்டனர்.

யாழ்.மாவட்ட லயன்ஸ் கழகங்களின் இணைப்பாளர், லயன் எஸ்.எஸ்.தங்கராசா, லயன் ஞானசேகரம், லயன் எஸ்.இரவீந்திரா, லயன் க.தேவராஜா, லயன் எஸ்.கைலாசநாதன் உட்பட ஏராளமான லயன்ஸ் கழக உறுப்பினர்கள் விழாவில் கலந்துகொண்டனர்.

இணுவில் லயன்ஸ் கழக செயலாளராக லயன் ம.கண்ணபிரானும் பொருளாளராக லயன் கே. கணேசலிங்கமும் பதவியேற்றுக்கொண்டனர். இணுவில் கிராமத்தில் வீதி ஒழுங்குகளைச் சரியான முறையில் சகலரையும் கடைப்பிடிக்க வைக்கும் திட்டங்களைத் தமது முதற்பணியாக முன்னெடுக்கப்போவதாகத் தலைவர் லயன் செ.இலகுநாதன் இவ்வைபவத்தின் போது தெரிவித்தார். (த-152)

## 'கற்பகத்தின்பொற்பதம்' இசைத்தட்டு வெளியீடு

வலி.தெற்கு,ஓக.9

கற்பக விநாயகப் பெருமானின் ஸ்தலப் பெருமைகளை விரித்துக்கூறும் வகையில் சுன்னாகம் கதிரமலை சிவன் தேவஸ்தான இசைக் கலாவித்தகர் சிவஸ்ரீ.சோம.உமாரமண சிவாச்சாரியார் இசையமைத்துப் பாடிய 'கற்பகத்தின் பொற்பதம்' இசைத்தட்டு ஒலிப்பேழை என்பன காரைநகர் வாரிவளவு ஸ்ரீ கற்பகவிநாயகர் ஆலயத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை வெளியிட்டு வைக்கப்பட்டன.

ஆலய மண்டபத்தில் பிரம்மஸ்ரீ ப.கோபாலகிருஷ்ண ஐயர் தலைமையில் விழா நடைபெற்றது. நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், சிவஸ்ரீ ப.முத்துக்குமார சாமிக்குருக்கள், சிவஸ்ரீ வி.இராமமூர்த்திக் குருக்கள் ஆகியோர் ஆசியுரை வழங்கினர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர்களான சி.கிருஷ்ணானந்த சர்மா, கலாநிதி க.சிவகுருநாதன் ஆகியோர் முறையே வாழ்த்துரையும் பாராட்டுரையும் வழங்கினர்.

ஆசிரியர் ந.விஜயசுந்தரம் வெளியீட்டுரை நிகழ்த்தினார். யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் திருமதி கலைவாணி நவரத்தினம் நயப்புரை வழங்கினார். சிவஸ்ரீ சோம.சமாரமணக் குருக்களுக்கு பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்பட்டதுடன் அவரது இசைக்கச்சேரியும் நடைபெற்றது. (த-152)


**ஆடி மாத அதிரடி மலிவு விற்பனை**




OCEANICK IMPEX
192, MAIN STREET, COLOMBO 11.
Tel: 2336720, 2327168, Wholesale: 2384131, Fax; 2326961
E.mail: oceanick192@yahoo.com

# உற்பத்திப் பொருள்களை சந்தைப்படுத்த பாலமோட்டை விவசாயிகள் படும்பாடு!

## சோதனைகளைத் தாண்டி 30 கிலோமீற்றர் செல்கின்றனர்

புளியங்குளம்,ஓக.9

வவுனியா பாலமோட்டை கிராம அலுவலர் பிரிவின் கீழ் உள்ள விவசாயிகள், தமது உற்பத்திப் பொருள்களை சந்தைப்படுத்துவதற்கு ஏற்ற சந்தைவாய்ப்புகள் எவையும் அப்பிரதேசத்தில் இல்லாமையால், பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

பாலமோட்டை கிராமசேவகர் பிரிவின் கீழ் உள்ள பாலமோட்டை ஊறல் குளம், நவ்வி, பனிக்கங்குளம், கோயில்குஞ்சுக்குளம் ஆகிய கிராமங்கள் முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைக் கிராமங்கள் மற்றும் மன்னார் மாவட்டத்தின் எல்லைக் கிராமங்களில் வசிக்கும் மக்கள் அனைவரும் விவசாயத்தை நம்பியே வாழ்கின்றார்கள்.

ஆனால், இக்கிராம மக்களால் உற்பத்தி செய்யப்படும் விவசாயப் பொருள்களை சந்தைப்படுத்துவதற்கு அங்கு உரிய சந்தை வாய்ப்புகள் இல்லை.

இவர்கள் தமது பொருள்களை சந்தைப்படுத்துவதற்கு சுமார் 25கிலோ மீற்றர் தூரம் தாண்டி மல்லாவிக்கோ 30 கிலோமீற்றர் தூரத்திற்கு அப்பால் உள்ள வவுனியாவிற்கோ தான் செல்லவேண்டும்.

மல்லாவியில் உள்ள சந்தையில் முழுமையாக சந்தைப்படுத்த முடியாத காரணத்தால் இவர்கள் பெரும்பாலும் வவுனியாவிற்கே செல்லவேண்டிய நிலை இருக்கின்றது.

இவர்கள் தமது பொருள்களை வவுனியாவிற்குக் கொண்டுசெல்வதற்கு ஏற்ற போக்குவரத்து வசதிகளும் அவர்களுக்கு இல்லை. அத்துடன், புளியங்குளம், விளக்குவைத்தகுளம் போன்ற இராணுவ சோதனைச் சாவடிகளையும் தாண்டியே செல்லவேண்டும். இத்தனை தடைகளையும் கடந்து - சிரமங்களுக்கு மத்தியில் மேற்படி சந்தைக்கு செல்லும் போது அங்கு சந்தை கலைந்துவிடும். இதனால், விவசாயிகளுக்கு ஏமாற்றமே மிஞ்சும்.

எனவே, மேற்படி கிராம விவசாயிகள் தமது விவசாய விளை பொருள்களை சந்தைப்படுத்துவதற்கேற்ற சந்தைவசதி, போக்குவரத்து வசதி என்பவற்றையும் விவசாய உள்ளீடுகளைப் பெற்றுக்கொள்ள ஒரு வேளாண் சேவையையும் ஏற்பாடு செய்து தருமாறு சம்பந்தப்பட்டவர்களிடம் இப்பகுதி மக்கள் கேட்டுள்ளனர்.

(த-355-203)

# கட்டாக்காலி நாய்களால் வட்டக்கச்சியில் தொல்லை!

வட்டக்கச்சி,ஓக.9

வட்டக்கச்சி, இராமநாதபுரம் பகுதிகளில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகின்றது.

பொது இடங்களிலும், வீதிகளிலும் அதிகளவு கட்டாக்காலி நாய்கள் காணப்படுகின்றன. இவை வீதியால் செல்வோரைத் துரத்தும் நிலையும் காணப்படுகின்றது. இந்த நாய்களில் சில விசர் நாய்களாக இருக்கலாம் என்று மக்கள் அஞ்சுகின்றனர்.

இவ்விடயத்தில் சம்பந்தப்பட்டோர் அக்கறை எடுத்து இவற்றைப் பிடித்து அழிக்க வேண்டும் என்று மக்கள் கேட்டுள்ளனர்.

(த-405)



முல்லை மாவட்ட பிறப்பு, இறப்பு, காணி பதிவகம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. 'பாச்' நிறுவனத்தின் வன்னிக்கான திட்டப்பணிப்பாளர் ஓசி, நாடாவை வெட்டி கட்டடத்தைத் திறந்து வைப்பதை படத்தில் காணலாம். மாவட்ட அரச அதிபர் திருமதி எமில்டா சுகுமாரும் படத்தில் உள்ளார்.

(படம் : புதுக்குடியிருப்புச் செய்தியாளர்)

# வட்டக்கச்சி கட்சன் வீதியில் பாதுகாப்பற்ற பாலம்; ஆபத்து!

வட்டக்கச்சி,ஓக.9

வட்டக்கச்சி, கட்சன் வீதிச் சந்தியில் உள்ள பாதுகாப்பற்ற பாலத்தால் பெரும் ஆபத்து எதிர்நோக்கப்படுகின்றது.

சந்தியில் இருந்து கட்சன் வீதிக்கு இறங்கும் இடத்தில் இரணைமடுக் குளத்திலிருந்து வட்டக்கச்சி இராமநாதபுரம் பகுதிக்கு நீர் செல்லும் பிரதான வாய்க்காலின் மேலாகச் செல்லும் இப்பாலம் இருமருங்கிலும் தடைகள் இடப்பட்டுள்ளது. சந்தியிலிருந்து இறக்கமாகவுள்ள இடத்தில் இப்பாலம் அமைந்திருப்பதால் பல விபத்துக்கள் நிகழ்ந்துள்ளன.

ஏற்கனவே, இப்பாலத்தினுள் (வாய்க்காலினுள்) ஒருவர் விழுந்து நோய்வாய்ப்பட்டு இறந்துள்ளார். இதனை விட வாகனங்களின் விபத்துகளும் இடம்பெற்றுள்ளன.

இப்பாலத்தை பாதுகாப்பாக அமைத்துத் தருமாறு இப்பிரதேச மக்கள் சம்பந்தப்பட்டோரை நீண்டகாலமாகக் கேட்டு வருகின்ற போதிலும் பலன் ஏதும் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

(த-405)

# போக்குவரத்து வசதிகள் இன்றி பொதுமக்கள் பெரிதும் அவதி!

புளியங்குளம்,ஓக.9

வவுனியா பிரதேசத்தில் மகிழங்குளம், பாலமோட்டை, நவ்வி, கோயில் குஞ்சுக்குளம் போன்ற இடங்களில் போக்குவரத்து வசதி இல்லாததால் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

மேற்படி இடங்களில் பணியாற்றும் ஆசிரியர்களும் வேறு நிறுவன ஊழியர்களும் போக்குவரத்துச் செய்வதில் பெரும் இடர்படுகின்றனர்.

யாழ்ப்பாணம், வவுனியா போன்ற மாவட்டங்களிலிருந்து பணிக்கு வருபவர்கள் வாகனங்கள் இல்லாததால் உரியநேரங்களில் கடமைக்கு வர முடியா நிலை ஏற்பட்டிருப்பதாக கூறப்பட்டது.

அத்துடன், தங்கியிருந்து பணியாற்றுவதற்கு விடுதி வசதிகள் கூட அங்கு இல்லையென்றும் விசனம் தெரிவிக்கப்பட்டது.

(த-355-202)

# வவுனியா மாவட்ட அபிவிருத்திக்கு 8 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

வவுனியா,ஓக.9

வவுனியா மாவட்டத்தின் அபிவிருத்திப் பணிகளுக்கு வன்னி புனர்வாழ்வு அமைச்சு 8 மல்லியன் ரூபா நிதி ஒதுக்கியுள்ளதாக வவுனியா செயலகத்தின் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இந்தநிதி மூலம் வவுனியா மாவட்டத்தில் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வாழ்ந்துவரும் மக்களை இயல்பு வாழ்க்கைக்கு கொண்டுவருவதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் எனவும் - வன்னி புனர்வாழ்வு அமைச்சினால் மேற்கொள்ளப்படும் ஏனைய வேலைகளுக்கும் இந்தநிதி பயன்படுத்தப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(3-164-203)

# 'முதலுதவி' நூல் வெளியீட்டு விழா நாளை

கிளிநொச்சி,ஓக.9

வேலுப்பிள்ளை ஸ்ரீதரனின் 'முதலுதவி' என்னும் நூல் வெளியீட்டுவிழா நாளை புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கிளிநொச்சி கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட மலேரியா தடை இயக்கமும் வன்னி மாவட்ட சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப் படைப்பிரிவும் இணைந்து இந்த நூலை வெளியிட்டு வைக்கவுள்ளன.

பிராந்திய மலேரியாத்தடை அதிகாரி வைத்திய கலாநிதி கா.சுஜந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக அரச அதிபர் தி.இராசநாயகம், தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ச.விக்கிரமன், பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் வைத்தியகலாநிதி த.சத்தியமூர்த்தி ஆகியோர் கலந்துகொள்வர்.

(த-305-203)

# இரணைஇலுப்பைக்குளம் பகுதியிலிருந்து படையினரை வெளியேறக் கோரிக்கை

ஒட்டுசுட்டான்,ஓக.9

மன்னார் - இரணை இலுப்பைக்குளம் பகுதியில் நிலை கொண்டிருக்கும் இராணுவத்தினர் வெளியேறித் தமது சொந்த இடங்களிற்குச் செல்லவேண்டும் என இப்பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

1999 ஆம் ஆண்டு இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது இரணை இலுப்பைக்குளம், காக்கையன் குளம், பூவரங்குளம், கல்மடுநகர் உள்ளிட்ட 6 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் இடம்பெயர்ந்தனர்.

இவ்வாறு இடம் பெயர்ந்த 400 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் நலன்புரி நிலையங்களிலும் உறவினர் வீடுகளிலும் பல் வேறு இன்னல்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர்.

தாம் சொந்த இடங்களில் குடியமர, பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள இப்பிரதேசத்தைவிட்டு இராணுவத்தினர் அகலவேண்டும் என்றும் இதற்கு உரியவர்கள் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(த-341-204)

## வன்னிச் செய்திகள்

கிளிநொ

# மதுபான சாலையால் மாணவருக்குச் சிரமம்

வட்டக்கச்சி,ஓக.9

வட்டக்கச்சி கட்சன் வீதியில் அமைந்துள்ள மதுபானச் சாலையால் பாடசாலை மாணவர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

பாடசாலை விட்டு மாணவர்கள் செல்லும்போது மது அருந்திவிட்டு நிற்பவர்களின் தகாத வார்த்தைப் பிரயோகங்களால் இந்த மாணவர்கள் அசௌகரியப்பட வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

வட்டக்கச்சி மகாவித்தியாலயத்திற்கு அண்மையில் உள்ள இம்மதுபானச்சாலையை வேறு இடத்துக்கு இடம்மாற்றும்படி இப்பகுதி மக்கள் கேட்டுள்ளனர். (த-405)

# ஆய்வுகூடத் திறப்பு விழா

வட்டக்கச்சி,ஓக.9

கிளிநொச்சி இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ்கலவன் பாடசாலையின் விஞ்ஞான ஆய்வுகூடத் திறப்பு விழா கடந்த 29 ஆம் திகதி நடைபெற்றது.

மு.ப.10.30 மணியளவில் பாடசாலை அதிபர் சி.பாலகிருஷ்ணன் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன. தேசியக்கொடியேற்றலைத் தொடர்ந்து ஆய்வுகூடம் திறந்து வைக்கப்பட்டது. ஆய்வுகூடத்தினை கிளிநொச்சி கல்வி வலய விஞ்ஞான பாட உதவிக் கல்விப்பணிப்பாளர் மு.இரவீந்திரன் நாடாவை வெட்டி சம்பிரதாயபூர்வமாக திறந்துவைத்தார்.

தொடர்ந்து தலைமையுரை இடம்பெற்றது. உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.இரவீந்திரன், கிளி.கிழக்கு புனர்வாழ்வு நிறுவனத்தைச் சேர்ந்த ம.குமாரசாமி ஆகியோர் சிறப்புரைகளை நிகழ்த்தினர்.

இவ்விஞ்ஞான ஆய்வுகூடமானது ஆசிய அபிவிருத்தி வங்கியின் வடக்குக் கிழக்கு மாகாணக் கல்வித்திணைக்கள ஒதுக்கீட்டிலிருந்து அமைக்கப்பட்டது.

(த-405)



சுவிஸில் வசிக்கும் ச.ஆனந்தராசா என்பவர் தனது தந்தையாரின் ஞாபகார்த்தமாக வட்டக்கச்சி மகாவித்தியாலயத்துக்கு 15 லட்சம் ரூபா செலவில் விஞ்ஞான ஆய்வுகூடம் ஒன்றை அமைத்துக் கொடுத்திருந்தார். அதனையொட்டி அவருக்கு நன்றி தெரிவித்து கௌரவிக்கும் முகமாக விழா ஒன்றை பாடசாலை சமூகத்தினர் விழா ஒன்றை நடத்தினர்.

அப்போது வட்டக்கச்சிப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் ச.பொன்னுத்துரை ஆனந்தராசாவுக்கு பொன்னாடை போர்த்துக் கௌரவித்தபோது எடுக்கப்பட்ட படம்.

(த-405)

# ஓய்வுபெற்ற உப அதிபருக்கு சேவைநலன் பாராட்டு விழா

வட்டக்கச்சி,ஓக.9

கிளிநொச்சி இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் ஓய்வுபெற்ற உபஅதிபர் திருமதி கமலாதேவி முத்துலிங்கத்தின் சேவைநலன் பாராட்டு விழா கடந்த 29 ஆம் திகதி நடைபெற்றது.

இவர் இப்பாடசாலையில் ஏழு வருடங்கள் ஆசிரியராகவும் பதினான்கு வருடங்கள் உபஅதிபராகவும் கடமையாற்றி கடந்த மார்ச் மாதம் ஓய்வுபெற்றார்.

இந்த நிகழ்வு பாடசாலையின் அதிபர் சி.பாலகிருஷ்ணன் தலைமையில் இடம்பெற்றது.

முன்னதாக விழா நாயகி வட்டக்கச்சி சந்தியில்இருந்து மாணவர்களின் காவடி ஆட்டத்துடன் அழைத்து வரப்பட்டார்.

வரவேற்புரையினை ஆசிரியர் சி.பரமசிவம் வழங்கினார்.

பெரியகுளம் ஐயனார் வித்தியாலய அதிபர் பே.திருக்கேதீஸ்வரன், பழைய மாணவி ச.ஹம்சானந்தி ஆகியோரும் உரையாற்றினர். பெற்றோர்,பழைய மாணவர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் என பெருமளவானோர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

(த-405)

## கருமாரி அம்மன் ஜோதிடம்



### ஸ்ரீ பாலகிருஷ்ண சாஸ்திரி



இந்தியாவிலிருந்து வருகைதந்துள்ளார்:
இவர் கைரேகை மூலமாக - நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகின்றவை மற்றும் தொழில், வியாபாரம், கல்வி, கணவன்-மனைவி ஒன்று சேர்தல், வெளிநாட்டுப் பயணம் பற்றியும் மற்றும் எதிர்காலப் பலன்களையும் அறிந்துகொள்ள நாடுங்கள்:

**பிள்ளையார் இன், அறை எண் 9,**
31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.No.: 0779233191 (38399)(26.18.45.42)

---



## ஜோதிடம்

**Pandit Kr. Luxumy Narasimha**

ஸ்ரீ சாயி பாபா ஜோதிடம் துர்க்காம்பாள் வசீகரணம் சக்தி ஜோதிடர் இந்தியாவின் புகழ்பெற்ற கேரள மாந்திரீக ஜோதிடர் கணவன் -மனைவி சண்டை, பிரிவு/காதல் திருமணத்தடை- இதுவரை திருமணமே ஆகாதவர்கள்/பிள்ளைகள் சொல் கேளாமல் திரிவது/ வேலை, தொழில் உத்தியோகம் இப்படி பலவாறான பிரச்சினைகளை தீர்த்தும் வைப்பார். செய்வினை, பில்லி சூன்யத்தால் பாதிப்பு/கண் திருஷ்டியினால் வாழ்வில் முன்னேற்றம் இல்லாமை ஆகியவற்றிற்கு பலன் சொல்வதோடு தீர்த்தும் வைப்பார்.

தொடர்பு: **SRI SAWBAKYA INN**
Guest House,
235/7,Point Pedro Road, Anaipanthy, Jaffna.
T.P.: 021- 222 6779, 077 9233070
(38176) (21-18-45-42)

---

## பிறவுண் அன் கம்பனி

அனுசரணையுடன்

### உடுவில் மத்திய விளையாட்டுக்கழகம்

நடத்தும்

### மென்பந்து கிரிக்கெட் மற்றும் கரபந்தாட்ட மாபெரும் சுற்றுப்போட்டி - 2005

**மென்பந்து கிரிக்கெட்:** ஆறுபேர் பங்குபற்றும் ஆறு பந்து பரிமாற்றுக் கொண்ட சுற்றுப்போட்டி

**கரபந்தாட்டம்:** Setup முறையிலான போட்டி. (மின்னொளியில்)

விண்ணப்ப படிவத்தை உடுவில் மத்திய விளையாட்டுக் கழகக் காரியாலயத்தில் மாலை 4 மணி முதல் 6 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.
விண்ணப்ப முடிவுதிகதி: 20-08-2005
அணிஒழுங்கு தேர்வுதிகதி : 21-08-2005 மாலை 5 மணி
தொடர்பு: 0777 715104

மேலதிக விவரங்கள் நேரில்

உடுவில் மத்திய வி/கழகம். - செயலாளர்.
(இ-44474)(42.18.45)

---

## சமய சந்நிதியில்

சங்குவேலி ஸ்ரீசிவ ஞான விநாயகர் தேவஸ்தான வருடாந்தப் பெருந்திருவிழா நாளை புதன் கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாள்களுக்கு உற்சவம் நடைபெறும்.

இம்மாதம் 18 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு நவசிற்பரதோற்சவமும் மறுநாள் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சிந்து தீர்த்தமும் இடம்பெறும்.தினமும்அன்னதானம் வழங்க இம்முறை ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (த-152)

### சுந்தரமூர்த்திநாயனார் குருபூசை தின நிகழ்வுகள்

அகில இலங்கை திருமுறை மன்றம் எதிர்வரும் 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசையை நடத்தியுள்ளது.

எதிர்வரும் 12ஆம் திகதி காலை 8 மணிக்கு வேலணை சேர்.வைத்திலிங்கம் துரைசாமி வித்தியாலய சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமான் ஆலயத்திலும் -

அன்றைய தினம் பிற்பகல் 4 மணிக்கு நல்லூர்சட்டநாதர் ஆலயத்திலும் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசையை அகில இலங்கை திருமுறை மன்றத்தினர் நடத்தவுள்ளனர். (எ-203)

---

## எற்கின்ஸ்பென்ஸ் நிறுவனத்தின் மற்றுமொரு சேவை





We intrude another special services to the people of Jaffna

குறைந்த செலவில் சொகுசு பயணம்
Low expenses
comparable journey

முற்றிலும் குளிரூட்டப்பட்ட 24 ஆசனங்களுடன் சொகுசு பஸ் சேவை

24 seats Bus with tall A/C
10 seats van with tall A/C

யாழ்.மக்களுக்கு குளிரூட்டப்பட்ட 10ஆசனங்களைக் கொண்ட சொகுசு வான்சேவையும் அறிமுகப்படுத்தியுள்ளோம் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

எற்கின்ஸ்பென்ஸ் ஓவர்சீஸ் ரவல்ஸ் சேவிஸஸ் பிறைவேற் லிமிட்டட்
56/15, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
0777 915824
0777 270452, 021 2223771 (C/44477)(50)

உங்கள் நம்பிக்கையான பயண முகவர்

---



உ

## கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய

### பார்த்திப வருடாந்த மஹோற்சவம் - 2005

10-08-2005 புதன் - கொடியேற்றம் முற்பகல் 11 மணி
15-08-2005 திங்கள் -கைலாசவாகனம் இரவு 7.30 மணி
16-08-2005 செவ்வாய் - தண்டாயுதபாணி உற்சவம் பி.ப.2 மணி
17-08-2005 புதன் - சப்பறத் திருவிழா இரவு 7.30 மணி
18-08-2005 வியாழன் - தேர்த்திருவிழா காலை 9 மணி
19-08-2005 வெள்ளி - தீர்த்தத் திருவிழா காலை 9.30 மணி
20-08-2005 சனி - பூங்காவனம் மாலை 6.30 மணி
21-08-2005 ஞாயிறு - அலங்காரத் திருவிழா மாலை 6 மணி

புதிதாக உருவமைக்கப்பட்ட கைலாசவாகனம் வெள்ளோட்ட விழா 14.08.2005 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4.30 மணிக்கு நடைபெறும்.

அடியார்கள் அனைவரும் வருக!
ஆறுமுகன் அருள் பெறுக!!

வே.நடராசா
பெறுநர்.
(38623)(32-18-45-42)

ஆலயத்தொண்டில் -
ஆலய நிர்வாக சபையும், இளந்தொண்டர்களும்.

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



அமரர்

## இராசரட்ணம் விஜியகுமார்

(கோப்பாய் விஜி)

தோற்றம் 23-05-1959 மறைவு 10-07-2005

**அன்பின் குலவிளக்கே! எம் அன்புத் தெய்வமே!!**
**கண் இமைக்கும் நேரத்தில் காற்றாய் நீ மறைந்தாலும்**
**எம் மூச்சுள்ளவரை எம்மிதயத்தில் நீ உறைந்திருப்பாய்**
**ஆத்மா சாந்திபெற இறைவனை வேண்டுகின்றோம்.**

*எங்கள் குடும்பத் தலைவரின் மரணச்செய்தி கேட்டு உடனே வந்து எமக்குப் பல உதவிகள் செய்தவர்களுக்கும் நேரிலும் தொலைபேசியிலும் வேறு பல வழிகளிலும் எமக்கு ஆறுதல் கூறி அனுதாபந்தெரிவித்தோருக்கும் இறுதி ஊர்வலத்தில் பங்குகொண்டோருக்கும் முக்கியமாக வெளிநாடுகளில் இருந்து கடுகதி வேகத்தில் வந்து அனுதாப அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.*

*இன்று (09-08-2005) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

(38617)(42.18.45)

கோண்டாவில் வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

- குடும்பத்தினர்.

# யாழ். மாவட்ட போட்டிகளில் இந்தவருடம் ௭ சாதனைகள்!


என்.சிறிவித்தியா


சு.தர்சினி


ஐ.அனுசியா


என்.கருணாகலாதேவி


மா.பிரதீப்குமார்


தி.வாசுகி


எஸ்.கமலமோகன்

யாழ்ப்பாணம்,ஓக.9

யாழ்.மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்களுக்கு இடையிலான தடகளப் போட்டிகள் கடந்த சனி, ஞாயிறு தினங்களில் யாழ். பொது விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றன.

இதில் சனிக்கிழமை நடைபெற்ற ஆரம்ப நாள் போட்டியில் 3 புதிய சாதனைகளும் இறுதிநாள் நடைபெற்ற போட்டிகளில் 4 புதிய சாதனைகளும் நிகழ்த்தப்பட்டன.

சாதனை படைத்தோர் விவரம் வருமாறு:

பெண்களுக்கான 100 மீற்றர் ஓட்டத்தில் 1990 ஆம் ஆண்டு தெல்லிப்பழை பிரதேச செயலக வீராங்கனை ச.தில்லானா சுமங்கல்யா 13.5 வினாடிகளில் ஓடிமுடித்து புரிந்த சாதனையை 15 வருடங்களின் பின்னர் சங்கானைப் பிரதேச செயலக வீராங்கனை என்.சிறிவித்தியா 13.4 வினாடிகளில் ஓடி முறியடித்து புதிய சாதனை படைத்தார்.

ச.தில்லானா சுமங்கல்யா 1989ஆண்டு 200 மீற்றர் ஓட்டத்தினை 28.5 வினாடிகளில் ஓடி சாதனை புரிந்தார் அந்தச் சாதனையையும்16 வருடங்களின் பின்னர் என்.ஸ்ரீ வித்தியா 28.3 வினாடிகளில் ஓடி முறியடித்தார்.

பெண்களுக்கான குண்டு எறிதல் போட்டியில் 2002 ஆம் ஆண்டு தெல்லிப்பழைப் பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த மா.கார்த்திகா 8.57 மீற்றர் தூரம் எறிந்து சாதனை புரிந்தார். மூன்று வருடங்களின் பின்னர் யாழ்.பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த கு.தர்சினி 9.04 மீற்றர் தூரம் எறிந்து புதிய சாதனை புரிந்துள்ளார்.

பெண்களுக்கான முப்பாய்ச்சல் நிகழ்வில் 2001 ஆம் ஆண்டு நல்லூர் பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த செ.குகாயினி 10.23 மீற்றர் தூரத்தினைப் பாய்ந்து நிகழ்த்திய சாதனையை 4 வருடங்களின் பின்னர் யாழ்.பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த தி.வாசுகி 10.24 மீற்றர் தூரம் பாய்ந்து முறியடித்துப் புதிய சாதனையைப் படைத்தார்.

பெண்களுக்கான ஐயாயிரம் மீற்றர் ஓட்டத்தை 2003 ஆம் ஆண்டு சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த வீராங்கனை சி.சிவறஞ்சினி 21 நிமிடங்கள் மற்றும் 28.8 வினாடிகளில் ஓடிமுடித்திருந்தார்.

2 வருடங்களின் பின்னர் இப்போது சாவகச்சேரி பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த ஐ.அனுசியா 20 நிமிடங்கள் மற்றும் 57.1 வின டிகளில் ஓடிமுடித்து புதிய சாதனை படைத்தார்.

பெண்களுக்கான தட்டெறிதல் நிகழ்வில் 1981 ஆம் ஆண்டு நல்லூர் பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த த.கலாஜினி 27 மீற்றர் தூரம் எறிந்தார். அதுவே இதுவரை சாதனையாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது. ஆனால் இப்போது 24 வருடங்களுக்குப் பின்னர் நெடுந்தீவு பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த என்.கருணாகலாதேவி 27.10 மீற்றர் எறிந்து புதிய சாதனை நிகழ்த்தினார்.

ஆண்களுக்கான குண்டு எறிதல் போட்டியில் சாவகச்சேரி பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த மா.பிரதீப்குமார் 2004 ஆம் ஆண்டு நிகழ்த்திய 13.34 மீற்றர் சாதனையை ஒரு வருடத்தின் பின்னர் மீண்டும் 13.67 மீற்றர் தூரம் எறிந்து தனது சாதனையை தானே முறியடித்துப் புதிய சாதனையைப் புரிந்துள்ளார்.

ஆண்களுக்கான உயரம் பாய்தல் நிகழ்வில் 2003 ஆம் ஆண்டு கோப்பாய் பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த ந.கிஷோக்குமார் 1.91 மீற்றர் உயரம் பாய்ந்து நிகழ்த்திய சாதனையை இரண்டு வருடங்களின் பின்னர் தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த எஸ்.கமலமோகன் 1.95 மீற்றர் உயரம் பாய்ந்து புதிய சாதனை புரிந்துள்ளார்.

(த-190)

# துஸ்யந்தன் ஞாபகார்த்த கிரிக்கெட் போட்டி; வல்வெட்டித்துறை கழுகுகள் அணி வெற்றி!

வலி.வடக்கு,ஓக.9

தமிழீழ விளையாட்டுத்துறையின் ஆதரவுடன் 'உதயனின்' ஊடக அனுசரணையுடனும், சுன்னாகம் ஸ்கந்தா ஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்தும் அமரர் ஜெகசோதி துஸ்யந்தன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்திற்கான 30 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் போட்டியொன்றில் வல்வெட்டித்துறை கழுகுகள் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றுள்ளது.

கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இவ்வாட்டத்தில் அரியாலை மத்தி விளையாட்டுக் கழகமும் வல்வெட்டித்துறை கழுகுகள் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய கழுகுகள் விளையாட்டுக்கழகம் 30 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 193 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

கழுகுகள் விளையாட்டுக்கழகத்தின் சார்பில் அருச்சுனராஜ் 48, ஜீவன் 46, கோபிநாத் 28, சுதன் 17 ஓட்டங்களை பெற்றுக் கொண்டனர்.

அரியாலை மத்தி விளையாட்டுக் கழகத்தைச்சேர்ந்த கண்ணன், காண்டீபன் ஆகியோர் தலா 13 ஓட்டங்களைக் கொடுத்து ஒவ்வொரு விக்கெட்டைக் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அரியாலை மத்தி விளையாட்டுக் கழகம் 118 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தனர்.

சுதர்சன், பிரதீபன் ஆகியோர் தலா 19 ஓட்டங்களையும், காண்டீபன் 18, சண்முகலிங்கம் 14 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொண்டனர்.

கழுகுகள் அணி சார்பில் பந்துவீசிய ராதாமோகன் 6 ஓவர்களில் 13 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களையும் சுதன் 4 ஓவர்களில் 21 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

வல்வெட்டித்துறை கழுகுகள் விளையாட்டுக் கழகம் முதல் தடவையாக தோற்பந்து கிரிக்கெட் போட்டியில் கலந்துகொண்டுள்ளதுடன் வடமராட்சிப் பகுதியில் இருந்து கிரிக்கெட் தோற்பந்து விளையாடும் முதல் அணியென்பதும் குறிப்பிடத்தக்கது.

இப் போட்டியின் சிறந்த வீரராக கழுகுகள் விளையாட்டுக்கழகத்தின் வீரர் ராதாமோகன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.(த-86)

## கொரிய விளையாட்டு விழாவில் அஞ்சலோட்ட அணியில் யாழ்.வீரர் பங்கேற்பு



யாழ்ப்பாணம்,ஓக.9

கொரியாவில் நடந்து முடிந்துள்ள சமாதானத்துக்கான விளையாட்டு விழாவில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த அ.டியூறன் இலங்கை அணியின் சார்பாக 4×100 மீற்றர் அஞ்சலோட்டக் குழுவில் இடம்பெற்றிருந்தார். இந்த அஞ்சலோட்டக் குழுவினர் இரண்டாவது இடத்தினைப் பெற்று வெள்ளிப்பதக்கத்தினைப் பெற்றுக்கொண்டனர்.

(த-190)

விளையாட்டு

# கே.ஸி.ஸி.ஸி. கிண்ணத்தை பற்றீசியன் அணி சுவீகரித்தது

யாழ்ப்பாணம், ஓக.9

கே.ஸி.ஸி.ஸி. வெற்றிக்கிண்ணத்திற்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. இதில் பற்றீசியன் வி.க. அணி வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் வி.க.அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 167 ஓட்டங்களைப்பெற்றது.

லவேந்திரா, குமணன், நிருபன், மதன்ராஜ் ஆகியோர் முறையே 60,19,10,09 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர். ஜெயமுகுந்தன் 4 விக்கெட்டுக்களையும், பார்த்தீபன் 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பற்றீசியன் அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 171 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

பார்த்தீபன், விஜயாளன், சுஜீவன் ஆகியோர் முறையே 45,37,19 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

ரதிஸ்குமார் 2 விக்கெட்டுக்களையும், நிருபன், லவேந்திரா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

சிறந்த களத்தடுப்பாளராக பற்றீசியன் அணி வீரர் விஜயாளனும், சிறந்த துடுப்பாட்ட வீரராக ஜொனியன்ஸ் அணி வீரர் லவேந்திராவும், சிறந்த பந்து வீச்சாளராக பற்றீசியன் அணி வீரன் ஜெயமுகுந்தனும், ஆட்டநாயகனாக பற்றீசியன் வீரர் பார்த்தீபனும் தெரிவுசெய்யப்பட்டனர். (த-190)

# ஒட்டுசுட்டானிலுள்ள 27 முன்பள்ளிகளின் பாலகர்கள் பங்கேற்ற விளையாட்டு விழா

## கற்சிலைமடுவில் சிறப்பாக நடைபெற்றது

ஒட்டுசுட்டான்,ஓக.9

முல்லை. அகதிகள் புனர்வாழ்வுக் கழகம், பொருண்மிய மதியுரையகம், மாங்குளம் அபிவிருத்தி நிறுவனம் என்பன இணைந்து நடத்திய ஒட்டுசுட்டான் பிரதேசத்திற்குட்பட்ட 27 முன்பள்ளிகளுக்கான விளையாட்டுவிழா கற்சிலைமடு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் கடந்த 31 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு முல்லை. அகதிகள் புனர்வாழ்வுக் கழக திட்ட இணைப்பாளர் சுதாகரன் தலைமையில் நடைபெற்றது.

பொதுச்சுடரினை மாங்குளம் அபிவிருத்தி நிறுவனத் தலைவர் சத்திவேல் ஏற்றிவைத்தார். தமிழீழத் தேசியக் கொடியினை ஒட்டுசுட்டான் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழரசன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து முல்லை. அகதிகள் புனர்வாழ்வுக்கழகம், தமிழர் புனர்வாழ்வுக்கழகம், மாங்குளம் அபிவிருத்தி நிறுவனம், பொருண்மிய மதியுரையகம், முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிறுவனம் என்பனவற்றின் கொடியேற்றத்துடன் முன்பள்ளிகளுக்கான கொடிகளும் ஏற்றிவைக்கப்பட்டன.

முன்பள்ளிச் சிறார்களால் ஒலிம்பிக் தீபம் ஏற்றப்பட்டு, சத்தியப் பிரமாணம் எடுக்கப்பட்டது.

விளையாட்டின் வரவேற்புரையினை முன்பள்ளி அபிவிருத்தி ஒட்டுசுட்டான் பிரதேச இணைப்பாளர் யோகேஸ்வரியும் ஆசியுரையினை முன்பள்ளிகளுக்கான ஆலோசகர் ஆ.திருநாவுக்கரசுவும் வழங்கினர்.

பண்டாரவன்னி, பரந்தாமன், வசுமதி, நித்தியா, பைந்தமிழ், கனிஸ்ரா, தென்னிந்திய திருச்சபை, வைகறை, பாரதி, தினேஸ், மாவீரர், தசன், பாரதி, நாவலர், அன்பழகன், தவம், இளஞ்சுடர், கலைமகள், கிருபன், அருணா, மருது, மாலதி, முத்துவிநாயகபுரம், அகஸ்ரின், அறிமொழி, ஜெயக்குமார், நியூட்டன் ஆகிய 27 முன்பள்ளிகளின் மாணவர்கள் இந்த விழாவில் பங்கேற்றனர்.

கருத்துரைகளை கற்சிலைமடு கிராம அலுவலர் தி.ஆனந்தராசா, மாங்குளம் அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர் சத்திவேல், மாங்குளம் அபிவிருத்தி நிறுவனப் பொருளாளர் கருணேஸ்வரன், முல்லை. கல்வி மேம்பாட்டு நிறுவன குழு ஆலோசகர் திருநாவுக்கரசு ஆகியோர் வழங்கினர். போட்டியில் பங்குபற்றியோருக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன. (த-341)

## தாச்சிப்போட்டி

தமிழீழ விளையாட்டுத்துறை யாழ். மாவட்ட தாச்சிச்சங்கம் ஆகியவற்றின் ஆதரவு டன் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகம் லீக் முறையில் தாவடிப் பகுதி மாவீரர் நினைவாக நடத்திவரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு காளியம்பாள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் கலந்துகொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

சுதுமலை நாவலர் விளையாட்டுக் கழகம், எதிர் கைதடி வளர்மதி விளையாட்டுக் கழகம். (த-81)

# மாவட்ட மட்ட தடகளப் போட்டியில் யாழ்.பிரதேச செயலகம் முன்னணி!

யாழ்ப்பாணம்,ஓக.9

யாழ்.மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்களுக்கிடையிலான தடகளப் போட்டி கடந்த சனி, ஞாயிறு தினங்களில் யாழ்.பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றன.

இந்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.அரச அதிபர் கே.கணேஸும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாநகரசபை ஆணையாளர் க.குணராசா, தமிழீழ விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்தத் தடகளப் போட்டியில் சிறந்த தடகள வீரனாக யாழ்.பிதேச செயலக பிரிவைச் சேர்ந்த எம்.சஞ்ஜீவும், சிறந்த தடகள வீராங்கனையாக சங்கானை பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த சிறிவித்தியாவும் தெரிவு செய்யப்பட்டனர்.

சிறந்த கள வீரனாக தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவைச்சேர்ந்த எஸ்.கமலமோகனும் சிறந்த கள வீராங்கனையாக யாழ்.பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த தி.வாசுகியும் தெரிவு செய்யப்பட்டனர்.

ஆண்கள் பிரிவில் யாழ்.பிரதேச செயலக பிரிவு 47 புள்ளிகளைப் பெற்று முதலாவது இடத்தினையும் சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவு 29 புள்ளிகளைப்பெற்று இரண்டாவது இடத்தினையும்,

சாவகச்சேரி பிரதேச செயலக பிரிவு 26 புள்ளிகளைப் பெற்று மூன்றாவது இடத்தினையும் பெற்றது.

பெண்கள் பிரிவில் யாழ்.பிரதேச செயலக பிரிவு 36 புள்ளிகளைப் பெற்று முதலாவது இடத்தினையும் சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவு 32 புள்ளிகளைப் பெற்று இரண்டாவது இடத்தினையும், சாவகச்சேரி பிரதேச செயலக பிரிவு 27 புள்ளிகளைப் பெற்று மூன்றாவது இடத்தினைப் பெற்றது.

இந்த வருடத்துக்கான சகல போட்டிகளின் அடிப்படையில் 54 புள்ளிகளைப் பெற்று பருத்தித்துறை பிரதேச செயலகம் முதலாவது இடத்தினைப் பெற்றது.

(த-190)

# யாழ்ப்பாண மாநகரசபை

## நல்லூர் உற்சவம் 2005 - வீதித்தடை பற்றிய அறிவித்தல்

நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு கீழ்க்குறிப்பிடப்படும் வீதிகள் 10-08-2005 ஆம் திகதி தொடக்கம் 04-09-2005 ஆம் திகதி வரை வாகனப்போக்குவரத்துக்காக மூடப்பட்டிருக்கும்.

01. மூடப்பட்டிருக்கும் வீதிகள்

- அரசடிச் சந்திக்கும் 2ஆம் கட்டைத் தூணுக்கும் இடைப்படும் பருத்தித்துறை வீதியின் அப்பாகம்.
- பிராமணக் கட்டுக்குளம் சந்தியிலிருந்து சங்கிலியன் வீதிச் சந்திக்கு இடைப்படும் கோயில் வீதியின் அப்பாகம்.
- செட்டித்தெரு ஒழுங்கையிலிருந்து செட்டித்தெருவின் அப்பாகம்.

02. பாதை மாற்றம்

- பேருந்துகள், சிற்றூர்திகள் மற்றும் சுமைகூடிய வாகனங்கள் ஆனைப்பந்திச் சந்தியிலிருந்து நாவலர் வீதி, கச்சேரி நல்லூர் வீதி, செம்மணி வீதி மற்றும் முத்திரைச் சந்தியூடாகச் செல்லல்.
- பருத்தித்துறை வீதிக்கும் நாவலர் வீதிக்கும் இடைப்பட்ட நல்லூர் குறுக்கு வீதியால் பேருந்துகளும் சிற்றூர்திகளும் செல்லுவது முற்றாகத் தடைசெய்யப்படும்.

03. வாகனத் தரிப்பிடங்கள்

- முத்திரைச் சந்தைப் பகுதியில் சங்கிலியன் சிலைக்கு எதிர்ப்பக்கமாக பருத்தித்துறை வீதியில்.
- கந்தர்மடச் சந்திக்கு அப்பால் அரசடி வீதியில்
- அம்மன் வீதி, பருத்தித்துறை வீதி சந்திக்கு அப்பால் பருத்தித்துறை வீதியில்
- செம்மணி வீதியில் பூங்காவிற்கு அப்பால்

கலாநிதி க.குணராசா,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

(சி- 44483)(26-18-19)

# கண்ணீர் அஞ்சலி

08-08-2005 அன்று
அகாலமரணமடைந்த
எமது கல்லூரி மாணவி

**செல்வி கீர்த்தனா வாமதேவனின்**



திடீர் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன் துயரில் நாமும் பங்கேற்று அவரின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சுண்டிக்குழி மகளிர் கல்லூரி.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவிகள், ஊழியர்கள்.

(சி-44482)(26-18-19)

# கண்ணீர் அஞ்சலி

மழலைச் சிரிப்பில்
13 - 12 - 1988

அகோரப் பிடியில்
08 - 08 - 2005



## கீர்த்தனா வாமதேவன்

A/L 2007 கணிதப் பிரிவு,
சுண்டிக்குழி மகளிர் கல்லூரி

*'மரணம்'! உனக்கு மரணம் என்று*
*இன்றும் நாங்கள் நம்பவில்லையே!*
*பிறகு எப்படி எழுதுவது உனக்கு அஞ்சலி?*
*இன்றும் நீ எங்களுடன் வழமைபோல்*
*சிரித்தபடி இருக்கிறாயே...!*

*எப்படிச் சொல்வது நேற்றிருந்த நீ*
*இன்றில்லை என்று?*
*தோழி உன் ஒவ்வொரு சின்னச் சின்ன ஞாபகங்களும் கூட*
*உருண்டு கொண்டே இருக்கின்றன*
*கண்ணீர்த் துளிகளாய் எம் கண்களில்*
*வந்துவிடு தோழி மீண்டும் வாழ*
*விபத்துக்களற்ற ஒரு தேசத்தில்.....*

(A/L) 2007 மாணவிகள்
சுண்டிக்குழி மகளிர் கல்லூரி.

(39645)(42-14-26)


ஆங்கில. கணனி. நிர்வாக
பணியிடங்களுக்கான வெற்றிடம்

நீங்கள் க.பொ.த.உ. தரத்தில்
சித்தி பெற்றவரா?

SAAMSTECH இன் 3 மாத ஆங்கில ஆசிரியர் பயிற்சிநெறி மூலமாக ஆசிரிய, கணனி அலுவலக மற்றும் நிர்வாக பணியிடங்களுக்குத் தகுதிபெறமுடியும்.

வாரத்தில் 5 நாள்கள் தினமும் 4 மணிநேர வகுப்பு.

கட்டணம்:ரூ.12000/=

3மாத பயிற்சி முடிவில் அந்தந்த மாவட்டத்தில் பணிநியமனம். முதலில் வரும் 40 பேர் மட்டும் பயிற்சிக்கு தெரிவுசெய்யப்படுவர். பட்டதாரிகளும் கலந்துகொள்ளலாம்.

SAAMSTECH
841, Hospital Road, Jaffna.
Hotline : 077 - 3068968


## மாநகர தீயணைப்புப் பிரிவின் தொலைபேசி இலக்கம் மாற்றம்

யாழ்ப்பாணம்,ஓக.9

யாழ்.மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவிற்குரிய தொலைபேசி இலக்கம் மாற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் 222 3556 என்னும் இலக்கத்துடன் மேற்கொள்ளப்பட்டுவந்த தொலைத்தொடர்பு அழைப்பை இனிமேல் 222 3333 எனும் இலக்கத்துடன் மேற்கொள்ளவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-ரி)

## கிராம அபிவிருத்திச் சங்கம் அங்குரார்ப்பணம்

கொழும்புத்துறை,ஓக.9

அரியாலை மத்தி மேற்கு(ஜே/92) கிராம அபிவிருத்திச் சங்கம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது.

அரியாலை சனசமூக நிலையத்தில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பின்வருவோர் நிர்வாக சபைக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தலைவர் ஏ.ஜே.செல்வரத்தினம், செயலாளர் வி.பரராசசிங்கம் , பொருளாளர் ரி.திலீபன், போஷகர்களாக எஸ்.ரி. பத்மநாதன், எஸ். செல்வநாதன்(கிராம அலுவலர்) ஆகியோர் தெரிவாகினர். (எ-30)

## சிறப்பு மலர் வெளியிட ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஓக.9

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம் தனது 20 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சிறப்பு மலர் ஒன்றை வெளியிடவுள்ளது.

இது தொடர்பாகக் கழக பழைய மாணவர்களுடனான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 15ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்குக் கழக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் கழகத்தின் பழைய மாணவர்களைக் கலந்துகொள்ளுமாறு கழகச் செயலாளர் கேட்டுள்ளார். (எ-202-203)

## கொடியேற்றம்

யாழ்ப்பாணம்,ஓக.9

புங்குடுதீவு கதிர்காமத்தின் பெருந்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

தேர்த்திருவிழா எதிர்வரும் 17 ஆம் திகதியும், மறுதினம் தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும்.(எ-204)

## ஆண்டுவிழாவும் விளையாட்டுப்போட்டியும்

உரும்பிராய் அண்ணா சனசமூக நிலையத்தின் 33 ஆவது ஆண்டு விழாவும் 18 ஆவது விளையாட்டுப்போட்டியும் இன்று ஆரம்பமாகவுள்ளன.

இந்நிகழ்வுகள் இன்று பி.ப 2.30 மணியளவில் ஆரம்பமாகும். முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் மாதுளன் ஆகியோரும் சிறப்பு விருந்தினராக தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரனும் கலந்துகொள்ளவுள்ளனர். விளையாட்டுப் போட்டிகள் தொடர்ந்து மூன்று நாள்கள் நடைபெறவுள்ளன. (த-ரி)

# நெஞ்சம் நெகிழ்ந்த கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை அதிபர்
திரு.ச. வாமதேவன் அவர்களின்
சிரேஷ்ட புதல்வி



**செல்வி**

**வா.கீர்த்தனா**

நேற்று (08-08-2005) அகாலமரணமடைந்துவிட்டார். அவர்களுக்குப் பாடசாலையின் சார்பில் எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதுடன் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அத்துடன் அன்னாரின் ஆன்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலை ஆசிரியர்கள்,
கல்விசாரா ஊழியர்கள், மாணவர்கள்.

யா /கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயம். (38647)(26)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி செல்வரத்தினம் சின்னையா



கைதடி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சி.செல்வரத்தினம் 08.08.2005 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வைரமுத்து - கந்தவனம் தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற இரகுநாதர் சின்னையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற ராசரத்தினம், நாகரத்தினம், கனகரத்தினம் (கதிர்வேலன் அரிசி ஆலை, கைதடி), விக்னேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் பொன்னம்பலம் (உசன்), காலஞ்சென்றவர்களான தாமோதரம் பிள்ளை, சத்தீஸ்வரி ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை, ஆறுமுகம், செல்லப்பா, சுப்பிரமணியம் ஆகியோரின் சகோதரியும் செல்லமுத்து, காலஞ்சென்றவர்களான பொன்னம்மா, தில்லப்பிள்ளை, கந்தையா, தங்கமுத்து, வள்ளிநாயகி, பொன்னையா(நீர்வேலி) ஆகியோரின் மைத்துனியும் அபிராமி, அனுசியா, ஐங்கரன்(லண்டன்), ஜெயதரன், திவ்வியா , கௌசிகா, ஜீவிகா, கம்சிகா, சயந்தன், கதிர்செல்வன், செல்லக்கதிர், எழில்வேந்தன் ஆகியோரின் பேர்த்தியும் புவஷாந்தின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09-08-2005) அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பகல் ஒரு மணிக்கு ஊற்றல் மயானத்துக்குத் தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


கைதடி கிழக்கு,
கைதடி.

தகவல்:
சி.கனகரத்தினம்
(மகன்).

(38649)(26.14.45)

## வேலுப்பிள்ளை குழந்தைவடிவேல்

(முன்னாள் தேர்தல் அலுவலர், யாழ்.கச்சேரி )



உடுவிலைப் பிறப்பிடமாகவும் சரவணையை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்து வந்தவருமான வேலுப்பிள்ளை குழந்தைவடிவேல் 04.08.2005 வியாழக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - விசாலாட்சி தம்பதியினரின் அன்பு மகனும் நடராசா - பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் சரஸ்வதியின் ஆருயிர்க் கணவரும் சக்திவடிவேல் (கனடா), காலஞ்சென்ற உருத்திராதேவி மற்றும் ஆனந்தவடிவேல் (கனடா), கிருபாதேவி (ஜேர்மனி), இலங்கையில் வசிப்பவர்களான ஸ்ரீதேவி, தவநிதி, சதிதேவி, சுரேந்திரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயகௌரி (கனடா), தவராஜா (இலங்கை), சந்திரகாந்தா (கனடா), அமரநாதன் (ஜேர்மனி), சிங்கராஜா (இலங்கை), ஜெயச்சந்திரன் (இலங்கை), கலியுகன் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் கமலாதேவி (ஆஸ்திரேலியா), காலஞ்சென்றவர்களான தவமணிதேவி, சந்நிதிவடிவேல், ஆனந்தவடிவேல் மற்றும் சந்திரவடிவேல் (இலங்கை), சற்குணதேவி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் சிவஞானம் (இலங்கை), காலஞ்சென்ற தனலட்சுமி மற்றும் ராசரட்ணம்(இலங்கை), சிவபாக்கியம் (இலங்கை) , யோகராசா (இலங்கை), செல்வரட்ணம் (France), பரமேஸ்வரி (இலங்கை) ஆகியோரின் அன்பு மைத்துனரும் சோபனா, சோபிதா, அமல், நிமல், கமல், அகில், சிந்தியா, அர்ச்சனா, சோனியா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் கடந்த 07-08-2005 ஞாயிற்றுக்கிழமை 5மணி முதல் 9மணி வரையும் 08-08-2005 திங்கள் 5மணி முதல் 9மணி வரையும் **4164, Shapperd Ave, East** இல் அமைந்துள்ள **Orgedan Funeral Home** இல் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு, பின்னர் இன்று (09-08-2005) செவ்வாய்க்கிழமை 9மணி முதல் 11 மணி வரை **Steel/Donmillss** இல் அமைந்துள்ள 33, **Higland Momerial Garden** இல் இறுதிக்கிரியைகள் நடை பெற்று அங்கு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

58, வைமன் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

தகவல்: மகன்மார்
சத்தி - (905) 209-9465
யோகன்- (416) 267-7383
சுரேன் - 416-713-0930
மருமகன் - சிங்கராசா
(குட்டிமாமா)
T.P.: 0776922926

(38634)(26.18.19)

# தமிழருக்கான சம உரிமைகள் முஸ்லிம்களுக்கும் கிடைப்பதை தலைவர் பிரபா உறுதிப்படுத்தவேண்டும்

## ரிஷாத் பதியுதீன் வேண்டுகோள்

வடக்கில் தமிழ் மக்களுக்கு அளிக்கப்படுகின்ற உரிமைகளுக்குச் சமனாக முஸ்லிம்களுக்கும் உரிமைகள் கிடைக்கச் செய்வதை விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உறுதிப்படுத்த வேண்டும் எனப் புனர்வாழ்வளிப்பு, வன்னி மாவட்ட அபிவிருத்தி அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

வவுனியா நகர மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு பேசும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

வவுனியா மாவட்ட சமூர்த்தி இணைப்பாளர் எம்.முத்துமுகம்மத் தலைமையில் நடந்த இந்த நிகழ்வில் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் பேசுகையில் மேலும் கூறியதாவது:-

கடந்தகால தேர்தலின்போது வடக்கு முஸ்லிம்கள் இருவர் நாடாளுமன்றில் பிரதிநிதித்துவத்தைப் பெற்றிருந்தனர். துரதிஷ்டவசமாக அது இம்முறை ஒன்றாக குறைக்கப்பட்டுவிட்டது. எவர் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும், இந்த ஒரு பிரதிநிதித்துவத்தை வைத்துக்கொண்டே குறிப்பாக வடமாகாண முஸ்லிம்களுக்காகப் பேசவேண்டிய தேவையேற்பட்டுள்ளது.

வன்னிமாவட்ட முஸ்லிம் சமூகம், ஒற்றுமைப்பட்டு எமக்களித்த வாக்கின் பலத்தைக் கொண்டு, இன்று நாங்கள் பல விடயங்களை இந்த அரசுடன் பேசுகின்றோம்.

கடந்த 15 வருடகாலமாக ஆசிரிய நியமனங்கள் வழங்குகின்றபோது, வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம்கள் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றனர். வட புலத்திலே இவர்கள் வாழவில்லை என்பதற்காக இவர்களது நியமனங்கள் அப்பகுதியில் மறுக்கப்படுகின்றன. அவர்கள் தற்போது வாழ்கின்ற பிரதேசங்களில், வாக்காளர் இடாப்பில் பெயர்இல்லை என்பதால், அங்கும் அவர்களுக்கு நியமனம் நிராகரிக்கப்படுகின்றது.

எனவே, எங்களுடைய 25 ஆயிரம் மாணவர்கள் கல்விபயிலும், பாடசாலைகளில் ஆசிரியர்கள் இல்லாதநிலை காணப்படுகின்றது. இப்பிரச்சினையைத் தீர்க்க எமக்கும் 500 ஆசிரியர்களைத் தரவேண்டுமென ஜனாதிபதியுடன் பேசி, அதற்கான பல போராட்டங்களை நியாயபூர்வமாக நடத்தி, அந்த நியமனங்களை பெறுவதற்கான ஏற்பாடுகளை இந்த 6 மாதகால அரசியலிலே செய்கின்றோம்.

நாங்கள் மண்ணை இழந்திருக்கின்றோம். எமது சொத்துக்களை இழந்திருக்கின்றோம். இவற்றைவிட வேறு மாவட்டங்களில் அகதிகளாக, முகாம்களில் வாழ்ந்து அவலப்பட்டுக்கொண்டிருக்கின்றோம்.

இவ்வாறு அவலத்துடன் வாழும் வடக்கு முஸ்லிம்களுக்கான தீர்வைப் பெற்றுக் கொடுக்கவேண்டும். நாங்கள் தமிழ் சமூகத்துக்கு எதிரானவர்கள் அல்லர். தமிழ் சமூகத்தின் போராட்டத்தை காட்டிக்கொடுப்பவர்களும் அல்லர். தமிழ் சமூகத்துடன் மோதிக்கொண்டு வாழவேண்டும் என விரும்புபவர்களும் அல்லர். மாறாக தமிழ் சமூகத்துடன் சேர்ந்து உறவினர்கள்போல் வாழவேண்டும் என்ற எண்ணத்தைக் கொண்டவர்கள்.

எமக்கு கடந்த காலத்தில் இழைக்கப்பட்ட அநீதிகளுக்காக எவருக்கும் எதிராகவும் நாம் எப்போராட்டத்தையும் செய்யவில்லை. நாங்கள் அனுபவிக்கின்ற துன்பங்களுக்காக, தமிழ் சமூகத்துக்கு எதிராக ஒரு கல்லைக் கூட வீசவில்லை என்பதை உறுதியாகக் கூறிக்கொள்ளவிரும்புகின்றேன்.

என்றோ, ஒருநாள் எங்களது தாயக மண்ணிலே, எங்களது மூதாதையர்களின் மையத்துகள் அடக்கப்பட்டிருக்கின்ற பூமியிலே, வாழவேண்டும் என்ற ஆசையுடனேயே நாம் இருக்கின்றோம்.

இந்த நாட்டிலே நிரந்தரமான நீடித்த சமாதானம் ஏற்பட முஸ்லிம்களாகிய நாங்களும் இறைவனிடத்திலே பிரார்த்தனைகளைச் செய்துகொண்டிருக்கின்றோம். - என்றார் அமைச்சர் ரிஷாத் பதியுதீன்.

இந்த நிகழ்வில் பிரதேச செயலாளர் செல்வி துரைச்சாமி, ஏ.எம்.முருசீன், அமைச்சின் செயலாளர் ஏ.சீ.எம்.றாசிக், இணைப்பு செயலாளர் அலிகான் ஷரீப், மௌலவி ஏ.எம்.தௌபீக், எம்.நெஸன் ஆசிரியர் வதூர் உட்படப் பலரும் உரையாற்றினர். (எ-க)

## ஜனாதிபதியின் சுயசரிதை நூலில் பல தவறுகள்

கொழும்பு, ஓக.9

பிரிட்டிஷ் எழுத்தாளரான கிரேமி வில்சன் எழுதி பிரசுரமாகியுள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் சுயசரிதை நூலில் பல தவறுகள் இருப்பது சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. எழுத்துப்பிழைகள் ஒருபுறமும், சில தகவல் தவறுகள் மறுபுறமும் இடம்பெற்று நூலின் மகத்துவத்தையும், மகிமையையும் மாசுபடுத்திவிட்டன என்று விமர்சகர்கள் பலரும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

''கொழும்பில் நடந்த இந்த நூலின் வெளியீட்டு விழாவின்போதே நான் நூலில் காணப்பட்ட சில எழுத்துப் பிழைகளையும், தகவல் தவறுகளையும் நூலாசிரியரிடம் சுட்டிக்காட்டிவிட்டேன். மிக அவசர அவசரமாக 500 நூல்கள் மட்டுமே வெளியிடப்பட்டுள்ளன. இந்தத் தவறுகளை ஏனைய பதிப்புகளில் திருத்தம் செய்துவிடுவோம்'' -என்று நூலாசிரியர் தன்னிடம் கூறியதாக அமைச்சர் மங்கள சமரவீர தெரிவிக்கிறார்.

ஜனாதிபதியின் சுயசரிதையை எழுதி பிரசுரிப்பதற்கு வேண்டிய அனுமதியையும் அங்கீகாரத்தையும் இந்த பிரிட்டிஷ் எழுத்தாளருக்கு பெற்றுக்கொடுத்தவர் அமைச்சர் மங்கள சமரவீர என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

(க)



ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு இளவாலை திருமறைக் கலாமன்றம் அண்மையில் கற்றல் உபகரணங்களை வழங்கியது. நிகழ்வில் பங்குத்தந்தை மாணவர் ஒருவருக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்குவதையும் கலந்துகொண்ட பிரமுகர்களையும் படங்களில் காணலாம்.

## 'கண்ணீர்ப் பயணங்கள்' நூல் வெளியீட்டு விழா

நல்லூர், ஓக.9

கவிஞர் ம.யாழ்.ஆன்சியின் ''கண்ணீர்ப் பயணங்கள்'' நூல் வெளியீட்டுவிழா எதிர்வரும் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நூல் அறிமுகவுரையை யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதியும் மதிப்பீட்டுரையை கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி விரிவுரையாளர் கலாநிதி செ.திருநாவுக்கரசுவும் வெளியீட்டுரையை முனைவர் எஸ்.சிவலிங்கராஜாவும் நிகழ்த்துவார்கள்.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ந.இரவிராஜ், திருமதி பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் நூலை வெளியிட்டு வைப்பார்கள். (8-111)

# நகரில் குப்பைகளை அகற்றுவதற்கு வாகனங்களை 'யுனிசெவ்' வழங்கும்

## யாழ்.அரச அதிபர் கணேஷ் தகவல்

யாழ்ப்பாணம், ஓக.9

யாழ்.நகரில் சுற்றுச் சூழல் பாதுகாப்பை மேம்படுத்தும் நோக்கில் குப்பை அகற்றும் வாகனங்கள் சிலவற்றை யுனிசெவ் நிறுவனம் வழங்கவுள்ளதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் தெரிவிக்கையில்.

யாழ்.நகரில் தற்போது குப்பைகள் பெருகி வருகின்றன. இவற்றை அகற்றுவதற்கு போதியளவு வாகனங்கள் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு யுனிசெவ் நிறுவனம் வாகனங்களை வழங்க முன்வந்துள்ளது. குறிப்பாக, யாழ்.மாநகர சபைக்கு குப்பைகளை அகற்றுவதற்கென 2 மூடிய வாகனங்களும் 6 டிராக்டர்களும் வழங்கப்படவுள்ளன. அதேபோல் நல்லூர் பிரதேச சபைக்கு ஒரு டிராக்டரை வழங்க யுனிசெவ் முன்வந்துள்ளது.

இதேவேளை-

யாழ்.போதனா வைத்தியசாலையின் தொற்றுக் கழிவுகளை அகற்றுவதற்கு மூடிய வாகனம் ஒன்றை வழங்குவதற்கும் யுனிசெவ் நிறுவனம் தீர்மானித்துள்ளது- என்றார் அரச அதிபர்.

(எ-202)

## பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்களின் பதவியுயர்வை இடைநிறுத்த நீதிமன்று பணிப்பு

கொழும்பு, ஓக.9

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஊழியர்களுக்குப் பதவி உயர்வுகள் வழங்குவதை இம்மாதம் 17 ஆம் திகதிவரை தடைசெய்யும் இடைக்கால உத்தரவு ஒன்றை மேன்முறையீட்டு நீதிமன்றம் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கியுள்ளது.

தேசிய தொழிலாளர் சங்கத்தின் அதன் பெற்றோலியக் கூட்டுத்தாபன கிளைத் தலைவர் டபிள்யூ. என்.எம்.பி. ஆரியதாச, அதன் செயலாளர் ஜி. ஏ. எஸ். அயினஞ் ஆகியோர் தாக்கல்செய்த மனு ஒன்றை விசாரணை செய்ய அனுமதி வழங்கிய பின்னரே மேன்முறையீட்டு நீதிமன்றம் மேற்படி இடைக்காலத் தடை உத்தரவைப் பிறப்பித்தது. இம் மனுவில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், அதன் தலைவர் ஜாலிய மெதகம, மின்சக்தி எரிபொருள் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த உட்பட 13 பேர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

2001ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் முதல் 2004ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரை அரசியல் பழிவாங்கல்கள் காரணமாகப் பாதிக்கப்பட்டவர்கள் என்று தெரிவித்து சிலருக்குத் தகுதியற்ற பதவி உயர்வுகளை வழங்க பெற்றோலியக் கூட்டுத்தாபன நிர்வாகம் திட்டமிட்டு வருவதாக மனுவில் கூறப்பட்டுள்ளது.

இம்மனு மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் அன்றூ சோமவன்ஸ, எல்.கே. விமலசந்திர ஆகிய நீதியரசர்கள் முன்னிலையில் வெள்ளிக்கிழமை விசாரிக்கப்பட்டது.

குறிப்பிட்ட சட்டவிரோதமான பதவி உயர்வுத் திட்டம் காரணமாக மாதாந்தம் கூட்டுத்தாபனத்திற்கு 45 லட்சம் ரூபா மேலதிக நஷ்டம் ஏற்படுவதாகவும் மனுவில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இம் மனு தொடர்பான விசாரணையின் போது மனுதாரர்கள் சார்பில் உபுல் ஜயசூரிய, ஆர். ராதாகிருஷ்ணன், சுஜீவ சேனாசிங்க ஆகிய சட்டத்தரணிகள் ஆஜராகினர்.

பிரதிவாதிகள் சார்பில் சட்டத்தரணி சஞ்சீவ ஜயவர்த்தன ஆஜரானார்.

## மானிப்பாய் இலங்கை வங்கிக்கிளையில் ஆண்டு நிறைவு நிகழ்வுகள்

வலிதென்மேற்கு, ஓக.9

இலங்கை வங்கியின் 66 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வுகள் கடந்த முதலாம் திகதி திங்கட்கிழமையன்று மானிப்பாய் இலங்கை வங்கிக்கிளையில் நடைபெற்றன.

கிளையின் முகாமையாளர் என்.ஜெயரத்தினம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வாடிக்கையாளர் சார்பில் லயன்ஸ் கழக வடக்கு பிரதி செயலாளர் எஸ்.ஞானராசா கலந்துகொண்டு வங்கிக்கிளை வாடிக்கையாளர்களுக்கு ஆற்றிவரும் சேவைகளை பாராட்டி உரைநிகழ்த்தினார்.

சிறுவர் சேமிப்புக் கணக்கில் 2 ஆயிரத்து 500 ரூபாவை வைப்பிலிட்டு எதிர்வரும் 20 ஆம் திகதிவரை கணக்கு ஆரம்பிப்பவர்களுக்கு இலங்கை வங்கியின் 66 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பாடசாலைப் பை அன்பளிப்பு செய்யப்படவுள்ளது என கிக்கிளை முகாமையாளர் தெரிவித்தார்.

(எ-


## நெஞ்சுவலியிலிருந்து நிவாரணம் பெறுங்கள்

ரியுமரோயிட் ஆர்த்திரைட்டிஸ் — மூட்டுக்களில் நோவா...? எலும்புவலி மற்றும் ஒஸ்ரியோபொரோசிஸ்

தீராத முதுகு வலியா...? — விரைவான நிவாரணம்

சொரைசிஸ் தோல் வியாதி — எமது கிருமி எதிர்ப்பு மருந்து துரித நிவாரணம் அளிக்கும்

ஒற்றை தலைவலியா...? — நீண்ட காலப்பாதிப்பினின்றும் நிவாரணம் அளிக்கும்

பெட்சோர்- Q.R வண்ணெய் — பெட்சோர், நீரிழிவுப்புண் மற்றும் எரிகாய புண்களுக்கு

புரஸ்டேட் சுரப்பிகளின் சோர்வுப்பிரச்சினைகளா? — இதற்கென சத்திர சிகிச்சையைத் தவிர்க்கும் வகையில் சிகிச்சை

குழந்தைகளின் புத்தி மந்தம் மற்றும் அல்சைமேர்ஸ் நினைவாற்றல் பாதிப்பு நோய்

கல்லீரல் பிரச்சினைகளா? — சிரோசிஸ், ஜோண்டிஸ் அசைட்டிஸ் மற்றும் கல்லீரல் வீக்கம்

நெஞ்சுவலியினால் அவதியுறும் வயோதிபர்கள் அவர்களது எதிர்காலத்தில் இவ்வாறான வருந்தத்தக்க குறைபாடுகளுக்காக கவலைப்பட வேண்டிய அனுபவம் ஏற்படாது. ஏனெனில் எங்கள் ஆயுர்வேத மருந்துகள் உங்கள் நாளங்களில் காணப்படும். அடைப்புகளை கரைத்து முறையான குருதிச் சுற்றோட்டத்தை ஏற்படுத்துவதன் மூலம் சத்திரசிகிச்சை அற்ற வாழ்க்கை ஒன்றை ஏற்படுத்துவதற்கு வழிவகுக்கும். 100 நாட்களுக்கான சிகிச்சைக்கு ரூபா 18,240/= மட்டுமே செலவாகும்.

தொலைபேசி: 0094-115517897, 5551879, 5558442
தொலைநகல்: 0094-11-5517756
மின்னஞ்சல்: fppvl@lankabellnet.com
இணையத்தளம்: www.fppvtl.org

திறந்திருக்கும் நேரம்: வேலை நாட்களில் காலை 9.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை. சனிக்கிழமை காலை 9.00 முதல் பி.ப. 2.00 மணிவரை

FAIR PHARMA (PVT) LTD
(MANUFACTURERS OF AYURVEDIC MEDICINES)
L5/E7/1C, WORLD TRADE CENTRE, COLOMBO -01, SRI LANKA
A BOI APPROVED COMPANY
ISO 9001 : 2000 QMS Certified Company

## கூட்டுறவாளர்தின போட்டிமுடிவுகள்

சுழிபுரம், ஓக.9

யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் 83 ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தினத்தினை ஒட்டி பாடசாலை மாணவர்களிடையே பேச்சு, கட்டுரைப் போட்டிகளை நடத்தியது.

சங்கானைப் பிராந்தியத்தில் நடைபெற்ற போட்டிகளின் முடிவுகள் வருமாறு:-

**கனிஷ்ட பிரிவு (பேச்சு)**

சி.சசிகலா (அராலி சரஸ்வதி வித்தியாலயம்), க.சர்மிளா (வட்டு.மத்திய கல்லூரி), க.விஷ்ணுபிரியா (யாழ்ப்பாணக்கல்லூரி)

**கட்டுரை**

உ.சோபனா (பண்ணாகம் மெய்கண்டான் ம.வி), ஜீ.மாதுரி (தொல்புரம் விக்னேஸ்வரா வித்தி), ப.பவிதா (பண்ணாகம் மெய்கண்டான் ம.வி).

**சாதாரண பிரிவு (பேச்சு)**

ச.கீரன் (வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி), உ.சிவானி (வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி), சி.சுனித்தா(பண்ணாகம் மெய்கண்டான் ம.வி).

**கட்டுரை**

ப.உமா(பண்ணாகம் மெய்கண்டான் ம.வி.), அ.யோகினி(வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி), சி.தாரணி(வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி,

இவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 13 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு யாழ்.வீரசிங்க மண்டபத்தில் நடைபெறும்.

(எ-28-204)

## சமாதான தினத்தை முன்னிட்டு சிறுவர் சித்திரக் கண்காட்சி

வலிகாமம், ஓக.9

செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி நடைபெற உள்ள சர்வதேச சமாதான தினத்தை முன்னிட்டு சிறுவர்கள் பங்குபற்றும் சித்திரக் கண்காட்சியொன்றை ஏற்பாடு செய்ய சமாதான செயற்பாட்டை கூட்டிணைப்பதற்கான செயலகம் திட்டமிட்டுள்ளது.

10வயது தொடக்கம் 15 வயது வரையான பாடசாலைச் சிறுவர்கள் இந்த சித்திரக் கண்காட்சியில் பங்குபற்ற முடியும்.

தெரிவு செய்யப்படும் சித்திரங்கள் செப்ரெப்பர் மாதம் 21 ஆம் திகதி தொடக்கம் 23ஆம் திகதி வரை கொழும்பு லயன்ஸ் வென்ட் கலை அரங்கில் நடைபெறும் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்படும்.

சித்திரப் போட்டியில் தெரிந்தெடுக்கப்படும் முதல் ஆறு போட்டியாளர்களுக்கு சான்றிதழ்களும் பரிசு ஆவணங்களும் வழங்கப்படும்.

இதில் பங்குபற்றவிரும்பும் சிறுவர்கள் தமது ஆக்கங்களை எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் பாடசாலை அதிபர்களின் உறுதிப்படுத்தலுடன் சமாதானத்தைக் கூட்டிணைப்பதற்கான செயலகத்துக்கு அனுப்பிவைக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-152)

## விபத்துகளில் காயம்

தென்மராட்சி.ஓக.9

வீதியைக் கடந்த வயோதிபர் வேகமாக வந்த வாகனத்தினால் மோதப்பட்டுக் காயமடைந்தார்.

இச்சம்பவம் கடந்த 4 ஆம் திகதி நுணாவிலில் இடம்பெற்றது.

நுணாவில் மத்தியைச் சேர்ந்த சிங்கராசா நாதன் (வயது-67) என்பவரே காயமடைந்தவராவார்.

சாவகச்சேரி துர்க்கை அம்மன் கோயில் வீதியில் மிதிவண்டி - மோட்டார் சைக்கிள் விபத்தில் மட்டுவிலைச் சேர்ந்த ஈ.கனகரத்தினம் (வயது-53) என்பவரும்,

நுணாவில் ஏ-9 வீதியில் இரு மோட்டார் சைக்கிள்கள் மோதிக் கொண்டதில் எஸ்.சிவகுமார் (வயது-42) என்பவரும்,

சாவகச்சேரி கனகன்புளியடிச் சந்தியில் இடம்பெற்ற மிதிவண்டி - மோட்டார் சைக்கிள் விபத்தில் சாவகச்சேரி கந்தையா வீதியைச் சேர்ந்த வே.சதாசிவம் (வயது -30) என்பவரும் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (த-117)

## அபிவிருத்தித் திட்டம் தொடர்பான கூட்டம்

தென்மராட்சி,ஓக.9

நிவாரணம், புனர்வாழ்வு, நல்லிணக்க அமைச்சினால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித்திட்டம் தொடர்பான கூட்டம் எதிர்வரும் 11 ஆம் திகதி காலை 10மணிக்கு யாழ். செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.அரச அதிபர் க.கணேஸ் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்திற்கு அந்தந்தப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்ற அறிக்கையுடன் வருகை தருமாறு சம்பந்தப்பட்டவர்களை திட்டப் பணிப்பாளர் க.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (எ-117)

## பதவியை உறுதிப்படுத்தும் படிவங்களை கையளிக்க அறிவுறுத்து

தீவகக் கல்விவலயத்தில் ஆசிரிய சேவையில் மூன்று வருடத்தைப் பூர்த்தி செய்தவர்களை ஆசிரியர் பதவியை உறுதிப்படுத்தும் முகமாக சேவைக்காலப் படிவங்களை வலயத்தில் கையளிக்குமாறு தீவகவலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் வ.இராதாகிருஷ்ணன் [illegible]டுள்ளார். (எ-203)



உ

சக்தி துணை

ஊர்காவற்றுறை நாரந்தனை வடக்கு
தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய

## பார்த்திப வருட மஹோற்சவம்-2005

கொடியேற்றம் 09.08.2005 செவ். பகல் 12.00 மணி
தேர்த்திருவிழா 18.08.2005 வியா.காலை 9.30 மணி
சமுத்திர தீர்த்தம் 19.08.2005 வெள்.காலை 9.30 மணி

மஹோற்சவ காலங்களில்
**பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்தசர்மா** அவர்களின்
'மஹாபாரதம்' தொடர் சொற்பொழிவு இடம்பெறும்.

பிரதம குரு

தேவகான பூஷணம் பிரம்மஸ்ரீ
**தாணு வாசுதேவ சிவாச்சாரியார்**
(சட்டநாதர் சிவன் கோயில், இணுவில் சிவன்கோயில், சிறுப்பிட்டிசிவன்கோயில், மயிலணி அண்ணமாமகேஸ்வர சிவன்கோயில்).

**அனைவரும் வருக அன்னை அருள்பெறுக.**

நாரந்தனை வடக்கு,
ஊர்காவற்றுறை.

**- சைவமகா சபையினர்.**

(38622)(21-11-18)

## சங்கானை மக்கள் வங்கியின் நீடித்த கருமபீடம் பண்டத்தரிப்பில்

சங்கானை மக்கள் வங்கிக்கிளையின் நீடித்த கருமபீடம் பண்டத்தரிப்பில் இயங்க ஆரம்பித்துள்ளது. சங்கானை மக்கள் வங்கி முகாமையாளர் மற்றும் வங்கி உயர் அதிகாரிகள் மங்கள விளக்கேற்றியும், சிவஸ்ரீ.சு.சுந்தரராசாக் குருக்கள் ஆசியுரை வழங்கியும் வங்கிக் கருமங்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. வங்கி வாடிக்கையாளர்கள் பலரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (எ-28)

## முதலாம் ஆண்டு நினைவில்



அமரர்

**ஆறுமுகம் விசுவலிங்கம்**

(விசுவப்பா)

*திதி: 09-08-2005*

மலர்வு 12-10-1920 — உதிர்வு 21-07-2004

ஆண்டொன்று அகன்றதையா!
ஆறாத மனப்புண் எம் இதயத்தில்
மாறாத சோகம் எமை வாட்டுதையா!
பேறாக நாம் பெற்ற செல்வங்களில்
நலம் பேண நமக்கு வழிகாட்டையா.

பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

*சண்டில் வீதி, கரவெட்டி மேற்கு ,
கரவெட்டி.*


S-Lon என்றால் PVC குழாய்கள்
ஆனால் எல்லா PVC குழாய்களும் S-Lon அல்ல.

**தரமுயர்ந்த எஸ்-லோன் குழாய்களையே கேட்டு வாங்குங்கள்**




**எஸ்-லோன் இலச்சினை பொறிக்கப்பட்டுள்ளதை நிச்சயப்படுத்த தவறாதீர்கள்**

பரம்பரை பரம்பரையாக மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக விளங்கும் எஸ்-லோன் பி.வி.சி. குழாய்களும் அவற்றிற்கான பொருத்துக்கள். பீலிகள் முதலிய யாவும் சகல அளவுகளிலும் கிடைக்கின்றன. எனவே, நீங்கள் தரக்குறைவான பொருட்களை வாங்கி ஏமாற வேண்டிய அவசியமே கிடையாது.

உங்களுக்கு நீரக்குழாய்கள், பொருத்துக்கள். பீலிகள் தேவைப்படும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் எஸ்-லோனை நாடுங்கள்.

S-Lon
என்றும் முன்னணியில்

S-Lon இல்லம்

எஸ்-லோன் லங்கா (பிறைவேட்) லிமிட்டட், 7, பிறேபுரூக் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 4792630-4 ∴பெக்ஸ்: 5352741

Rediffusion DYR

# கண்ணீர் அஞ்சலி



## சின்னையா சிவஞானம் J.P.

(முன்னாள் இயக்குநர் சபை உறுப்பினர், சுன்னாகம் பல நோ.கூ.சங்கம்)

முத்துக்கிருஷ்ணர் வீதி, சுன்னாகத்தைச் சேர்ந்த சின்னையா சிவஞானம் அவர்கள் 08.08.2005 காலமானார். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

சுன்னாகம் பல நோ.கூ.சங்கம், சுன்னாகம். (38657)(29-17-12)

தலைவர், இயக்குநர்கள், பணியாளர்கள்.

# கண்ணீர் அஞ்சலி



இடைக்காடு, அச்சுவேலியைச் சேர்ந்தவரும் மாணிக்க இடைக்காடர் சனசமூக நிலைய கௌரவ நூலகரும் எமது அன்புக்கும் மதிப்புக்கும் உரியவருமான

## தருமராசா சிவானந்தம்

(ஆங்கில ஆசிரியர்)


அவர்கள் 08.08.2005 இல் அகாலமரணமாகிவிட்டார். அவரது மறைவு பேரிழப்பாகும். அவரது பிரிவினால் துயரத்தில் மூழ்கியிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இடைக்காடு வாழ்மக்கள், ஆசிரியர்கள், மாணவர்கள்.

(38652)(29-17-12)

# 7 ஆவது வருட நினைவுகளில் ...

பிறப்பு 22 - 08 - 1962



இறப்பு 09 - 08 - 1998

அமரர்

## வின்சன் யோசேப் அலெக்ஸ்

(விஜயன்)

எமைவிட்டுப் பிரிந்து இன்று ஆண்டுகள் ஏழு ஆனாலும்
ஆறவில்லை எம் துயரம் - என்றும்
உங்கள் நினைவுகளுடனேயே வாழ்கின்றோம்.

குருநகரைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸில் வசித்தவருமான வின்சன் யோசேப் அலெக்ஸ் (விஜயன்) அவர்களின் 7 ஆவது வருட நிறைவில் அவர்களை நினைவு கூருகின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்: மனைவி, பிள்ளைகள்.

வாடற் விஜயன்
18/6, மத்திய கிழக்கு வீதி,
குருநகர், யாழ்ப்பாணம். (38654(29-17-12)

# மரண அறிவித்தல்கள்

## தருமராசா சிவானந்தம்



இடைக்காட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தருமராசா சிவானந்தம் (ஆங்கில ஆசிரியர்) அவர்கள் 08.08.2005 திங்கட்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் தருமராசா - ஜீவபாஸ்வரி தம்பதியரின் மகனும் வஜிதா (ஜேர்மனி), சிவரூபன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் பரமானந்தம் (ஜேர்மனி), கவிதா (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் சஞ்சயினின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஞானியார் வளவு, இடைக்காடு.* (38658)(29-17-12)

தகவல்: குடும்பத்தினர்.

## திருமதி இரத்தினம் வைத்திலிங்கம்



மாதகலைப் பிறப்பிடமாகவும் மீசாலை கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினம் வைத்திலிங்கம் அவர்கள் 07.08.2005 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கத்தின் அன்பு மனைவியும் அழகம்மா, இராசேஸ்வரி, தவராசா (கனடா), கமலேஸ்வரி, புவனேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயும் அமரர் கந்தசாமி (உரிமையாளர், கண்ணன் ஸ்ரோர்ஸ்) மற்றும் கணபதிப்பிள்ளை, சற்குணலீலா (கனடா), அமரர் கந்தசாமி, செல்வராசா (வவா கடை) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (11.08.2005) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வேம்பிராய் இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'முருகவாசா' மீசாலை கிழக்கு, மீசாலை.* (சி-44485)(29-17-12)

தகவல்: குடும்பத்தினர்.

# விவேகானந்தா சபை பரீட்சை முடிவு வெளியிடப்பட்டது

யாழ்ப்பாணம்,ஓக.9

கொழும்பு விவேகானந்தா சபை கடந்த வருடம் மாணவர்களிடையே நடத்திய அகில இலங்கை சைவசமய பாடப் பரீட்சைப் பெறுபேறுகளை அனுப்பி வைத்துள்ளது என சபையின் கௌரவப் பொதுச் செயலாளர் க.இராஜபுரீஸ்வரன் தெரிவித்தார்.

இந்தப் பரீட்சைக்கு பாடசாலைகள், சைவ சமய அமைப்புகள், சங்கங்கள் என்பவற்றிலிருந்து மாணவர்கள் தோற்றி இருந்தனர்.

இந்தப் பரீட்சையின் பெறுபேறுகள் உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கொழும்பு விவேகானந்தா சபை தரம் 3-11 வரையான வகுப்பு மாணவர்களின் சைவசமய அறிவை மேம்படுத்தவும் அறநெறிக் கருத்துக்களைப் போதிக்கவும் வருடந்தோறும் திருக்குறள், சைவவினாவிடை அடங்கலாக சைவசமயப் பரீட்சைகளை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ-323-204)

# கூடைப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம்,ஓக.9

தமிழீழ விளையாட்டுத் துறை, தமிழீழ மாணவர் அமைப்பு என்பன இணைந்து யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்தின் ஊடாக நடத்தும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது எனப் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஒ)

# குப்பி விளக்கை பூனை தட்டியதில் பெண்ணுக்குக் காயம்!

தென்மராட்சி,ஓக.9

மேசை மீது வைக்கப்பட்டிருந்த குப்பி விளக்கைப் பூனை தட்டி வீழ்த்தியதால் வயோதிபப் பெண் எரிகாயங்களுக்கு இலக்கானார்.

மந்துவில் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இச்சம்பவம் இடம்பெற்றது.

எரிகாயங்களுக்கு இலக்கான இதே இடத்தைச் சேர்ந்த செ.அன்னம்மா (வயது 69) என்பவர் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஒ-117)

## தவறிவிட்டது

அச்சுவேலியைச் சேர்ந்த திருஞானசம்பந்தர் ஜெயச்சந்திரன் என்பவருடைய தேசிய அ. அட்டை (இல.692742257v), விசேட அ.அட்டை, குருமார் அ.அட்டை, ஒரு தொகைப் பணம், உருத்திராட்சமாலை, மோட்டார் சைக்கிள் லைசென்ஸ் முதலிய ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் ஒன்று 07.08.2005 ஞாயிற்றுக்கிழமை அச்சுவேலிக்கும் வல்வெட்டித்துறைக்கும் இடையில் தவறி வீழ்ந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் ***தீர்த்தாங்குளம் பிள்ளையார் கோயிலடி, பத்தமேனி, அச்சுவேலி*** என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும் சன்மானம் வழங்கப்படும். (38651)


**நாகம்ஸ் சினிமா சுன்னாகம்**



இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின அதிரடி வெளியீடாக இளம் புயல் ஜெயம் ரவி, ரேணுகா மேனன், வடிவேல் மற்றும் பலர் நடித்த

**தாஸ்** (ரீகல்)

காட்சிகள்: 11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே).

**மனோகரா யாழ்ப்பாணம்**

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
மாதவன், சதா, கோவை சரளா மற்றும் பலர் நடித்த

**பிரியசகி**

காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30.

**ராஜா யாழ்ப்பாணம்**

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு காதல் புகழ் பரத், ரேணுகா மேனன்

**பெப்ரவரி 14**

காட்சி நேரம்: 10.30,2.30, 6.30, 9.30 (பு.நே.)

**நாதன்ஸ் சினிமா** ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம்.



இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடாக அர்ஜுன், சினேகா, கிரண், வடிவேல் நடித்த

**சின்னா**

கா.நே.: 10.30,2.30, 6.30,9.30. (பு.நே.)


# கவிதை நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,ஓக.9

பாவலர் தெ.அ.துரையப்பாபிள்ளையின் 'சிந்தனைச் சோலை' என்ற கவிதை நூல் வெளியீட்டு விழா தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

மகாஜனக் கல்லூரி அதிபர் பொ.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில், பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலயப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கலந்துகொள்கிறார்.

நிகழ்வில் நூல் வெளியீட்டுரையை வலிகாமம் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரனும் நூல் ஆய்வுரைகளை யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி எஸ்.சிவலிங்கராசா, கவிஞர் சோ.பத்மநாதன் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர். (9)

# போராளி வீரச்சாவு

கிளிநொச்சி,ஓக.9

கடந்த மாதம் 31 ஆம் திகதி தவறுதலான வெடிவிபத்தில் வீரவேங்கை பவளக் குறிஞ்சி (கருணாநிதி நவேந்தினி 3ஆம் வட்டாரம், குடியிருப்பு முனை, கண்ணாமலை, மண்டூர் மட்டக்களப்பு) என்ற போராளி வீரச்சாவடைந்தார் என்றும் - கடந்த 7 ஆம் திகதி சுகவீனம் காரணமாக நாட்டுப்பற்றாளர் பரிமளராசா இராசநாயகி (கேவில் முள்ளியான், வடமராட்சி கிழக்கு) என்பவர் சாவடைந்தார் என்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். (ஒ)

# கண்ணீர் அஞ்சலி



எமது வித்தியாலய அதிபர் திருவாளர் ச.வாமதேவன் அவர்களின் அன்பு மகள்

செல்வி

## கீர்த்தனா வாமதேவன்

அவர்களின் மறைவு குறித்து அன்னாருக்கு இதயபூர்வமான அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்வதுடன், அவரது ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம். (38656)(29-17-12-14-15)

- பழைய மாணவர் சங்கம்.

# மரண அறிவித்தல்கள்

## சின்னையா சிவஞானம்

(சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மானிப்பாய்த் தொகுதி அமைப்பாளரும் சமாதான நீதிவானும் வலம்புரி பத்திரிகை கொழும்புச் செய்தியாளரும்)

முத்துக்கிருஷ்ணர் வீதி, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட சின்னையா சிவஞானம் அவர்கள் நேற்று(08.08.2005) திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - சிவக்கொழுந்து தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற தர்மாவதியின் அன்புக் கணவரும் சுவிந்தா (கனடா), இராவணன் (ஊழியர்- பெற்றோலியக் கூட்டுத்தாபனம், யாழ்), வாசுகி (சுன்னாகம்), காலஞ்சென்ற நக்கீரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் இரத்தினபூபதி (கொழும்பு), நடராசா (சுன்னாகம்), காலஞ்சென்ற கனகரட்ணம் மற்றும் இராஜலிங்கம் (கனடா), குணரட்ணம் (ஜேர்மனி), சாந்தினி (சுன்னாகம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.08.2005) புதன்கிழமை சுன்னாகத்தில் நடைபெற்று, பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் கொத்தியாலடி இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*முத்துக்கிருஷ்ணர் வீதி, சுன்னாகம்.* (38655)(29-17-12)

தகவல்: நடராசா (சகோதரன்).

## ஜெயகாந்தன் மரியதாசன்



ஜெயகாந்தன் மரியதாசன் அவர்கள் கடந்த 07.08.2005 ஞாயிற்றுக்கிழமை லண்டனில் காலமாகிவிட்டார்.

அன்னார் கார்மலா அவர்களின் அன்புக் கணவரும் ஜெகானந்த், ஜெகனியா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மாதகல்.* (38653)(29-17-12)
T.P.: 0777 427201

தகவல்: ச.எமில் (மைத்துனர்).

## பொன்னுத்துரை விஜயகுமார்



யாழ்ப்பாணம், நாவலர் வீதியைப் பிறப்பிடமாகவும் ஹொலண்டை வசிப்பிடமாகவும் கொண்ட பேபி என்று அன்பாக அழைக்கப்படும் பொன்னுத்துரை விஜயகுமார் அவர்கள் வியாழக்கிழமை 04.08.2005 ஹொலண்டில் அகாலமரணமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை- நேசம்மா தம்பதியரின் செல்வப் புதல்வனும் காலஞ்சென்ற உதயகுமாரின் (றஞ்சன்) அருமைத் தம்பியும் ரோகினியின் (ஹொலண்ட்) பாசமிகு கணவரும் சிந்து, சிந்துஜன் ஆகியோரின் அருமை அப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (09.08.2005) செவ்வாய்க்கிழமை ஹொலண்டில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.408, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.*
T.P.: 222 3462 (38646)(29-17-12)

தகவல்: இ. இராஜரட்ணம் (மச்சான்).

# அரச சமாதான செயலகம் அடுத்த வருடமும் இயங்கும்

அரச சமாதான செயலகத்தை அடுத்த வருடமும் இயங்கச் செய்வது என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தீர்மானித்துள்ளார் என்றும் -

அதற்கான அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது என்றும் - அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் கீழ் அரச சமாதான செயலகச் செயற்பாடுகள் அடுத்த வருடமும் ஜனவரி மாதம் முதல் டிசெம்பர் மாதம் வரை செயற்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. சமாதான நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் அரசின் அர்ப்பணிப்புத் தன்மை இவ்வாறான முடிவுகளில் இருந்து தெளிவாகவுள்ளது.

இதேவேளை, வடக்கு - கிழக்கு புனர்நிர்மாணப் பணிகளை விரைவுபடுத்துவதில் அரசின் கவனம் திரும்பியுள்ளது. அதன் அடிப்படையில் அரச மற்றும் அரச சார்பற்ற மட்டத்தில் செய்யப்படுகின்ற புனர்நிர்மாணப் பணிகளை விரைவுபடுத்தவும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது - என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார். (எ-202)

## புலிகள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மும் பரிமாறப்பட்டன.

எனினும், இந்த விடயத்தில் இணக்கப்பாடொன்று எட்டப்பட்டதாக இதுவரை எந்த உத்தியோகபூர்வ அறிவிப்பும் வெளியாகவில்லை.

அதற்கிடையில், புலிகளுக்குப் பாதுகாப்பு வழங்கும் படையினர் புலிகள் பயணிக்கும் வாகனங்களிலும் இருக்கவேண்டும் என்ற உத்தரவை அரசு பிறப்பித்துள்ளது.

## ஜனாதிபதித் தேர்தல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த வட்டாரங்கள் மேலும் கூறின.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பொன்றை எதிர்வரும் 22ஆம் திகதிக்குப் பின்னர் வெளியிடுவதற்கான ஏற்பாடுகளைத் தேர்தல் ஆணையாளர் மேற்கொண்டிருந்தார். உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியாகி 16 நாள்களின் பின் வேட்பு மனுக்களை ஏற்பதற்கும் வேட்பு மனு ஏற்றுக்கொள்ளப்பட்டு 4 முதல் 6 வாரங்களில் தேர்தலை நடத்துவதற்கும் தேர்தல் ஆணையாளர் தீர்மானித்திருந்தார் எனத் தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் கூறின. (க)

# பாடசாலை கணனிக் கூடங்களின் செயற்பாட்டு விதிகள் அறிவிப்பு

அச்சுவேலி,ஓக.9

பாடசாலைகளில் நிறுவப்பட்டு செயற்பட்டுக் கொண்டிருக்கும் கணனி விஞ்ஞான கூடங்களின் செயற்பாடுகளை நடைமுறைப் படுத்தல் தொடர்பான விதிமுறைகளை கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

கற்றல் கற்பித்தல் செயற்பாட்டிற்கு வலைத் தொகுதியைப் பயன்படுத்தல், சர்வதேச தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளல், தகவல் முகாமைத்துவத்திற்கு மாணவதிறனை விருத்தி செய்தல், வருங்காலத்தை எதிர்கொள் வதற்குத் தேவையான தொழில்நுட்ப அறிவை மாணவர்களுக்கு வழங்கல் ஆகிய நோக்கங்களை நிறைவு செய்யும் விதத்தில் கணனி விஞ்ஞான கூடங்கள் தொழிற்படவேண்டும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

பாடசாலை நேரத்தில் மாணவருக்கு கணனி அறிவை வழங்க எதுவித கட்டணமும் அறவிடப்படக்கூடாது என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பாடசாலை நேரத்தின் பின்பும் அரச விடுமுறைத்தினங்கள் மற்றும் பாடசாலை விடுமுறைக்காலத்திலும் கணனி விஞ்ஞான கூடத்தை தேவை ஏற்படின் வெளியாரும் பயன்படுத்தலாம்.

கணனி விஞ்ஞான கூடத்தின் பரிபாலனத்திற்கான முகாமைத்துவக்குழு வலயக் கல்வி அலுவலக பிரதிக்கல்விப்பணிப்பாளர், கணனி ஆசிரியர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழையமாணவர் சங்கம், பாடசாலை ஆசிரியர் பிரதி நிதி ஆகியோரை உள்ளடக்கி பாடசாலை அதிபரைத் தலைவராகக் கொண்டு செயற்படவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

## இராணுவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

3 சிப்பாய்கள் இரவுச் சாப்பாடு எடுத்துச் சென்றனர்.

அப்போது இனம் தெரியாத சிலர் அவர்களை வழிமறித்துக் கூறிய ஆயுதங்களால் தாக்கினர். இதில் படுகாயமடைந்த இரு சிப்பாய்கள் ஹெலிகொப்டர் மூலம் பலாலி இராணுவ மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப் பட்டனர். பின்னர் அவர்கள் கொழும்புக்கு மேலதிகச் சிகிச்சைக்காகக் கொண்டு செல்லப் பட்டனர்.

இத்தாக்குதலின் போது சிப்பாய்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

தாக்கியவர்களில் ஒருவர் இதில் காயமடைந்தார். இத்தகவல்களைக் கொடிகாமம் பொலீஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பாகக் கொடிகாமம் பொலீஸார் சாவகச்சேரி நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பித்தனர்.

## பொலீஸ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர் அவரது சடலம் காயங்களுடன் மீட்கப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை நடத்துவதற்காகப் புலனாய்வுத்துறையைச் சேர்ந்த 12பேர் அடங்கிய குழு கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்துள்ளது.

இக்குழுவினர் பொலீஸ் அதிகாரியுடன் சென்ற அவரது மெய்ப்பாதுகாவலர்களிடம் விசாரணையை ஆரம்பித்துள்ளனர் என்று யாழ். பொலீஸ் நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-7)

# தலைநகரில் தமிழர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் கொழும்பு, கொம்பனித்தெரு ஊடாகப் பிரதமரின் இல்லமான அலரி மாளிகையை மாலை 5.30 மணி யளவில் சென்றடைந்தனர்.

பிரதியமைச்சர் மேர்வினைப் பதவிநீக்கம் செய்யக்கோரி அலரிமாளிகையில் வைத்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களால் மகஜரொன்று கையளிக்கப்பட்டது. பிரதமர் நேரில் வந்து அந்த மகஜரைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

பிரதியமைச்சர் மேர்வின் சில்வாவை உடனடியாகப் பதவி நீக்கவேண்டும்; அவர் இந்திய வசம்சாவளி மக்களை இழிவுபடுத்தியமைக்காக அரசு அவர் மீது உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என அந்த மகஜரில் கோரப்பட்டிருந்தது.

இந்தப் போராட்டத்துக்கு ஆதரவாக கொழும்பு, புறக்கோட்டையிலுள்ள அனைத்துத் தமிழ் வர்த்தக நிலையங்களும் நேற்றுப் பகலுக்குப் பின்னர் மூடப்பட்டிருந்தன.

மேலமாகாண மக்கள் முன்னணி ஆதரவாளர்கள் புறக்கோட்டை பாங்சால் வீதியிலிருந்து ஊர்வலமாகக் கோட்டை ரயில் நிலையத்தை வந்தடைந்தனர். மலையக மக்கள் முன்னணி ஆதரவாளர்களும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆதரவாளர்களும் , ஏனைய தமிழ், முஸ்லிம் கட்சிகளின் ஆதரவாளர்களும் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக ஆயிரக்கணக்கில் குழுமியிருந்தனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக பஷீர் சேகுதாவுத் எம்.பி., முன்னாள் எம்.பி. மசூர் மௌலானா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களான ரவிராஜ், ஈழவேந்தன், கிஷோர், பத்மநாதன், பத்மினி சிதம்பரநாதன், க.தங்கேஸ்வரி, செல்வம் அடைக்கலநாதன், ஜோசப் பரராஜசிங்கம் அரியநேத்திரன், ஜெயானந்தமூர்த்தி, கஜேந்திரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி போன்றோர் கலந்துகொண்டனர்.

நவசமசமாஜ கட்சியின் சார்பாக வாசுதேவ நாணயக்கார கலந்துகொண்டார்.

இ.தொ.கா. சார்பாக அதன் தலைவர் ஆறுமுகன் தொண்டமான், அதன் தேசிய அமைப்பாளர் ஆர்.யோகராஜன், பிரதியமைச்சர் எஸ்.செல்லச்சாமி, புத்திரசிகாமணி உட்பட அனைத்து எம்.பிக்களுடன் பெரும் எண்ணிக்கையான உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ.சந்திரசேகரன், பெ.இராதாகிருஷ்ணன், மாகாணசபை உறுப்பினர்களான எஸ். அருள்சாமி, திகாம்பரம் மற்றும் அக்கட்சியின் செயலாளர் மு.சிவலிங்கம் உட்படக் கட்சியின் பிரமுகர்கள் பலரும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பாக நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரனும் அவரது ஆதரவாளர்களும் கலந்துகொண்டனர்.

அலரிமாளிகைக்குச் சென்ற பேரணியினரை வரவேற்ற பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அவர்கள் பருகுவதற்குக் குளிரூட்டப்பட்ட பால் பைக்கற்றுக்களை வழங்கினார்.

மகஜரைக் கையளித்த தமிழ் எம்.பிக்களிடம் உரிய நடவடிக்கையைத் தாம் எடுப்பார் எனப் பிரதமர் உறுதியளித்தார்.

புறக்கோட்டை ரயில் நிலையத்தின்முன் நடைபெற்ற ஆர்ப்பாட்டப் பேரணியில் ம.ம. முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன், மேல் மாகாண மக்கள் முன்னணித் தலைவர் மனோகணேசன், நவசமசமாஜக்கட்சித் தலைவர் வாசுதேவ நாணயக்கார, ஸ்ரீ.ல.மு. காங்கிரஸ் எம்.பி.பஷீர் சேகுதாவுத், மசூத் மௌலானா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களான ரவிராஜ், ஜோசப் பரராஜசிங்கம் ஆகியோர் உட்படப் பலரும் பேசினர்.

ஜனாதிபதிச் செயலகத்தின் ஊடாகச் சென்று, ஜனாதிபதி செயலகத்தில் ஒரு மகஜரைக் கையளிக்க ஆர்ப்பாட்டக்காரர்கள் திட்டமிடப் பட்டிருந்தபோதும் அவ்வழி மூடப்பட்டிருந்ததால் கொம்பெனித்தெரு வழியாகப் பேரணி நேரில் அலரி மாளிகையைச் சென்றடைந்தது. (க)

## கொக்குவிலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மகளிர் கல்லூரியில் ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பு மாணவியுமான வாமதேவன் கீர்த்தனா (வயது-17) என்பவரே இதில் உயிரிழந்தார்.

இவர் பிரத்தியேக வகுப்பிற்குச் சென்றுவிட்டு 'மொபேட்' மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிய வேளையிலேயே இந்த அனர்த்தம் நேர்ந்தது.

இந்த விபத்தில் சம்பந்தப்பட்ட ஹன்ரர் வாகனம் மணல் ஏற்றிவந்ததாகவும் -

விபத்தின் பின்னர் தலைமறைவான அதன் சாரதி பின்னர் பொலீஸாரிடம் சரணடைந்தார் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

கோப்பாய்ப் பொலீஸார் விபத்துக் குறித்து விசாரணைகளை மேற்கொண்டனர். யாழ். மாவட்ட நீதிபதி ஆர்.ரி. விக்னராஜா சம்பவ இடத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டார். பின்னர் பிரேத பரிசோதனைக்காக மாணவியின் சடலத்தை யாழ். போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்குமாறு அவர் உத்தரவிட்டார். வைத்தியசாலையில் ஒப்படைக்கப் பட்ட சடலம் மரண விசாரணை, பிரேத பரிசோதனை ஆகியவற்றின் பின்னர் உறவினரிடம் கையளிக்கப் பட்டது. (ஒ-7-15-76)

## கந்தளாயில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யேற்றுமாறும் -

அவர்கள் கோஷமெழுப்பினர்.

இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தையொட்டி அப்பகுதி எங்கும் பொலீஸாரும் படையினரும் குவிக்கப்பட்டு கடமையில் ஈடுபடுத்தப் பட்டிருந்தனர்.

நேற்றுமுன்தினம்கந்தளாயில்உள்ளஜே.வி.பி அலுவலகத்தில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த விஜேசேக இருந்த சமயம் பார்த்து கைக்குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அதில் பொலீஸ் சார்ஜண்ட் ஒருவர் காயமுற்றார்.

இந்தக்குண்டுத்தாக்குதல் தொடர்பாக மூன் தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்பட் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தன அவர்களை நேற்று மாலை நீதிமன்றில் ஆஜர் படுத்த இருந்தனர் என கந்தளாய் பொ ஸார் தெரிவித்தனர்.

திருகோணமலை மாவட்ட எம்.பி. ஜயந் விஜேயசேகரவும் அவரது ஆதரவாளர்கள் கந்தளாயில் கடைகளை மூடி ஹர்த்தா அனுஷ்டிக்குமாறு கோரியிருந்தனர். இதனை யடுத்து நேற்று கந்தளாயில் கடைகள் அனை தும் இழுத்து மூடப்பட்டிருந்தன. ஆங்காங் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்த என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, திருகோணமலை நகரி ஜே.வி.பியினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடலா என்ற எதிர்பார்ப்பு இருந்ததால் மணிக்கூட்டு கோபுரச் சந்திப் பகுதியில் பொலீஸார் நிறு தப்பட்டு, பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிரு தது. கலகம் அடக்கும் பொலீஸாரும் அங் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தனர் எனினும் ஆர்பாட்டங்களோ ஊர்வல களோ அங்கு இடம்பெறவில்லை. (க)

## தமிழ்த்தேசியக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தலைமை அலுவலகத்தில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுழற்சி முறையில் எப்போதும் இருந்துகொண்டே இருப்பர் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார். பொதுமக்களுடனான சந்திப்புகளின் பொருட்டு இந்த ஏற்பாடு செய்யப்படுவதாக அவர் தெரிவித்தார். (க)


முதலாம் ஆண்டு நினைவாக...

மலர்வு 26 - 04 - 1954



உதிர்வு 20 - 08 - 2004

ஏழாலை தெற்கு, மயிலங்காட்டைச் சேர்ந்த

அமரர்

பூதர் புவனேஸ்வரன் (அப்பா)

(லொறி உரிமையாளர்)

அப்பா என்ற பெயருடன்
ஊரில் உதிர்ந்தாய் - நீ
எங்களுக்கே அப்பாவாக
வந்தாய் - நீ
காலனவன் உன்னைக் கண்டு
கொண்டு போனான் - உன்னை
ஓராண்டு ஓடி மறைந்தாலும் உங்கள் நினைவுகள்
மாறாது எம் நெஞ்சில் நிறைந்தே இருக்கின்றன.

(38659)

ஏழாலை தெற்கு,
மயிலங்காடு. T.P.: 0776090006

மனைவி, பிள்ளைகள், மருமகள்,
பேரப்பிள்ளை.



N.C.A. K.K.S. ROAD,Inuvil

A/L 2007-பிரிவு-II
கலை, வர்த்தகம்.
ஆரம்பம்:- 10.08.2005
புதன்-4.00 மணி.

ACC: N.சதீஸ்
B.ST: S.யசோ
ECO:E.G.வரன்
H.C:S:ஜெயக்குமார்
P.S: பொன்சந்துரு

LOG:P.கமல்
Tam:N.சத்தியவேந்தன்
Geo:S.பாபு
Drama:S.R.ரமேஸ்
Eng:T.ஜேந்திரன்

A/L-2007,2006 பிரிவு-Iவழமையான நேர அட்டவணைப்படி நடைபெறுகின்றன. நிர்வாகி
(38633) திரு. N.சதீஸ்



கணக்கீடு

திரு.பாலவாசன்

சொத்து
விற்பனை
செவ், வியா
5-6

ஆரம்பம்:
09.08.2005
(38639) செவ்:5 P.

நிரு
கோண்டாவி



324, Palaly Road, Jaffna.

BIT



விஞ்ஞானமாணி-தகவல் தொழில்நுட்பம்
1st Semester
New Batches Commence on
Weekend: 14th August at 09.00 a.m.
Weekday: 10th August at 04.45 p.m.
தெரிவுப்பரீட்சை முடிவுகளை
எமது நிறுவனத்தில் பார்வையிடலாம்
MCS 324, பலாலி வீதி,
(ஆலடிச் சந்தியருகே), யாழ்ப்பாணம்.
Supported by UNDP/JRRP


## மரண அறிவித்தல்

**செல்வி வாமதேவன் கீர்த்தனா**

*(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி A/L-2007 கணிதப் பிரிவு மாணவி)*



கொக்குவிலைச் சேர்ந்த செல்வி வாமதேவன் கீர்த்தனா அவர்கள் நேற்று (08.08.2005) திங்கட்கிழமை அகாலமரணமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சண் வாமதேவன் (தந்தை)
அதிபர், கோண்டாவில்
இராமகிருஷ்ண மகாவித்தியாலயம்.

இல.109, பொற்பதி வீதி,
கொக்குவில். (சி-44488)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.08.200
இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# கல்விச் சுடர்

**Examination For Grade Five Students For Selection To School And For The Award of Bursaries - 2005**

**தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் இல. 20**

**வினாத்தாள் - 1**

**நேரம் : 45 நிமிடங்கள்**

**✱ கீழே தரப்பட்டுள்ள கவிதையை வாசித்து கேட்கப்பட்டுள்ள வினாக் களுக்குரிய விடையை தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிந்து அதன் கீழ்க் கோடிடுங்கள்.**

**ஓடும் எறும்பே நில் நில்**
**ஓடி விளையாடச் சொல் சொல்.**

**ஊரும் எறும்பே நில் நில்**
**உழைத்து வாழச் சொல் சொல்.**

**சின்ன எறும்பே நில் நில்**
**சேர்ந்து படிக்கச் சொல் சொல்.**

**கடிக்கும் எறும்பே நில் நில்**
**சுறுசுறுப்பை நமக்குச் சொல் சொல்.**

1. இக்கவிதை மூலம் கூறப்படுவது,
   1. மனிதனின் தொழிற்பாடுகள் பற்றியதாகும்.
   2. எறும்பின் தொழிற்பாடுகள் பற்றியதாகும்.
   3. எறும்பினால் மனிதன் கற்கும் படிப்பினையாகும்.

2. இக் கவிதை மூலம் எறும்பைப் பற்றிக் கூறப்படுவது,
   1. கூட்டுப் பொறுப்பு பற்றியதாகும்.
   2. சுறுசுறுப்பு பற்றியதாகும்.
   3. இவையனைத்தும் ஆகும்.

**✱ ஒவ்வொரு வினாக்களிலும் கோடிடப்பட்ட பகுதியின் கருத்துக்கு மிகவும் நெருங்கிய தொடர்புடைய பகுதியை தரப்பட்டுள்ள விடை களில் இருந்து தெரிந்து அதன் கீழ்க் கோடிடுங்கள்.**

3. ரவி தனது கையிற்குத் திடீரெனப் பணம் கிடைக்க, அனுபவமே இல்லாத தொழிலொன்றில் ஈடுபட்டான். சிறிது காலம் கழிய, அத்தொழிலில் நஷ்டம் ஏற்பட்டது. இதைக் கேள்விப்பட்ட ரவியின் தந்தை இதைத்தான் மண்குதிரையை நம்பி ஆற்றில் இறங்கக்கூடாது என்று கூறப்படுகிறது என்றார்.
   1. காலத்திற்கேற்ற செயல்.
   2. ஆய்ந்தோய்ந்து பாராது காரியத்தில் இறங்கக்கூடாது.
   3. பணம் கிடைத்தால் யாருக்கும் சந்தோஷம்.

4. பாடசாலை சென்ற மகள் கிடு கிடுவென வீட்டுக்கு வருவதைக் கண்ட பெற்றோர் ஆச்சரியமாகப் பார்த்தனர்.
   1. அவசரமாக
   2. கவலையுடன்
   3. பயத்துடன்

**✱ கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு கோலத்தின் தொடர்பையும் சரியாகக் காட்டும் விதியைத் தெரிந்து அதற்குரிய விடையின் கீழ்க் கோடிடுக.**

5. 6, 12, 10, 20, 18, 36, 34
   1. 2ஆல் பெருக்கப்படும், 2 கழியும்,10 கூட்டப்படும், மீண்டும் அதே நிகழும்.
   2. 2ஆல் பெருக்கப்படும், 2 கழியும், மீண்டும் அதே நிகழும்.
   3. 6 கூட்டப்படும், 2 கழியும், மீண்டும் அதே நிகழும்.

6. 2, 4, 12, 24, 32, 64
   1. 2ஆல் பெருக்கப்படும், 8 கூட்டப்படும், மீண்டும் அதே நிகழும்.
   2. 2 கூட்டப்படும், 3ஆல் பெருக்கப்படும், மீண்டும் அதே நிகழும்.
   3. 2 கூட்டப்படும், 2ஆல் பெருக்கப்படும், மீண்டும் அதே நிகழும்.

**✱ முதலில் தரப்பட்டுள்ள எண்ணில் கூறப்படும் இரகசியச் சொல்லைக்கண்டுபிடித்து அதன் கீழ்க் கோடிடுங்கள்.**

7. 32523
   1. அருயோதயம் 2. விகடகவி 3. சந்திரன்

8. 46524
   1. மணிமேகலை 2. பாண்டியன் 3. திலகவதி

**✱ கீழே தரப்பட்டுள்ள பிரசினங்களைத் தீர்க்கும்போது கிடைக்கும் விடையை தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிந்து அதன் கீழ்க் கோடிடுங்கள்.**

9. தற்போது எனது வயது எனது தங்கையின் வயதைப் போன்று மூன்று மடங் காகும். இன்னும் 6 வருடங்களின் பின் எனது வயது அவளது வயதைப் போன்று இரு மடங்காகும். தற்போது எனது வயது என்ன?
   1. 18 வருடங்கள். 2. 24 வருடங்கள். 3. 6 வருடங்கள்.

10. பண உண்டியல் ஒன்றில் 5 சதம், 10 சதம், 25 சதம் எனும் பெறுமதியுடைய மூன்று வகையான நாணயங்கள் உள்ளன. 25 சத நாணயங்கள், 5 சத நாணயங் களின் அளவில் $^1/_2$ மடங்காகும். உண்டியலில் உள்ள மொத்தப்பணம் ரூபா 4.00. அதில் 5 சத நாணயங்கள் 20 உள்ளன. எனவே 10 சத நாணயங்களின் எண்ணிக்கை எவ்வளவு?
    1. 20 2. 5 3. 10

11. குகனின் பாடசாலை அவனின் வீட்டிலிருந்து 4Km வடக்கில் அமைந்துள் ளது. கோவில் பாடசாலையிலிருந்து 3Km தூரத்தில் கிழக்குத் திசையில் அமைந்துள்ளது. குகனின் வீட்டிலிருந்து பாடசாலை ஊடாக கோவிலுக் குள்ள தூரம் எவ்வளவு?
    1. 12 Km 2. 7 Km 3. 4 Km


**✱ கீழேயுள்ள ஒவ்வொரு வினாக்களில் இருபக்கமும் சமமாக இருப் பின் (✓)அடையாளமும் சமமற்ற முறையில் இருப்பின் (x) அடை யாளமும் புள்ளிக்கோட்டின் மீது இடுக.**

12. (P$_3$ கள At$_4$M mq)= (P$_3$ கல AtHMmq) ..............

13. (GK+ Pq x 9L - xy÷Ab)= (GK+ Pq+ரL-xy÷Ab) ..........................


**✱ கீழே தரப்பட்டுள்ள உருக்களில் பொருத்தமற்ற உருவைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுங்கள்.**

14.



(1) (2) (3) (4)

15.



(1) (2) (3) (4)

**✱ A,B எனும் இரு கிராமோதயத்தில் உள்ள வீடுகளின் எண்ணிக்கை கீழே படவரைபில் தரப்பட்டுள்ளது. அதற்கமைய கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடையை புள்ளிக்கோட்டில் எழுதுக.**

| | |
|---|---|
| A கிராமோதயம் | ⌂ ⌂ ⌂ ⌂ ⌂ ⌂ |
| B கிராமோதயம் | ⌂ ⌂ ⌂ ⌂ ⌂ ⌂ ⌂(half) |


16. Bயில் உள்ள வீடுகளின் எண்ணிக்கை Aயில் உள்ள வீடுகளின் எண்ணிக்கை யைவிட 15 கூடுதலாகும். B யில் உள்ள வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவு?

.......................................................................................

17. A,B ஆகிய இரு கிராமோதயத்திலும் உள்ள வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவு?

.......................................................................................

**✱ இலக்கம் எழுதப்பட்ட சதுரமுகிகள் இரண்டு இங்கு தரப்பட்டுள் ளன. அதற்கமைய கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குவிடையளி யுங்கள்.**




அருணலு

# ஆண்டு 5இல் கல்விகற்கும் சிறார்களே!

# உங்களுக்கு ஓர் நற்செய்தி

✱ நீங்கள் கொமர்ஷல் வங்கியின் அருணலு கணக்கு ஒன்றை ஆரம்பித்து/வைத்திருந்து
✱ 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கு முன்பாக உங்கள் அருணலு கணக்கில் குறைந்தது ரூபா 5,000/–மீதி இருந்து
✱ பாடசாலை மட்டத்தில் 1ஆம், 2ஆம், 3ஆம் தரத்தில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைவீர்களாயின்

பெறுமதியான பணப்பரிசில்கள் உங்களுக்காகக் காத்திருக்கின்றன.

கொமர்ஷல் வங்கி
உங்கள் நலமே எங்கள் நோக்கம்


18.இங்கு 4வது இலக்கமுள்ள முகத்திற்கு எதிர்முகத்திலுள்ள இலக்கம் எது?

.....................

19.இங்கு 5 வது இலக்கமுள்ள முகத்திற்கு எதிர்முகத்திலுள்ள இலக்கம் எது?

.....................

**✱ கீழே தரப்பட்டுள்ள உருக்களைப் பார்த்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளியுங்கள்.**




20.முழு உருவில் $^{2}/_{5}$ பங்கு நிழற்றப்பட்டுள்ள உருவைக் காட்டும் விடையைக் கண்டுபிடித்து அதன் கீழ்க் கோடிடுங்கள்

(1) A, B (2) A, D (3) A, E

21. முழு உருவில் $^{3}/_{4}$ பங்கு நிழற்றப்படாத உருவைக் காட்டும் விடையைக் கண்டு பிடித்து அதன் கீழ்க் கோடிடுங்கள்.

(1) D, B (2) A, E (3) A, D

22. C உருவில் உள்ள கட்டங்களின் எண்ணிக்கையை ஒவ்வொன்றாக எண்ணாமல் கண்டுபிடிப்பதற்கு பயன்படுத்தக்கூடிய இலகு முறையைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுங்கள்.

(1) 5+5 x 2 (2) 5 x 5 (3) 5 x 2 x 4

**✱ கீழே தரப்பட்டுள்ள விபரத்தை வாசியுங்கள். கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடையை தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிந்து அதன் கீழ்க் கோடிடுங்கள்.**

இல்லங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியில் மஞ்சள், சிவப்பு, நீலம், பச்சை எனும் இல்லங்கள் ஒன்றுக்கொன்று தோற்றதும், வெற்றி யீட்டியதும் ஐந்து புள்ளிகள் வித்தியாசத்தில் ஆகும். போட்டியில் நான்காவது இடத்தை மஞ்சள் இல்லம் பெற்றது. இரண்டாவது இடத்தைப் பெற்ற பச்சை இல்லம் 235 புள்ளிகளைப் பெற்றுக்கொண்டது.

23.முதலாம் இடத்தை நீல இல்லம் பெற்றுக்கொண்டது. அவ்வாறாயின் அவ்வில்லம் பெற்றுக்கொண்ட புள்ளிகள் எவ்வளவாக இருக்கும்?

(1) 240 (2) 235 (3) 245

24.மூன்றாவது இடத்தை சுவீகரித்துக்கொண்ட சிவப்பு இல்லம், முதலாவது இடத்தை அடைந்த நீல இல்லத்தை விட எத்தனை புள்ளிகள் குறைவாக எடுத்தது?

(1) 10 (2) 5 (3) 15

**✱ சரியான விடையைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுங்கள்.**

25.இன்று செவ்வாய்க்கிழமையாகும். நேற்று 15ஆம் திகதி. தனது பிறந்ததினம் நேற்று இருந்ததாக கடந்த செவ்வாய்க்கிழமை ராகவன் சொன்னான். அவ்வாறாயின் ராகவனின் பிறந்தநாளும், திகதியும் என்ன?

(1) 8ஆம் திகதி திங்கட்கிழமை (2) 9ஆம் திகதி செவ்வாய்க்கிழமை
(3) 15ஆம் திகதி திங்கட்கிழமை

26.எனது நண்பர்களும் நானும் விடுமுறை காலத்தில் வாசிப்பதற்கு நாவல் புத்தகங்களைப் பரிமாறிக்கொண்டோம். நாங்கள் எல்லோரும் சமஅளவு புத்தகங்கள் வாசித்தோம். அவ்வாறு நாங்கள் அனைவரும் வாசித்த மொத்த புத்தகங்களின் அளவு 20 ஆகும். அவ்வாறாயின் எனக்கு நண்பர்கள் எத்தனை பேர் இருந்தார்கள்?

(1) 2 ஆகும். (2) 3 ஆகும். (3) 4 ஆகும்

**✱ கீழே காணப்படும் வரைபில் ஐந்து மாணவர்கள் 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் ஓடிமுடிக்க செலவிட்ட நேரம் காட்டப்பட்டுள்ளது. அதன்படி வினவப்பட்டுள்ள வினாக்களுக்கு உரிய விடையைத் தெரிந்து அதன் கீழ்க் கீறிடுக.**




27. இப்போட்டியில் நேரம் கணிக்கப்பட்டது.

(1)நிமிடத்தில் (2)செக்கனில் (3)மணித்தியாலத்தில் (4) நாட்களில்

28. இப்போட்டியில் வெற்றிபெற்றவர்,

(1) சுனில் (2) கமல் (3) அனில் (4) ரவி

29. ஒரே சமமான நேரத்தில் ஓடிமுடித்த போட்டியாளர்கள் இருவர்.

(1) நசீர், ரவி (2) சுனில், அனில்
(3) ரவி, கமல் (4) சுனில், நசீர்

30. போட்டியாளர்கள் நால்வரிலும் மிக மெதுவாக ஓடியவர்,

(1) ரவி (2) அனில் (3) சுனில் (4) கமல்

**✱ கீழே காணப்படும் வினாக்களில் இடப்பக்கத்தில் உள்ள மூன்று சொற்களுடனும் பொருந்தும் சொல்லை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிந்து அதன் கீழ்க் கீறிடுக.**

31. நாய், எருது, குதிரை .............. (சேவல், பூனை, கிளி, தாரா)

32. புதன், வெள்ளி, செவ்வாய் ................( புவி, சூரியன், சந்திரன், நட்சத்திரம்)

**✱ கீழேயுள்ள ஒவ்வொரு வினாவிலும் காணப்படும் வசனங்களைச் சரியான ஒழுங்கில் அமைத்தால் கதை ஒன்று உருவாகும். அச்சரியான ஒழுங்கைப் பின்வரும் நான்கு விடைகளில் இருந்து தெரிந்து அதன் கீழ்க் கீறிடுக.**

33.1. காகம் அதைக்கண்டது.
2. அது அதைத் திருட யன்னலால் நுழைந்து சமயலறைக்குச் சென்றது.
3. அதன்பின் காகம் பாண் துண்டைக் கௌவிக் கொண்டே மரத்திற்குப் பறந்துபோனது.
4. ஒரு வீட்டின் சமயலறையில் பாண் துண்டு ஒன்று இருந்தது.
5. அதற்கு அதைத் திருட எண்ணம் வந்தது.


(1) 4, 1, 3, 5, 2 (2) 3, 1, 5, 2, 4
(3) 3, 5,1, 4, 2 (4) 4, 1, 5, 2, 3

34.1. எல்லா வயல் நிலங்களும் அழிவுக்குள்ளாகின
2. கடும் வரட்சியின் காரணமாக
3. விவசாயிகளுக்கு வருமானம் ஒன்றும் இல்லாததனால்
4. கடந்த ஆண்டு நிலவிய
5. வங்கிக் கடனைச் செலுத்தமுடியாது போனது


(1) 5, 1, 4, 3, 2 (2) 3, 1, 2, 5, 4
(3) 1, 2, 3, 4, 5 (4) 4, 2, 1, 3, 5

**✱ கீழே காணப்படும் வினாக்களில் முதலாம், இரண்டாம் உருக்களுக் கிடையே ஏதோவொரு தொடர்புண்டு. அதன்படி மூன்றாம் உருவுடன் தொடர்புடைய உருவை தரப்பட்டுள்ள A, B, C, D என்னும் நான்கு உருக்களில் இருந்து தெரிந்து அதன் கீழ்க் கீறிடுக.**

35.




36.





**✱ கீழே காணப்படும் ஒவ்வொரு வரிசையிலும் எண்கள் ஓர் ஒழுங்கில் எழுதப்பட்டுள்ளன. அந்த ஒழுங்குமுறையைத் தெரிந்து பொருத்தமான எண்ணை வெற்றுக் கூண்டினுள் எழுதுக.**

37. $^{1}/_{4}$, $^{1}/_{2}$, $^{3}/_{4}$, ☐ $1^{1}/_{4}$

38. 0.1, 0.3, 0.5, 0.7, 0.9, ☐

39.




இந்த செவ்வக வடிவ காணியின் நீளம் அகலத்தின் மூன்று மடங்காகும். அதன் நீளம் 90m எனின்,காணியைச் சுற்றி மூன்று நிரைக்கு கம்பி அடிக்கத் தேவையான கம்பியின் நீளம் யாது?

40. ஒரு பண்ணையில் ஆடுகளும் கோழிகளுமாக 10 பிராணிகள் உள்ளன. அவற்றின் கால்களின் எண்ணிக்கை 34 எனின், அங்கு நின்ற ஆடுகள் எத்தனை? கோழிகள் எத்தனை?

ஆடுகள் ......................... கோழிகள் ..............

விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

Acc.திரு.பாலவாசன்
Log. திரு.சயந்தன்
H/C திரு.பத்மராஜா
HN.திரு.N.T.தரன்
P.Sci. திரு.ஸ்ரீரங்கநாத்
Drama திரு.மதி
Eco. திரு.உதயன்
B.St.. திரு.முரளி
Chri. திரு.வசந்தன்
Geo. திரு.பாபு
Hst. திரு.பத்மன்
Tam. திரு.குழந்தை(பிரிவுI)
திரு.லிங்கம்(பிரிவுII)

A/L Day Class கலை, வர்த்தகம் [பிரிவு I]
ஆரம்பமாகின்றது.
அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.

வினாத்தாள் II நேரம் -1மணி 15 நிமிடங்கள்

**I.பின்வரும் பகுதியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக**

நான் பாரமே இல்லாதவன். சிறுவர்கள் எனக்கு நல்ல நண்பர்கள். நான் வானத்திலே கரணமடித்த படி பறப்பேன். எனது ஆடை பல நிறங்களுடையது.

1. மேலே தரப்பட்ட விவரணம் எதனைப் பற்றியதாகும்?
.................................................................

**அடைப்புக்குள் தரப்படும் சொற்களிலிருந்து**

2. பெயர்ச் சொற்கள் இரண்டின் கீழ் கீறிடுக.
(நான், கரணமடித்த, பறப்பேன், ஆடை)
3. வினைச் சொற்கள் இரண்டின் கீழ்க் கோடிடுக.
(சிறுவர்கள், எனது, பறப்பேன், உடையது)
4. பெயர் அடைமொழிகள் இரண்டின் கீழ்க் கோடிடுக.
(நல்ல, நண்பர்கள், நீல, பல)
5. மேலே பந்தியிலிருந்து பெயராகவும் வினையாகவும் வரக்கூடிய சொல் ஒன்று எழுதுக..........................................
6. பின்வரும் சொற்கள் ஒவ்வொன்றுக்கும் எதிர்ச் சொல் தருக.
(அ)இல்லாதவன் ........................ (ஆ).நான் ........................
(இ)நண்பர்கள் ........................ (ஈ).நல்ல ........................

**கீழே காணப்படும் சொற்களுக்குரிய எதிர்க் கருத்துச் சொற்களை எழுதுக.**

7.மெதுவாக.................. 8.மேற்கு..........................

**கீழே காணப்படும் சொற்களுக்குரிய ஒத்த கருத்துச் சொற்களை எழுதுக.**

9.பறவைகள்......................... 10.வயோதிபர்......................


**பின்வரும் சொற்களுக்குப் பொருத்தமான பன்மைச் சொற்களை எழுதுக.**

11.கோளம் ......................... 12.கவிதை .........................


**II.பின்வரும் பாடல்கள் எதைப் பற்றிக் கூறுகின்றன என எழுதுக.**

1. வானமீ தெழுவேன்- அங்கே
வட்டம் சுற்றிடுவேன்
கான மலையெல்லாம் - யானோர்
கணத்தில் தாண்டிடுவேன். ..............................
2. மலை மேலே ஏறி நீ
வருவாய் என்றே எண்ணினோம்
மல்லிகைப் பூக் கொண்டு நீ
தருவாய் என்றும் பாடினோம். ..............................
3. கல்லும் மலையும் குதித்து வந்தேன்-பெருங்
காடும் செடியுங் கடந்து வந்தேன். ..............................
4. அன்பை வளர்க்க வேண்டும் கிளியே
அறிவைப் பெருக்க வேண்டும்
உன்போற் பிறரை எண்ணி-நல்ல
உதவி புரிய வேண்டும். ..............................

**III.பின்வரும் படங்களை அவதானித்து விடை தருக**

1. 

ஒரே அளவான இரு பொருட்களைத் தூக்கும்போது எதில் உள்ள பொருள் தூக்குபவரால் பாரமற்றதாக உணரப்படும்? ..............................

2. 

எந்த அமைப்பில் குறைந்த விசையுடன் பொருள் நகர்த்த முடியும்?..............................

**IV.பின்வரும் கடிதத்தை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடைகளை எழுதுங்கள்.**

மாணவர் விடுதி,
நாவலர் கல்லூரி,
யாழ்ப்பாணம்.
23.09.2004.

அன்புள்ள தாத்தா,

வணக்கம். நான் நலமாக உள்ளேன். நீங்களும் நலமாக இருக்க இறைவனை வேண்டுகிறேன். தாங்கள் செப்ரெம்பர் மாதம் 9ஆம் திகதி எழுதிய கடிதம் இன்றுதான் கிடைத்தது. நீங்கள் கொழும்பில் இருந்து வரும்போது புதிய வருடத்திற்கான டயறி ஒன்று கொண்டுவரவும். பாட்டியையும் கேட்டதாகச் சொல்லவும்.


இப்படிக்கு,
தங்கள் பாசமிகு பேரன்.
உ. அட்சயன்.

1. இக்கடிதம் யாருக்கு எழுதப்பட்டுள்ளது? ..............................
2. இக்கடிதம் எங்கிருந்து எழுதப்பட்டுள்ளது? ..............................
3. இக்கடிதம் எத்தனையாம் திகதி எழுதப்பட்டுள்ளது? ..............................
4. அட்சயனுக்கு யாரிடம் இருந்து எத்தனையாம் திகதி கடிதம் வந்துள்ளது?
..............................நாள்.....மாதம்......ஆண்டு
5. கடிதம் எழுதுபவருக்கும் கடிதத்தைப் பெற்றுக்கொள்பவருக்கும் இடையேயான உறவு யாது? ..............................
6.கடிதம் எழுதுபவர் என்ன கேட்டு கடிதம் எழுதியுள்ளார்?..............................
7.அடுத்த வருடம் என்று எந்த வருடத்தை கடிதம் எழுதுபவர் சுட்டிக்காட்டுகிறார்? ..............................

**V.கீழே தரப்பட்டுள்ள விவரங்களை கவனமாக வாசித்து நேர அட்டவணையைப் பூர்த்தி செய்க.**

| பல் வைத்தியர் பார்வையிடும் நேரம் | | |
|---|---|---|
| தொடக்கம் | வரை | |
| 1. மு.ப.9.15 | ................. | சிறுவர்கள்(75 நிமிடங்கள்) |
| 2. ............... | மு.ப.11.15 | பெண்கள்(45 நிமிடங்கள்) |
| 3. பி.ப.2.15 | ................. | பெரியவர்கள்(90 நிமிடங்கள்) |


**VI.கீழேயுள்ள வினாக்களுக்கான விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக. இத்திண்மத்தைக் கொண்டு விடை தருக.**




1.இத்திண்மத்தின் பெயரை எழுதுக?..............................
2.இத்திண்மத்தின் விளிம்புகளின் எண்ணிக்கை?..............
3.இத்திண்மத்தின் உச்சிகளின் எண்ணிக்கை?..............
4.இத்திண்மத்தின் முகங்களின் எண்ணிக்கை?..............

**பின்வரும் பிரசினங்களைத் தீர்க்க.**

5. 47,000இற்கு முன்னுள்ள எண்ணையும் பின்னுள்ள எண்ணையும் எழுதுக.
முன்னுள்ள எண்.................... பின்னுள்ள எண்..................
6. XIX இந்த உரோமன் இலக்கத்திற்கு முன்னுள்ள எண்ணையும் பின்னுள்ள எண்ணையும் உரோமன் இலக்கத்தில் எழுதுக.
முன்னுள்ள எண்........................ பின்னுள்ள எண்..................
7. 6,12,24 .... 96 இந்த எண்கோலத்தில் வெற்றுக்கூண்டுக்குப் பொருத்தமான எண்ணை எழுதுக. ..............................
8. 20.00 மணித்தியாலத்தை தந்துள்ள கடிகார முகத்தில் வரைந்து காட்டுக.

9. 


இக் காட்போட் அட்டையின் சுற்றளவு யாது? ..............................




**VII. கீழே காணப்படும் ஒவ்வொரு வினாவிற்குமுரிய விடையைத் தந்துள்ள நான்கு விடைகளில் இருந்து தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.**

1. அசைவற்ற நீர் நிலையிலுள்ள சிறிய ஒரு கல்லை எறிந்தால் நீரில் தோன்றும் கோலம் யாது?

(1) (2) (3) (4)



2.இலங்கையின் அரச இலச்சினையில் காண முடியாதது?
1.சூரியன் 2.நட்சத்திரம் 3.சந்திரன் 4.நெற்கதிர்
3.இலங்கையில் காணப்படும் ஒரு நீர்வீழ்ச்சி அல்லாதது?
1.துன்ஹிந்த 2.லக்ஷபான 3.பம்பரகந்த 4.விக்டோரியா
4.பருக மிக உகந்த நீராக இருப்பது
1.வடிகட்டப்பட்டநீர் 2.குளிர்சாதனப் பெட்டியில் வைத்து நன்கு குளிரூட்டப் பட்ட நீர்
3.உப்புக் கலந்தநீர் 4.கொதித்தாறிய நீர்
5.வாகனங்களுக்கு எரிபொருளாகப் பயன்படுத்தப்படாதது
1.தேங்காயெண்ணெய் 2. டீசல்
3.மண்ணெண்ணெய் 4.பெற்றோல்
6.அசுத்த நீரின்·மூலம் பரவும் ஒரு நோயாவது
1.டெங்குக் காய்ச்சல் 2.எயிட்ஸ் 3.வயிற்றோட்டம் 4.புற்றுநோய்

**VIII. தமிழ் மக்களின் கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் பெரும்பாலான விழாக்களின்போது பின்வரும் விளையாட்டுகள் தொடர்ந்து விளையாடப்பட்டு வருகின்றன. இது அவர்களது பாரம்பரிய வழக்கமாக உள்ளது. பின்வரும் செயல்கள் மூலம் பாவனைசெய்து ஆடும் அவ் விளையாட்டுகளை அம்புக்குறி மூலம் தொடர்புபடுத்துக.**

| | |
|---|---|
| 1. கைகளைத் தட்டிக்கொண்டு பாடி ஆடுதல் | கோலாட்டம் |
| 2. தலையில் செம்புகளை வைத்து ஆடுதல் | கும்மி |
| 3. இரு தடிகளை தட்டியவாறு ஆடுதல் | காவடி |
| 4. தலையில் வில் போன்ற ஒரு மரக் குற்றியை அலங்கரித்து வைத்தாடுதல் | கரகம் |

IX. **கடந்த மாதம் அமலனின் தாயும் தந்தையும் தமது வீட்டுக்குப் பொருட்கள் வாங்கி வந்தபோது கிடைத்த இரண்டு பற்றுச் சீட்டுகளிலிருந்து பெற்ற விபரங்கள் அடுத்த பக்கத்தில் காட்டப்பட்டுள்ளன. அவற்றை வாசித்து அடுத்து வரும் வினாக்களுக்கு விடை தருக.**

UNIT
EVER SPECIAL
ஒவ்வொரு கணனிகளும் சீரிய தரப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டவை
Aaag Dii Offer
Latest PIV கணனிக் (3 வருட முழு உத்தரவாதம்) மற்றும் உதிரிகளும் கொழும்பை ஒத்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
Printer/Scanner/Table (large)/ High Quality Woofer/ 17" Dell Flat monitor உடன் UPS, Screen Filter, CD Cleaner, Dust cover & etc Totally Free
தாயக மின்சார நிலைமைகளுக்கேற்ப வடிவமைக்கப்பட்டவை
347, K.K.S. Road, Manohara Theatre Junction, Jaffna.
T.P: 021-4590720

க.மு. சேகர் அன்சன்ஸ்
மதுரங்குளி

திரு. இராசரத்தினம் 2005.07.10

| அளவு | விபரம் | காசு | |
|---|---|---|---|
| | | ரூ. | ச. |
| 750 கிராம் | மாசி | 250 | 00 |
| 3 லீற் 500 மி.லீ | தே.எண்ணெய் | 175 | 00 |
| 4 போத்தல் | வினாகிரி | 120 | 00 |
| 650மி.லீ | ம.எண்ணெய் | 6 | 50 |
| 2கி.கி.250கிராம் | பருப்பு | 99 | 00 |
| 5 பைக்கற் | பிஸ்கட் | 80 | 00 |
| | | 730 | 50 |

நாதன் ரெக்ஸ்ரைல்ஸ்
பிரதான வீதி, அநுராதபுரம்

திருமதி லீலா இராசரத்தினம் 2005.07.10

| அளவு | விபரம் | காசு | |
|---|---|---|---|
| | | ரூ. | ச. |
| 1 m 50 cm | நிறபொப்லின் | 63 | 00 |
| 02 | படுக்கை விரிப்பு | 318 | 00 |
| 06 | சேர்ட்டுகள் | 1296 | 00 |
| 4 m 50cm | சீத்தை | 252 | 00 |
| 75cm | றேந்தை | 12 | 00 |
| 1m 50 cm | இலாஸ்ரிக்நாடா | 16 | 50 |
| | | 1,957 | 50 |

1)பொருட்களை வாங்கி வருவதற்காக அம்மா செலவு செய்த மொத்தப் பணம் எவ்வளவு என்பதைச் சொற்களில் எழுதுக.

.....................................................................................

2)பொருட்களை வாங்கி வருவதற்காக அப்பாவை விட அம்மா எவ்வளவு பணம் செலவு செய்துள்ளார்? ரூபா.........சதம்.......

3) 1லீற்றர் தேங்காய் எண்ணெயின் விலை எவ்வளவு? ரூபா.........சதம்.......

4) ஆறு பிஸ்கட் பைக்கற்றுகளை விலைக்கு வாங்க எவ்வளவு பணம் செலவு செய்ய வேண்டும்? ரூபா.........சதம்........

5) 3போத்தல் மண்ணெண்ணெய் வாங்கப்பட்டிருந்தால் எவ்வளவு பணம் செலவாகியிருக்கும்? ரூபா.........சதம்.......

6) 500 கிராம் பருப்புக்கு எவ்வளவு பணம் செலவாகும்? ரூபா.........சதம்.......

7) அம்மா 5 மீற்றர் நிறப் பொப்லின் விலைக்கு வாங்கினாரெனில் அதற்காக செலுத்த வேண்டிய பணம் எவ்வளவு? ரூபா.........சதம்.......

8)ஒன்றரைப் போத்தல் வினாகிரியும், 1 கிலோகிராம் 500 கிராம் பருப்பும் வாங்கிட எவ்வளவு பணம் தேவைப்படும்? ரூபா.........சதம்.......

9)படுக்கை விரிப்பு ஒன்றும், இரண்டு சேர்ட்டுகளும், 1 மீற்றர் சீத்தையும் விலைக்கு வாங்கும்போது எவ்வளவு பணம் செலுத்த வேண்டும்? ரூபா.........சதம்.......

10)2 மீற்றர் றேந்தையும், 2 மீற்றர் 50 செ.மீற்றர் இலாஸ்ரிக் நாடாவும் விலைக்கு வாங்கும்போது 100 ரூபா தாளொன்றைக் கொடுத்தால் மிகுதிப் பணமாக எவ்வளவு கிடைக்கும்? ரூபா.........சதம்.......

11)1லீற்றர் தேங்காயெண்ணெயின் விலை 10 ரூபாவினால் குறையுமாயின் 6 லீற்றர் தே.எண்ணெய் வாங்க எவ்வளவு பணம் தேவை? ரூபா.........சதம்.......

12)படுக்கை விரிப்பு ஒன்று, அதன் விலையின் 15 ரூபாவினால் கூடினால் ஆறு படுக்கை விரிப்புகள் வாங்கிடத் தேவைப்படும் பணம் எவ்வளவு?ரூபா.........சதம்.......

13)அடுத்த மாதத்தில் நாதன் ரெக்ஸ்ரைல்ஸில் விலைக்கு வாங்கிய பொருட்களுக்காக அம்மா ரூபா 2,525 கொடுக்கவேண்டியிருந்தது. அவர் அதில் 4/5 பங்கை மட்டும் செலுத்தினார். அப்படியானால் அம்மாவினால் செலுத்தப்படாத பணம் எவ்வளவு? ரூபா.........சதம்.......

14)அம்மா அடுத்தமாதத்தில் விலைக்கு வாங்கிய பொருட்களின் பெறுமதி ரூ.4,240 ஆகும். அதனை 8 மாதங்களில் தவணை முறையில் கட்டிட அப்பா இணங்கினார். முதல் இரண்டு மாதங்களிலும் அப்பா செலுத்தவேண்டிய பணத்தின் கூட்டுத்தொகை எவ்வளவு? ரூபா.........சதம்.......

**கீழுள்ள விளையாட்டுப் படங்களை இனங்கண்டு அப்படங்களின் கீழ் அவ்விளையாட்டுக்களின் பெயர்களை எழுதுக.**


(1)................


(2)......................


(3)................


(4) ................


(5) ................

**XI பின்வருவன சரியாயின் ( ✓ ) எனவும் பிழையாயின் (X) எனவும் அடைப்புக்குள் அடையாளமிடுக.**

1. பழுதடைந்த மீன் ஒன்றின் பூக்களில் சிவப்பு நிறம் அதிகரித்துக் காணப்படும். (...........)
2. "குளிரேற்றியில் வைத்தல்" உணவைப் பாதுகாக்கும் முறைகளில் ஒன்றாகும். (...........)
3. மயில் ஒரு முலையூட்டியாகும். (...........)
4. புளிப்பான பழவகைகளில் விற்றமின் C அதிகம் உண்டு. (...........)
5. ஏற்றி இறக்கும்போது உணவுப் பொருட்கள் வீணாவதற்கு இடமுண்டு. (...........)
6. அலரி இரவில் மலரும் பூ ஆகும். (...........)
7. கரப்பந்து விளையாடுவதற்குத் தேவையான இடம், கிரிக்கெட் விளையாடுவதற்குத் தேவையான இடத்தை விட அதிகமானதாகும். (...........)
8. மீன் முள்ளுத் தையல் ஓர் அலங்காரத் தையலாகும். (...........)
9. தொலைக்காட்சியானது கண்கள், காதுகள் ஊடாகத் தகவல்களைப் பெற்றுக் கொடுக்கும் ஓர் ஊடகமாகும். (...........)
10. நிறச்சாயத் துளிகளை ஒவ்வொன்றாகக் கடதாசியின் மேல் விழச் செய்து வாயால் ஊதுவதன் மூலம் அலங்காரக் கோலங்கள் ஆக்கமுடியும். (...........)

**XII இப்படத்தைப் பார்த்து மூன்று வாக்கியங்கள் எழுதுக.**



1)..........................................................................................

2)..........................................................................................

3)..........................................................................................

**XIII சில தாவரங்களின் படங்கள் தரப்பட்டுள்ளன. அவை எந்தத் தாவரங்கள் என அறிந்து சரியான விடையின் கீழ் கோடிடுக.**

(1) 
1. பசளி
2. பொன்னாங்கன்னி
3. குப்பை மேனி

(2) 
1. தொட்டாச் சிணுங்கி
2. குன்றிமணி
3. குறிஞ்சா

(3) 
1. துளசி
2. பன்புல்
3. ஆடாதோர்டை

(4) 
1. ஆமணக்கு
2. தனக்கு
3. கற்றாளை

**XIV *'நான் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தால்'* என்னும் தலைப்பின் கீழ் ஆறு வாக்கியங்கள் எழுதுக. ஒரு வாக்கியத்தில் நான்கு சொற்களுக்கு குறையாமல் இருப்பதோடு எழுவாய் பயனிலைகள் சரியாக அமைதல் வேண்டும்.**

(1)..........................................................................................

(2)..........................................................................................

(3)..........................................................................................

(4)..........................................................................................

(5)..........................................................................................

(6)..........................................................................................

தயாரிப்பு:-
வேலுப்பிள்ளை அம்பலவாணி
ஆசிரியர்,
யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலை

விடை நாளைய பத்திரிகையில்

Confirm Your Computer Knowledge !

Are You Sure You Have the enough Computer Knowledge?

இல்லையா? கவலையை விடுங்கள், இன்றே இணையுங்கள் எம்முடன்...

IMIS - UK, ICM - UK approved Training Center



50% OFF

GLOBAL VILLAGE
COMPUTER EDUCATION
( The Leading INDIAN IT College )

Free Books

புதிய பிரிவுகள் ஆரம்பமாகிவிட்டன

10:00 a.m, 3:00 p.m, 7:00 p.m

விபரங்களுக்கும் விசாரணைகளுக்கும்

உடுவில் வீதி, மருதனார்மடம், யாழ்ப்பாணம்.

Phone: 021-4590222 E-Mail: etouch@wow.lk Web: www.globalvillage-lanka.com

Jaffna District Franchise:

eTouch COMPUTER SYSTEM